Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 243 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆடி 11, சனி 27.07.2013



தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

30°c 28°c

## மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை பெரும் பின்னடைவு

### பொதுநலவாய மாநாட்டில் இதுகுறித்து பிரிட்டன் அழுத்தங்களைக் கொடுக்கும்

லண்டன், ஜூலை 27
போருக்குப் பின்னரான நல்லிணக்கத்திலோ பொறுப்புக் கூறலோ இலங்கையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. மனித உரிமைகள் நிலவரமும் பின்னடைவான நிலைமையிலேயே உள்ளது.இது தொடர்பில் அழுத்தங்கள் கொடுப்பதற்கு பொதுநலவாய மாநாட்டை பிரிட்டன் பயன்படுத்திக்கொள்ளும் என்று பிரிட்டன் அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.
'பிரதமர், கமரொனும் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக்கும், கள நிலைமைகளை கவனத்தில் கொண்டு எதிர்வரும் நவம்பரில் இடம்பெறும் பொதுநலவாய மாநாட்டை இலங்கைக்கு

தொடர்ச்சி: பக்கம் 21

# தமிழ் வாக்குமூலம் கட்டாயமானதல்ல

### சட்டத்திலும் அப்படி இல்லை என்கிறார் பொலிஸ் அத்தியட்சகர்

யாழ்ப்பாணம்,ஜூலை 27
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழி, நீதிமன்ற மொழிஎன்பனதமிழாக உள்ளது. ஆயினும் இந்தப் பிரதேசத்துக்கு உரிய ஒருவர் தொடர்பான முறைப்பாட்டையோஅல்லதுவாக்குமூலத்தையோ தமிழில் பெறவேண்டிய அவசியம் கிடையாது. இலங்கைச்சட்டத்திலும் அவ்வாறு இல்லை என்று காங்கேசன்துறை பிரிவு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஏக்க நாயக்க தெரிவித்தார்.
யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
போக்குவரத்து விதிமுறையை மீறினார் என்று குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவருக்கு யாழ். போக்குவரத்துப் பொலிஸார் சிங்கள மொழியில் எழுதப்பட்ட சிட்டை ஒன்றை வழங்கியுள்ளனர்.
அது சிங்கள மொழியில் இருந்தமையால் விளங்கிக்கொள்ளமுடியவில்லை எனக்கூறி அவர் அதனை ஏற்க மறுத்துவிட்டார். இதனால் அவருக்கு எதிராகப் பொலிஸார் யாழ். நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர்.
குறித்த நபர் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்தவர் அவர் மீதான குற்றச்சாட்டைப் புரிந்து கொள்ளும் விதத்தில் தமிழ் மொழியில் எழுதலாம். அல்லது அனைவருக்கும் பொதுவான ஆங்கில மொழியில் எழுதலாம் என இதில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் பொலிஸ் அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டினர்.
இதற்குப் பதிலளித்த காங்கேசன்துறைசிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏக்கநாயக்க, குற்றம் சுமத்தப்பட்டவரின் மொழியில் தான் குற்றச்சாட்டு எழுத வேண்டும் என்றில்லை. அவ்வாறு இலங்கைச் சட்டத்திலும் இல்லை. பொலிஸார்சிங்களமொழியில் தான் அதுபோன்ற முறைப்பாடுகளை எழுதுவர் - என்றார்.
இவரின் கருத்துத் தொடர்பில் சட்டத்தரணி கு.குருபரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,
இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 16 ஆவது திருத்தத்தின் 22 ஆம், 23 ஆம், 24 ஆம் பிரிவுகளின் படி வடக்கு - கிழக்கில் நிர்வாக மொழி, மேல் நீதிமன்றம் தவிர்ந்த நீதிமன்ற மொழி தமிழ் மொழியே.
இந்தச் சட்டத்தின்படி இங்கு பொது நிறுவனங்கள் தமிழிலேயே நிர்வாகம் நடத்த வேண்டும்.
அதன்படி இங்கு ஒருவரிடம் வாக்குமூலம் பெறுவது, இலங்குள்ளவர் மீது குற்றம் சுமத்தப்படின் அதுதொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்வது, அவருக்கு எதிரானது தொடர்பான குற்றச்சாட்டுப் பிரதி, சிட்டை வழங்குவது அனைத்தும் தமிழ்மொழியிலேயே இருத்தல் வேண்டும் - என்றார். (த-4)

## நேற்றும் ஒரு கட்சி வேட்பு மனு

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ்.மாவட்டத்தில் நேற்றும் அரசியல் கட்சி ஒன்று வேட்பு மனுத் தாக்கல் செய்ததுடன் முல்லைத்தீவு மாவட்டத்திலும் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
வவுனியா மாவட்டத்தில் சுயேச்சைக்குழு ஒன்று தேர்தலில் போட்டியிடுவதற்குக் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.
வடமாகாண சபைக்கான வேட்பு மனுத் தாக்கல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமானது.

தொடர்ச்சி: பக்கம் 21

**இந்தியா**



தி.மு.கவை அழிப்பது ஸ்டாலினே — பக். 06

**உலகம்**



இத்தாலியில் மாபியா வேட்டை — பக். 07

**விளையாட்டு**



தவான் அதிரடிச் சதம் சிதறியது சிம்பாப்வே — பக். 23

## யாழ்ப்பாணத்தில் பிளாஸ்ரிக் வாக்குப்பெட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை 27
எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலின் போது யாழ். மாவட்டத்தில், யாழ். நகரின் 43 வாக்களிப்பு நிலையங்களில் முதன்முறையாகபிளாஸ்ரிக் வாக்குப்பெட்டிகள் பயன்படுத்தப்படவுள்ளன .
வடமாகாண சபைக்கான தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன.
தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளில் யாழ். மாவட்ட தேர்தல்கள் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.
இதற்காக மரத்திலான வாக்குப் பெட்டிகள் தூசு தட்டப்பட்டுத் தயாராக்கப்படுத்தப்படுகின்றன.
இந்த முறைத் தேர்தலின்போது முதன்முறையாக 'பிளாஸ்ரிக்' வாக்குப்பெட்டிகளும் பயன்படுத்தப்படவுள்ளன. இவை யாழ். நகரின் 43 வாக்களிப்பு நிலையங்களில் மட்டும் பயன்படுத்தப்படவுள்ளன.
ஏனைய வாக்களிப்பு நிலையங்களில் வழமை போன்று மரப்பெட்டிகளே பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5-21)

## ஆஸி. செல்ல முயன்ற 73 பேர் மீட்பு

கொழும்பு,ஜூலை 27
ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாகச் சென்றுக் கொண்டிருந்தபோது படகு பழுதடைந்ததில் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த 73 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என இலங்கைக் கடற்படையினர் அறிவித்துள்ளனர்.
இவர்கள், காலி துறைமுகத்துக்கு நேற்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் அழைத்துவரப்பட்டதாகவும் மேலதிக விசாரணைகளுக்காகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர். (த-5)

## இந்தியாவின் விட்டுக் கொடுப்பு இலங்கைத் தமிழருக்கே பாதிப்பு

### புதிய தூதுவரிடம் எடுத்துரைத்தார் மனோ

கொழும்பு, ஜூலை 27
இந்திய அரசு தனது நாட்டின் தென்பகுதியில் - குறிப்பாக தமிழகத்தில் - அமைதி நிலவவேண்டும் என்பதற்காக இலங்கைக்குப் பல விட்டுக்கொடுப்புக்களைச் செய்துள்ளது. இந்தியாவின் இந்தக் கொள்கை தமிழ் மக்களை அரசியல் ரீதியாகப் பலவீனப்படுத்தியுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், புதிய இந்தியத் தூதுவருக்கு எடுத்துரைத்துள்ளார்.
இந்தியாவின் புதிய தூதுவர் வை.கே. சின்ஹாவை, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் நேற்று வெள்ளிக்கிழமை கலந்துரையாடினார்.
இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ



கணேசன் தெரிவித்ததாவது:
மலையக மக்களை பலவீனப்படுத்தவும், இலங்கையின் போர் நடவடிக்கைகளுக்கு இந்திய அரசு அளித்த உதவிகள் மூலம் பெற்ற வெற்றியை முழுநாட்டையும் சிங்கள பௌத்த மயமாக்கவும் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தை இலங்கை அரசு பயன்படுத்தி வருகின்றது.
இலங்கை அரசியல் அமைப்பில் இருக்கின்ற ஒரே ஒரு

தொடர்ச்சி: பக்கம் 21

## காணாமற்போனோர் குறித்து ஆராய்வதற்கு ஆணைக்குழு

### அமைக்கிறார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு,ஜூலை 27
ஐ.நா. நிபுணர் குழு, பொது நலவாய மாநாடு ஆகிய வற்றால் இலங்கைக்கு ஏற்படவுள்ள அழுத்தங்களிலிருந்து தப்புவதற்காக காணாமற்போனோர் விவகாரம் பற்றிஆராய்வதற்குஆணைக் குழு ஒன்றை அமைக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.
இலங்கையில் கடந்த 30 ஆண்டுகளில் காணாமற்போனோர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஆணைக்குழுவை நியமிப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு ஜனாதிபதி தனது செயலாளர் லலித் வீரதுங்கவுக்கு உத்தரவிட்டுள்ளார்.
இலங்கையில் வலுக் கட்டாயமாகக் காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் உடன் கண்டுபிடிக்கப்பட வேண்டும் அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பது

தொடர்ச்சி: பக்கம் 21

## ஈழத் தமிழரின் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தம் தீர்வாகாது

### பொதுவாக்கெடுப்பே தேவை என்கிறார் கருணாநிதி

சென்னை,ஜூலை 27
13 ஆவது திருத்தம் ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாகாது என்று தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக கருத்து தெரிவித்த அவர், ஈழப்பிரச்சினைக்கு ஈழத்தமிழர்களிடையே பொதுவாக்கெடுப்பு நடத்தி தீர்வு காண்பதே அவர்களது நலனுக்கு உகந்தது. பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பதே டெசோ அமைப்பின் நிலைப்பாடு என்று குறிப்பிட்டுள்ளார்.(த)

## வடக்குத் தேர்தலின் போது பிரச்சினைகள் இடம்பெறா

### பொலிஸார் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 27
வடமாகாண சபைத் தேர்தலுக்கான ஆயத்தங்கள் தீவிரமாகியிருக்கும் நிலையில் தேர்தலின் போது இந்துமுறை எந்தப் பிரச்சினையும் வராது என்று நம்புகிறோம். ஏனெனில் வேட்பாளர்கள் அனைவரும் தமிழர்களே என்று சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஏக்கநாயக்க தெரிவித்தார்.
யாழ். பொலிஸ் நிலையத்தில்

தொடர்ச்சி: பக்கம் 21

## சஞ்சீவ பண்டார நேற்று பிணையில் விடுதலை

கொழும்பு,ஜூலை 27

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார உள்ளிட்ட 9 பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் 9 பேரும் கங்கொடவில நீதிவான் நீதிமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை முன்னிலைப் படுத்தப்பட்டபோதே அவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

சஞ்சீவ பண்டாரவை 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்த நீதிவான் வாரத்தில் இறுதி ஞாயிற்றுக்கிழமைமிரிஹானபொலிஸ் நிலையத்துக்குச் சென்று கைச்சாத்திடுமாறும் உத்தரவிட்டுள்ளார்.



பொதுக்கூட்டங்கள் மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளக்கூடாது என்ற நீதிமன்றப் பிணை நிபந்தனையை மீறியதால் சஞ்சீவ பண்டார கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (த)

# ஆஸ்திரேலிய புகலிடக் கோரிக்கை கொள்கையினால் ஐ.நா அதிருப்தி

நியூயோர்க்,ஜூலை 27

ஆஸ்திரேலியாவின் புகலிடக் கோரிக்கை கொள்கை குறித்து ஐக்கிய நாடுகள் சபை கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை, ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களே அதிகளவில் படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புகலிடம் கோருவோரைப் பப்புவா நியூகினியா தீவுகளுக்கு அனுப்பி வைப்பதென அண்மையில் ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமர் கெவின் ரூத் தீர்மானித்தார்.

ஐக்கிய நாடுகள் அகதிகள் பிரகடனத்தின் அடிப்படையில் புகலிடம் பெற்றுக் கொள்ளத் தகுதியானர்வர்கள் மட்டும் ஆஸ்திரேலியாவில் குடியேற்றப்படுவர். ஏனையவர்கள் காலவரையறையின்றி நியூகினியா தீவுகளில் தடுத்து வைக்கப்படுவர்.

புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டியது ஆஸ்திரேலியாவின் பொறுப்பாகும் என அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவின் புகலிடக் கோரிக்கையாளர் கொள்கைகளில் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதாக அந்த அமைப்புக் குறிப்பிட்டுள்ளது.

புகலிடக் கோரிக்கையார்கள் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதன் மூலம் பல்வேறு பிரச்சினைகள் எழக் கூடுமெனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் மூலம் புகலிடக் கோரிக்கையாளர்களின் உடல் மற்றும் உளவியல் நிலைமைகள் பாதிக்கப்படக் கூடுமெனவும் அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் எச்சரித்துள்ளது.

வெளிநாட்டுப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நலன்கள் உறுதிப்படுத்தப்பட



வேண்டியது அவசியமானது எனவும்,பப்புவா நியூகினியா மற்றம் மனுஸ் தீவுகளில் புகலிடக் கோரிக்கையாளர்களைத் தடுத்து வைப்பதனால் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பான கேள்வி எழுந்துள்ளதாகவும் அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் தெரிவித்துள்ளது. (த)

## ஜனவரி முதல் மீனவருக்கு காப்புறுதி கட்டாயமானது

கொழும்பு,ஜூலை 27

2014 ஜனவரி முதலாம் திகதி முதல் கடலுக்கு மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் பாதுகாப்பு அங்கி அணிவது மற்றும் காப்புறுதி பெறுவது கட்டாயம் என மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களது குடும்பத்தாரின் எதிர்காலம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதாக அமைச்சர் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (த)

# படகு கவிழ்ந்து உயிரிழந்த சிறுவனின் தந்தைக்கு ஆஸி. பிரதமர் இரங்கல்

கான்பரா,ஜூலை 27

இந்தோனேஷியக் கடற்பரப்பில் இடம்பெற்ற படகு விபத்தில் உயிரிழந்த இலங்கைப் புகலிடக் கோரிக்கைச் சிறுவனின் தந்தைக்கு, ஆஸ்திரேலியப் பிரதமர் கெவின் ரூத் இரங்கல் தெரிவித்துள்ளார்.

மூன்று வயதான பர்மிதன் பாலமாறன் என்ற சிறுவனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். இந்தப் படகில் 150க்கும் மேற்பட்டவர்கள் பயணித்துள்ளதாகவும், படகு விபத்தில் 13க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறுவனின் தந்தைக்குப் பிரதமர் ரூத், தொலைபேசி மூலம் தனது இரங்கலை



வெளியிட்டுள்ளார். பர்மிதனின் தந்தையான நடராசா பாலமாறன் கடந்த சில ஆண்டுகளாக ஆஸ்திரேலியாவில் தங்கியிருக்கின்றார். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்த இவர், பேர்த்தில் பணியாற்றி வருகிறார்.

இவர் தனது மனைவியையும், குழந்தையையும், சட்டரீதியாக ஆஸ்திரேலியாவுக்கு அழைக்க முயன்றபோது, அந்தக் கோரிக்கை ஆஸ்திரேலிய அரசினால் நிராகரிக்கப்பட்டது.

இதையடுத்து அவர்களை இந்தோனேசியாவில் இருந்து படகு மூலம் அழைக்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

படகு விபத்தில் குழந்தை மரணமானதால், கவலையில் ஆழ்ந்துள்ள நடராசா பாலமாறன், தனது குழந்தையின் உடலைத் தேடுவதற்குப் பேர்த்தில் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடிச் சென்றிருந்தபோதே, ஆஸ்திரேலிய பிரதமர் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆறுதல் தெரிவித்துள்ளார். (த)

## வங்கிகளில் போலித் தாலிக்கொடி, நகைகள் ரூ.68 லட்சத்துக்கு அடைவு வைப்பு

### விசாரணையில் மூன்றாம் நபரும் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 27

போலித் தாலிக்கொடியை வங்கியில் அடைவு வைக்க முற்பட்ட போது கைது செய்யப்பட்டவர்கள் மேலும் 68 லட்சம் ரூபாவிற்கு போலி தாலிக் கொடிகள் மற்றும் போலி நகைகளை அடைவு வைத்துள்ளமை தெரியவந்துள்ளது. இவ்வாறான மோசடியில் ஈடுபட்ட மூன்றாவது சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஏக்கநாயக்க தெரிவித்தார். யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

நெல்லியடியிலுள்ள அரச வங்கிக்கு நேற்றுமுன்தினம் சென்ற இருவர் 6.5 பவுண் நிறையுடைய தாலிக்கொடியை அடைவு வைக்க முயன்றனர். அதனை வங்கியினர் பரிசோதித்தபோதே அது போலி நகை என்பது தெரியவந்தது. சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்பது தெரிந்ததே.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலமாக மற்றொருவர் கைது செய்யப்பட்டார். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்தே அவர்கள் போலி நகைகளை பல்வேறு வங்கிகளில் அடைவு வைத்து 68 லட்சம் ரூபா பணத்தைப் பெற்று மோசடி செய்துள்ளமை தெரியவந்துள்ளது. அது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணை முன்னெடுத்துள்ளனர் என்று ஏக்கநாயக்க மேலும் தெரிவித்தார். (ஒ-4-86)

# மொழிப் பிரச்சினையை என்றுமே தீர்க்க முடியாது

### பொலிஸ் பொறுப்பதிகாரி கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஜூலை 27

எல்லாளன் காலத்திலிருந்து இன்றுவரை மொழிப் பிரச்சினை தீர்க்கப்படாத பிரச்சினையாகவே இருந்து வருகிறது. அதனை எங்களாலோ உங்களாலோ (தமிழ் மக்களாலோ, சிங்கள மக்களாலோ) தீர்த்து வைக்கமுடியாது என்று யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போக்குவரத்து விதிமுறையை மீறியதாகக் குற்றஞ்சாட்டி ஒருவருக்கு எதிராக யாழ். பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸார் சிங்கள மொழியில் குற்றச்சாட்டு எழுதிக் கொடுத்துள்ளனர். அதில் என்ன எழுதியுள்ளது என்பது பற்றி அறிந்து கொள்ள முடியாததனால் அதனை அவர் வீசி எறிந்ததாகவும் பின்னர் அவருக்கு எதிராக யாழ்.நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்ததாகவும் செய்தியாளர்கள் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் கேள்வி எழுப்பினர்.


அதற்குப் பதிலளித்த சமன் சிகேரா, அரச கரும மொழியாகத் தமிழ், சிங்களம் இரண்டும் உள்ளமையால் அவற்றில் ஏதாவது ஒரு மொழியிலேயே பொலிஸார் குற்றச்சாட்டை எழுதுவர். இங்கு தமிழ் மொழி தெரிந்த பொலிஸார் 60 பேர் வரையில் உள்ளமையால் எல்லாப் பொலிஸ் நிலையங்களுக்கும் அவர்கள் பகிர்ந்து நியமிக்கப்பட்டுள்ளனர்.முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்குப் பொலிஸ் நிலையங்களில் அவர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனவே சிங்களம் தெரிந்த பொலிஸாரே வெளியே பணிகளில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்குத் தமிழ் மொழி தெரியாமையால் தமக்குத் தெரிந்த சிங்கள மொழியிலேயே எழுதுகின்றனர்.

> சிங்களம் தெரியாவிட்டால் யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். பொலிஸார் சிங்கள மொழியில்தான் குற்றச்சாட்டை எழுதுவர்

சிங்களம் தெரியாத தமிழர்கள் சிங்களம் கற்றுத் தெரிந்திருக்க வேண்டும். தமிழ் தெரியாத சிங்களவர்கள் தமிழ் கற்றுத் தெரிந்திருக்க வேண்டும்.

குற்றம் சுமத்தப்படுபவர்களுக்கு சிங்கள மொழி தெரியுமா? தெரியாதா? என்பது எமது பிரச்சினையில்லை. அவ்வாறு சிங்களம் தெரியாவிட்டால் யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். பொலிஸார் சிங்கள மொழியில்தான் குற்றச்சாட்டை எழுதுவர்-என்றார். (த-4)

## மின்கம்பத்தைப் பந்தாடிய லொறி



திருநெல்வேலிச் சந்தியிலிருந்து கல்வியங்காடு நோக்கிச் சென்று கொண்டிருந்த பாரவூர்தி ஒன்று பழம் சந்தியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பிரதான மின்கம்பத்தைப் பந்தாடியது. இதனால் மின்கம்பம் நிலமட்டத்தில் முறிந்து அந்தப் பாரவூர்தியின் மேலேயே விழுந்தது. இதில் சாரதியும் மற்றொருவரும் காயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். (த-4-21-17)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 27

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது. அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (த-4)

# சமூக நலனோம்பு அடையாள அட்டைகள் மாற்றுவலுவுள்ளோருக்கு வழங்க ஏற்பாடு

## துணுக்காயில் கிராம அலுவலர் பிரிவுகளில் ஓக. 1, 2 இல்

துணுக்காய், ஜூலை 27

துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வதியும் மாற்றுவலுவுள்ளோருக்கான சமூக நலனோன்பு அடையாள அட்டைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான பதிவ்குகள் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம், இரண்டாம் திகதிகளில் பிரதேசத்தில் உள்ள அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ். மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் ஆ.ஞானவேல் தலைமையிலான குழுவினரும் பிரதேச சமூக சேவைகள் அலுவலர் கே.கணேசராஜ் தலைமையிலான குழுவினரும் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக பதிவுகளை மேற்கொள்வதுடன் இலவசமாக புகைப்படம் பிடிக்கும் சேவையையும் நடத்தவுள்ளனர். பிரதேசத்தில் உள்ள அனைத்து மாற்றுவலுவுள்ளோரை பதிவு செய்யப்படவுள்ளதால் ஏற்கெனவே பதிவுகளை மேற்கொண்டவர்களும் நடமாடும் சேவையில் சமுகமளிக்குமாறும் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

மாற்றுவலுவுள்ளோர் கிராம அலுவலர் அலுவலகங்களில் பதிவுகள் மேற் கொள்ளும்போது இயலாமை காரணமாக சமுகம் கொடுக்க முடியாதவர்கள் பற்றிய விவரங்களைப் பதிவினை மேற்கொள்ளும் அதிகாரிக்கு தெரியப்படுத்தினால் அத்தகையோரை வீட்டுக்குச் சென்று பதிவு செய்வதுடன் புகைப்படமும் எடுக்கப்படும் எனவும்-

பிரதேசத்தில் உள்ள அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் மாற்றுவலுவுள்ளோரின் விவரங்கள் பதிவு செய்யவுள்ளதால் தத்தமது கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு நேர ஒழுங்கைக் கேட்டறிந்து உரிய நேரத்துக்கு சமுகமளிக்குமாறும் அறிவித்துள்ளார்.

பதிவுகள் இடம்பெறவுள்ள கிராம அலுவலர் பிரிவு விவரம் வருமாறு:

ஓகஸ்ட் முதலாம் திகதி காலை 9 மணிக்கு அமதிபுரம், புத்துவெட்டுவான், முற்பகல் 10.30 மணிக்கு அம்பலப்பெருமாள்குளம், பழைய முறிகண்டி, நண்பகல் 12 மணிக்கு கோட்டைகட்டிய குளம், ஐயன்கன்குளம், பிற்பகல் 1 மணிக்கு தெணி-யான்குளம், பிற் பகல் 2 மணிக்கு தேராங் கண்டல், உயிலங்குளம், பிற்பகல் 3.30 மணிக்கு கல்விளான், மல்லாவி.

ஓகஸ்ட் இரண்டாம் திகதி காலை 9 மணிக்கு யோகபுரம் கிழக்கு, பாரதிநகர், முற்பகல் 10.30 மணிக்கு யோகபுரம் மத்தி, புகழேந்தி நகர், முற்பகல் 11.30 மணிக்கு அனிஞ்சியன்குளம், நண் பகல் 12 மணிக்கு திருநகர், பிற்பகல் 1 மணிக்கு யோகபுரம் மேற்கு, பிற்பகல் 2 மணிக்கு துணுக்காய், பிற்பகல் 2.30 மணிக்கு ஆலங்குளம்.

(ஒ-9)

# 'சுடர் ஒளி' யின் பிரதம ஆசிரியருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது



உதயனின் சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி'யில் பணியாற்றும் நாகலிங்கம் பத்மசீலன் ஊடகத்துறையில் 46 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளார். இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவார். கல்லூரியில் படிக்கும் காலங்களில் கிறிஸ்தவ மாத இதழான 'உதய தாரகை' க்கு வெளி நாட்டுக் கட்டுரைத் தொடர் ஒன்றை எழுதியதன் மூலம் அவர் ஊடகத்துறைக்கு அறிமுகமானார்.

1967இல் எம்.டி.குணசேனா ஸ்தாபனத்தின் வெளியீடான 'தினபதி'யிலும், வார இதழான 'சிந்தாமணி' யிலும் செய்தியாளராக இணைந்து கொண்ட பத்மசீலன், உதவி ஆசிரியராகவும், சிரேஷ்ட உதவி ஆசிரியராகவும், பிரதம உதவி ஆசிரியராகவும் பல பதவிகளை வகித்தார். 'தனபதி' யின் மாலைப் பத்திரிகையான 'தந்தி'யில் பொறுப்பாசிரியராகவும் கடமை யாற்றினார்.

1985இல் யாழ்ப்பாணத்தில் 'உதயன்' பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட சமயம், அதன் ஆரம்பகால உறுப்பினராக இணைந்து கொண்ட... அவர் 'உதயனில்' பணியாற்றிய 15 வருடங்களும் மறக்க முடியாதவை. மூன்று ஈழப் போர் நடைபெற்ற பயங்கரமான காலப்பகுதி யில் 'உதயன்' பத்திரிகையின் செய்தி ஆசிரியராகவும், இணை ஆசிரியராகவும் மிகவும் நெருக்கடிகளுக்கும், உயிராபத்துக்கும் மத்தியில் பணியாற்றியுள்ளார். அக்காலத்தில் பாதுகாப்புக் கருதி 'உதயன்' அலுவலகம் மூன்று தடவைகள் இடம் மாறி இயங்கியது. கோட்டை முற்றுகையின்போது பதுங்குகுழிகளில் இருந்து கடமையாற்றிய அவரது அனுபவங்கள் மறக்க முடியாது.

2000ஆம் ஆண்டு கொழும்பில் உதயனின் சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி' வார இதழ் ஆரம்பிக்கப்பட்டபோது அதில் இணைந்து கொண்ட பத்மசீலன், அதன் ஆசிரியராகவும் பின்னர் 'சுடர் ஒளி' நாளிதழ் ஆசிரியராகவும் கடமையாற்றினார். தற்பொழுது 'சுடர் ஒளி' நாளிதழின் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றுகிறார்.

'தினபதி', 'சிந்தாமணி' பத்திரிகைகளிலும், 'உதயன்', 'சஞ்சீவி' பத்திரிகைகளிலும், 'சுடர் ஒளி' நாளிதழ், வார இதழ் பத்திரிகைகளிலும் என்.பி.சீலன், என்.பி.எஸ்., சஞ்சாரன் ஆகிய புனைப் பெயர்களில் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

உதயன் பத்திரிகையின் ஆரம்பகால இணை ஆசிரியரும் உதயனின் சகோதரப் பத்திரிகையான சுடர்ஒளியின் பிரதம ஆசிரியருமான நாகலிங்கம் பத்மசீலன் இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனமும் இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்தவுள்ள விருது வழங்கும் விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக்கௌரவிக்கப்படவுள்ளார்.

இந்த விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பு மவுண்லெவனியா ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

# கடந்த வாரத்தில் 3 முறைப்பாடுகள்

## பதின்ம வயதுச் சிறுமிகள் மீதான துஷ்பிரயோகம்

யாழ்ப்பாணம்,ஜூலை 27

பதின்ம வயதுச் சிறுமிகள் நான்கு பேர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் கடந்தவாரம் மூன்று முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இந்தக் குற்றச் சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஏக்கநாயக்க தெரிவித்தார்.

நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

காங்கேசன் துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பாடசாலை ஒன்றில் பயிலும் இரண்டு மாணவிகளைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் கந்தர்மடத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பதின்ம வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் ஊரெழு கிழக்கைச் சேர்ந்த 25 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 10 வயதுக்கும் குறைந்த சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார். இந்தக் குற்றச்சாட்டில் ஆவரங்கால் மேற்கு, புத்தூரைச் சேர்ந்த 19 வயது இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்- என்றார்.(வ-4-86)

# குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 81 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 27

பிறரை அடித்துக் காயப்படுத்தியமை, மது போதையில் வாகனம் செலுத்தியமை உட்பட பல குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 81 பேர் யாழ்.மாவட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஏக்கநாயக்க தெரிவித்தார்.

> குற்றச்சாட்டுகளுக்கேற்ப அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டும் உள்ளனர்

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

பிறரை அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் 13 பேரும், மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 22 பேரும், களவு எடுத்த குற்றச்சாட்டில் 6 பேரும், அத்துமீறி வீடு புகுந்த குற்றசாட்டில் 2 பேரும், சூழல் மாசடையும் வகையில் செயற்பட்ட 3 பேரும், பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் 14 பேரும், மோசடி செய்த குற்றச்சாட்டில் 2 பேரும் , சட்டவிரோதமாக மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் 4 பேரும், திருட்டு மின்சார பெற்ற குற்றச்சாட்டில் 11 பேரும், பொது இடத்தில் கலகம் விளைவித்த குற்றச்சாட்டில் 4 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றச்சாட்டுகளுக்கேற்ப அவர்கள் அபராதம் விதிக்கப்படும் விளக்கமறிய லில் வைக்கப்பட்டும் உள் ளனர்- என்றார் (வ-4)

# சாவகச்சேரி பஸ் நிலைய வளாகத்தில் ரி.வி. திரை


தென்மராட்சி, ஜூலை 27

சாவகச்சேரி பஸ் நிலையப் பகுதியில் பெரிய தொலைக் காட்சித் திரை பொருத்தப்பட்டுள்ளது.

மஹிந்த சிந்தனை செயற்பாடுகளை மக்களுக்குத் தெரியப்படுத்தும் விதத்தில் செய்திப் படங்களை காண்பிப்பதற்காக படையினரால் இந்தத் தொலைக்காட்சித் திரை பொருத்தப்பட்டுள்ளது. பஸ் நிலைய வளாகத்தில் அமைந்துள்ள பழக்கடை பகுதியில் இதற்கான கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திரையில் மஹிந்த சிந்தனை தொடர்பான செயற்றிட்ட காட்சிகளும் திரைப் படங்களும் ஒளிபரப்பாகி வருகின்றன. பொதுமக்கள் கூடும் இடத்தில் இவ்வாறான திரை பொருத்தப்பட்டமை தொடர்பாக நகரசபையுடன் தொடர்பு கொண்டபோது சபையின் அனுமதி பெற்றே பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ)

# நடமாடும் சேவையின் இறுதிநாள் நேற்று நல்லூரில்



யாழ்ப்பாணம், ஜூலை 27

நல்லூர் பிரதேச செயலகமும் அடையாள அட்டைகள் திணைக்களமும் கபே அமைப்பும் இணைந்து நடத்திய தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்வதற்கான நடமாடும் சேவையின் இறுதிநாள் சேவைகள் நேற்று வெள்ளிக் கிழமை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெற்றன.

கடந்த மூன்று தினங்கள் இடம்பெற்ற சேவையில் ஆயிரத்து 500 அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. நேற்றையதினமும் கூடுதல் படிவங்கள் கிடைத்தன என்றும் அந்த விண்ணப்பங்களுக்கான அடையாள அட்டைகள் ஒரு மாதத்துக்குள் உரியவர்களுக்குக் கிடைக்கும் என்றும் அடையாள அட்டைப் பிரிவினர் தெரிவித்தனர். அடையாள அட்டை தவிர காலம் கடந்த திருமணம், பிறப்பு, இறப்பு பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான செலவுகளை 'கபே' அமைப்பு ஏற்றுக்கொண்டது. (ஒ-7)

## எழுதுமட்டுவாழில் ரயில் நிலையம் அமைக்கப்படுமா?



தென்மராட்சி, ஜூலை 27

எழுதுமட்டுவாழ் சந்தியில் முன்னர் இயங்கிய ரயில் நிலையம் மீண்டும் இயங்கமாட்டாதா என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

முன்னைய காலத்தில் 'கரிக் கோச்சி' சேவையில் ஈடுபட்ட காலத்தில் எழுதுமட்டுவாழ் உப ரயில் நிலையமாக இயங்கியதால் கிளாலி, முகமாலை, எழுதுமட்டுவாழ், நாகர்கோவில் போன்ற பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களும் அரச உத்தியோகத்தர்களும், பொதுமக்களும் ரயில் சேவையைப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

புதிதாக ரயில் பாதை அமைக்கப்பட்டுவரும் வேளையில் முன்னர் இயங்கிய ரயில் நிலையங்கள், உப ரயில் நிலையங்கள் போன்றவை புனரமைக்கப்பட்டு வருகின்றபோதிலும் எழுதுமட்டுவாழ் ரயில் நிலையம் அமைப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென தெரிவித்த அந்தப்பகுதி மக்கள் எழுதுமட்டுவாழ் ரயில் நிலையம் மீண்டும் அமைக்கப்படமாட்டாதா எனவும் கேட்டுள்ளனர். (ஒ-9)

## தனியாரிடம் கடற்போக்குவரத்தை ஒப்படைப்பது குறித்து ஆலோசிக்கப்படும்

### நெடுந்தீவு ஒருங்கிணைப்பு கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்.நெடுந்தீவு கடற்போக்குவரத்தைத் தனியார் துறையிடம் ஒப்படைப்பது குறித்து ஆலோசிக்கப்படும் என நெடுந்தீவு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நெடுந்தீவு படகுச் சேவைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரை கடமையில் ஈடுபடுத்த வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கருத்து முன்வைக்கப்பட்டது.

மேலும் அரச படகுகளில் மோட்டார் சைக்கிள் உட்பட துவிச்சக்கர வண்டிகளை



ஒரு குறிப்பிட்ட அளவில் கொண்டு செல்ல அனுமதிக்க வேண்டும் என விடுக்கப்பட்ட கோரிக்கை சாத்தியப்படாது எனத் தெரிவிக்கப்பட்டதுடன் பொருள்களை எடுத்துச் செல்லக் கூடியதாக குமுதினி, வட தாரகை படகுகளுக்காக விடுமுறை நாள்களில் தனியார் படகுகளை சேவைக்கு விடுவது குறித்தும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (எ-7)

> நெடுந்தீவு படகுச் சேவைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரை கடமையில் ஈடுபடுத்த வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அடிப்படை வசதிகளின்றிய தருமபுரம் பொதுச் சந்தை

கிளிநொச்சி, ஜூலை 27

கிளிநொச்சி, தருமபுரம் பொதுச் சந்தையில் அடிப்படை வசதிகள் போதுமான அளவில் இல்லையென்றும் இதனால் தமது வர்த்தக நடவடிக்கைகளில் பாதிப்புகள் ஏற்படுவதாகவும் சந்தை வர்த்தகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்கு உட்பட்ட தருமபுரம் பொதுச் சந்தையில் தற்போது ஐம்பதுக்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் குறித்த சந்தைக்கான பாதுகாப்பு வேலிகள் எவையும் சீரான முறையில் இல்லை. அத்துடன் கழிப்பறை வசதிகள், குடிதண்ணீர் வசதி என்பனவும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

மீன்சந்தை கடைத்தொகுதி, மரக்கறிச் சந்தைக் கடைத் தொகுதி என்பன உள்ள போதும் ஏனைய அடிப்படை வசதிகள் எவையும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

மீள்குடியமர்ந்த பின்னர் குறித்த சந்தை ஆரம்பிக்கப்பட்டு 3 ஆண்டுகளைக் கடக்கின்ற நிலையிலும் போதிய அடிப்படை வசதிகள் இன்றி குறித்த சந்தை இயங்குவதால் இங்கு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் வர்த்தகர் களும் நுகர்வோரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (வ-6)

## அறிவுப் பொருளாதார அடிப்படையில் கட்டளைக் கோள் மாற்றமாக கல்வி எழுச்சி

### யாழ். தேசியக் கல்வியற் கல்லூரி இணைப்பாளர் தெரிவிப்பு

சங்கானை ,ஜூலை 27

அறிவுப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டு இன்று கல்வி கட்டளைக் கோள் மாற்றமாக எழுச்சியடைந்துள்ளது. இந்த நீரோட்டத்தில் கல்வியாளர்களையும், அதிபர்களையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் அழைத்துச் செல்ல வேண்டியுள்ளது என்று யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா.தனபாலன் தெரிவித்தார்.

கல்வி நிர்வாக சேவை வழிகாட்டல் செயலமர்வு மட்டக்களப்பு ஏறாவூர் பல நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஓய்வு பெற்ற கல்வி நிர்வாக சேவை அதிகாரி எஸ்.மொகமட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தனபாலன் மேலும் தெரிவித்ததாவது:-

> கல்வி அறிவைச் சரியாகச் சமூகத்துக்கு வழங்குவோமானால் ஒரு புதிய சமுதாயப் புரட்சியை எம்மால் ஏற்படுத்த முடியும்.

கல்வித்துறையில் பின்னடைவுகளை நீக்கவும், சமூகத்தில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளில் சிக்கியுள்ளவர்கள் விடுதலை பெறவும், நாட்டில் அபிவிருத்தியை மேற்கொள்ளவும் கல்வியே கருவியாகும்.

சம காலத்தில் அரசியல், பொருளாதார சமூகம் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள், முரண்பாடுகள் தோன்றும் சந்தர்ப்பங்களை ஆராய்ந்து தீர்க்க கல்வியே முதன்மைக் கருவியாகும். அதற்காகச் செயலாற்ற வேண்டும். ஆனால் எமது பிரதேசத்தில் இவ்வாறானதொரு ஆக்கபூர்வமான சூழல் கட்டியெழுப்பப்படவில்லை. இந்தநிலையை நாம் அனைவரும் இணைந்து களைய வேண்டும்.

எமது மண்ணில் கல்வியறிவு இன்மையாலும், கல்வி விழிப்புணர்ச்சி இல்லாமையினாலுமே பல சீர்கேடுகளும், வறுண்மயும், குடும்பப் பிளவுகளும், கலாசார சீர்கேடுகளும், பொருத்தமற்ற அரசியல் தகராறுகளும் ஏற்படுகின்றன. பொருத்தமான கல்வி விழிப்புணர்ச்சியையும், கல்வி அறிவையும் சரியாகச் சமூகத்துக்கு வழங்குவோமானால் ஒரு புதிய சமுதாயப் புரட்சியை எம்மால் ஏற்படுத்த முடியும். இதற்கான செயற்றிட்டங்களை ஒவ்வொரு பாடசாலையையும் மையமாகக் கொண்டு செயற்படுத்த வேண்டும்.

இதற்கு அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்குமான வலு வூட்டல் செயற்றிட்டங்கள் தேவையாகும்.- என்றார். (எ-29)

## பலத்த பாதுகாப்பில் கிளிநொச்சி செயலகம்

கிளிநொச்சி, ஜூலை 27

கிளிநொச்சி மாவட்டச் செயலக வளாகத்தில் அமைந்துள்ள தேர்தல் செயலகத்தில் அதிகளவான பொலிஸார் கடமைக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

நடைபெறவுள்ள வட மாகாண சபைத் தேர்தலையடுத்து தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள், வேட்புமனுத் தாக்கல் செய்யும் திகதி அறிவிக்கப்பட்டதையடுத்து நேற்றுத் தொடக்கம் கிளிநொச்சி தேர்தல்கள் செயலகத்துக்கான பாதுகாப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கிளிநொச்சியின் ஏனைய பகுதிகளில் கடமையில் இருந்த பொலிஸார் மேலதிகமாக வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

தேர்தல்கள் செயலகத்தில் அறிவுறுத்தல்கள் போடப்பட்டுள்ளதுடன் அதிகமான பொலிஸாரும் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (வ-6)

> மேலதிக பொலிஸார் வரவழைக் கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

## 4 கி.மீ. நீளமான மண் அணையை சீர்செய்து தருக



தென்மராட்சி, ஜூலை 27

எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் கடந்த வாரம் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதியில் நான்கு கிலோமீற்றர் நீளத்தில் காணப்படும் மண் அணையை சீர்செய்து தருமாறு எழுதுமட்டுவாழ் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தென்மராட்சி பிரதேச செயலரைக் கோரியுள்ளனர்.

மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதியில் பற்றைக் காடுகளும் பனை வடலிகளும் பெருமளவில் காணப்படுவதாகவும் மிக நீளமான மண் அணையை சமப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் சங்கத்தினர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். (ஒ-9)

## மது அருந்திய நால்வர் சிக்கினர்

வலி.வடக்கு, ஜூலை 27

பொது இடத்தில் வைத்துப் பட்டப் பகல் வேளையில் அரச உத்தியோகத்தர் உட்பட மதுபானம் அருந்திய 4 பேர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் சுன்னாகம் மேற்கு பூதராயர் கோயிலடியில் இருந்து மதுபானம் அருந்திக் கொண்டு இருந்த இளைஞர்களே பொது மக்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டவர்களாவர்.

ஓட்டோ, மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்களில் வந்து அவர்கள் மது அருந்திக்கொண்டு இருந்த வேளையில் பொலிஸார் அவர்களில் 4 பேரைக் கைது செய்ததாகவும் ஓட்டோவில் வந்தவர்கள் தப்பிச்சென்றுவிட்டதாகவும் பொது மக்கள் தெரிவித்தனர். (வ-86)

## சாவகச்சேரியில் பாற்பொருள் விற்பனை நிலையம்

தென்மராட்சி, ஜூலை 27

சாவகச்சேரி நகர்ப் பகுதிக்கு வரும் மக்களின் நலன் கருதி சாவகச்சேரி பஸ் நிலையப் பகுதியில் பாற்பொருள்கள் விற்பனை நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தால் குறித்த விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனப்



பிரதிநிதி ஆர்.சர்வானந்தா வைபவ ரீதியாக நிலையத்தைத் திறந்து வைத்தார்.

விற்பனை நிலையத்தில் பால் மற்றும் பால் உற்பத்திப் பொருள்கள் பெற்றுக் கொள்ளலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## தென்மராட்சியில் அதிகரிக்கும் ஆடுகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 27

தென்மராட்சியில் ஆடுகள் திருடப்படுவது அதிகரித்துள்ளன. இதுவரை 10இற்கும் மேற்பட்ட ஆடுகள் திருடப்பட்டுள்ளன.

5 ஆடுகள் திருடப்பட்டுள்ளமை தொடர்பில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றைத் திருடிய குற்றச்சாட்டில் 7பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரியில் கடந்த 19ஆம் திகதி 10 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆடுகள் திருடப்பட்டுள்ளன. அவற்றைத் திருடிய குற்றச்சாட்டில் கைதடி மேற்கைச் சேர்ந்த 25, 28, 32 வயதுகளையுடைய 3பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனங்களப்பில் 24 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆடுகள் கடந்த வியாழக்கிழமை திருடப்பட்டுள்ளன. அவற்றை வெட்டி இறைச்சிக்குப் பங்குபோட்ட நிலையில் அதே இடத்தைச் சேர்ந்த 25 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டதோடு இறைச்சியும் கைப்பற்றப்பட்டது.

இதேவேளை அராலி கிழக்கில் 7ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடு கடந்த 19ஆம் திகதி திருடப்பட்டுள்ளது. இதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சுதுமலை கிழக்கைச் சேர்ந்த 26, 30, 35 வயதுகளையுடைய 3 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதவிர, கைதடி மேற்கில் மாத்திரம் 7இற்கும் மேற்பட்ட ஆடுகள் திருடப்பட்டுள்ளன. மேய்ச்சலுக்காக அவிழ்த்து விடப்பட்ட, கட்டப்பட்ட ஆடுகளே இவ்வாறு திருடப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு குடும்பத்தவரது 4 ஆடுகள் திருடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அவை இன்று வரை மீட்கப்படவில்லை. (வ-4)

## சுயதொழிலில் ஈடுபடுவோரை ஓய்வூதியத்தில் இணைக்கும் நிகழ்வு

பளை, ஜூலை 27

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களில் இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் சுயதொழிலில் ஈடுபட்டுவருவோரை ஓய்வூதியத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளும் நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி பளை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. அத்துடன் சமூக பாதுகாப்பு திட்டத்தை நடைமுறைப் படுத்தலில் ஈடுபட்ட அதிகாரிகளை கௌரவித்தலும் இடம் பெறும்.

பளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக இலங்கை சமூக பாதுகாப்புச் சபைத் தலைவர் திருமதி சுகுணா ஆரியரத்தனவும், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனும், கௌரவ விருந்தினர்களாக கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார், கண்டாவளை பிரதேச செயலர் த.முகுந்தன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந்தத் திட்டத்தில் சிறப்பான அடைவு மட்டத்தை அடைந்த பிரதேச செயலர்கள், சமூக சேவைகள் அலுவலர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். திட்டத்தில் பளை பிரதேச செயலர் பிரிவில் 216 பேரும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 40 பேரும், கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 32 பேரும் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (வ-9)



# ஆலய திருவிழாக் காலங்களில் விசேட விற்பனை நிலையங்கள்

### பனை அபிவிருத்திச் சபை ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 27

நாடளாவிய ரீதியில் ஆலயத் திருவிழாக்கள் மற்றும் பொது நிகழ்வுகளின் போது பனை சார் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு அந்தந்த இடங்களில் விசேட விற்பனைக் கூடம் ஒன்றை அமைப்பது தொடர்பாக பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பனைசார் உற்பத்திப் பொருள்களுக்கு உள்ளூர் உட்பட வெளிமாவட்டங்களிலும் சந்தை வாய்ப்புக் கிடைத்துள்ளது. நுகர்வோர் எதிர்பார்க்கக்கூடிய பொருள்கள் சில இடங்களில் காட்சிப்படுத்தப் படுவதில்லை. குறிப்பாக பொது நிகழ்வுகள் மற்றும் ஆலயத் திருவிழா காலங்களில் பொதுமக்கள் அதிகமாக பனை சார் உற்பத்திப் பொருள்களை தேடுவதை அவதானிக்க முடிந்துள்ளது. இந்த நிலையில் உற்பத்தியாளர்களுக்கு ஊக்குவிப்பு வழங்குவதன் ஊடாக விற்பனைக் கூடங்களை குறித்த இடங்களில் அமைப்பதன் மூலம் சந்தை வாய்ப்பைக் கூடுதலாகப் பெற முடியும். இதற்காகப் பனை அபிவிருத்திச் சபை உரிய உற்பத்தியாளர்களைத் தெரிவு செய்து விற்பனைக் கூடங்களை அமைக்கும்.

> இதனூடாக உற்பத்தியாளர்களுக்கான சந்தை வாய்ப்பையும் வருமானத்தையும் பெற்றுக் கொடுக்க முடியும் என எதிர்பார்க்கப் படுகிறது

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பனம் உற்பத்திப் பொருள்கள் அதிகமாகக் கிடைப்பதால் அங்கிருந்து பெறப்படுகின்ற உற்பத்திப் பொருள்களை விற்பனைக் கூடங்களில் காட்சிப்படுத்தி சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்டங்களில் முதல் கட்டமாக விற்பனைக் கூடங்களை அமைத்து சந்தைப் படுத்தல் செய்து சந்தை வாய்ப்பைப் பெற்ற பின்னர் ஏனைய மாவட்டங்களில் அதனை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பனை சார் உற்பத்திப் பொருள்கள் சந்தைவாய்ப்பு இல்லாமல் உள்ளூர் கடைகளில் தேக்கம் அடைந்துள்ளன. இதன் காரணமாக பொருள்களுக்கான சந்தைவாய்ப்புக் குறைவடைந்து செல்கிறது. ஆனால் இத்தகைய பொருள்களை பொது நிகழ்வுகளில் மற்றும் ஆலயங்களில் பொதுமக்கள் அதிகளவு ஒன்றுகூடும் இடங்களில் காட்சிப்படுத்தும் போது ஓரளவு சந்தை வாய்ப்பைப் பெற முடியும்.

இதற்கான முன்னேற்பாடாக பனை அபிவிருத்திச் சபை முன்னின்று குறித்த இடங்களில் விற்பனைக் கூடங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இதனூடாக உற்பத்தியாளர்களுக்கான சந்தை வாய்ப்பையும் வருமானத்தையும் பெற்றுக் கொடுக்க முடியும் என எதிர்பார்க்கப் படுகிறது எனவும் தெரிவித்தார். (வ-14)

## கிளிநொச்சியில் இடம்பெற்ற பிறப்பு, இறப்பு நடமாடும் சேவை



ஆஸ்திரேலிய அரசின் சமுதாய புனரமைப்புத் திட்டத்தின் கீழ் சோ ஆ நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் காலங் கடந்த இறப்பு, பிறப்புச் சான்றிதழ்கள் பெறுவதற்கான நடமாடும் சேவை அண்மையில் நடத்தப்பட்டது. கிளிநொச்சி மாவட்டம் நாவல்நகர், ஸ்கந்தபுரம், ஊரியான், பொன்நகர் ஆகிய கிராமங்களில் நடத்தப்பட்ட இந்த நடமாடும் சேவையில் 500 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் பயனடைந்தனர்.

நடமாடும் சேவையின்போது காலங்கடந்த இறப்பு, பிறப்புச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்களை வட மாகாண பதிவாளர் நாயகம் மற்றும் சோ ஆ நிறுவனத்தின் ஊழியர்கள் ஆகியோர் இணைந்து சான்றிதழ்களுக்கான பதிவு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அத்துடன் உத்தேசவயதெல்லை 55 ஐக் கொண்டவர்களில் இதுவரை உத்தேச வயதுச் சான்றிதழைப் பெறாத 200 இற்கும் மேற்பட்டவர்களுக்கும் உத்தேச வயதுச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (வ-14)

## இந்தியத் துணைத் தூதரக யாழ். அலுவலகத்தில் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் யோகா, ஹிந்தி மற்றும் இசைக் கருவிகளுக்கான பாடநெறிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் அவற்றைக் கற்க விரும்புபவர்களை விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

யோகா வகுப்புக்கள் ஓகஸ்ட் மாதமும், ஹிந்தி வகுப்புக்கள் செப்ரெம்பர் மாதமும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வயலின் வகுப்புக்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் மேலதிகமாக மிகக் குறைந்தளவான மாணவர்களே இணைத்துக் கொள்ளப் படுவார்கள்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களது பெயர் மற்றும் வயது, இணைய விரும்பும் பாடநெறி, இசைக் கருவிகள் கொண்டு வர முடியுமா? போன்றவற்றையும் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி என்பவற்றையும் குறிப்பிட்டு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும்.

cgi.jaffna@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 021 222 0503 என்னும் தொலைநகல் இலக்கத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

பாடநெறிக்கான பதிவுக் கட்டணமாக இலங்கை ரூபா 250 ஐச் செலுத்த வேண்டும். பயிற்சிக் கட்டணம் இலவசமாகும். பயிற்சிகள் வாரநாள்களில் இல-14, மருதடி வீதி, நல்லூரிலுள்ள துணைத் தூதரகத்திலேயே இடம்பெறும். (வ-5)

## பயனாளிகள் 7 பேருக்கு சுயதொழில் உதவி



நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் வண்ணார்பண்ணை வட மேற்கு புதுவீதி மகளிர் பிரதேச அபிவிருத்திச் சங்கத்தில் தெரிவு செய்யப்பட்ட ஏழு பயனாளிகளுக்கு சுய தொழில் கடன் உதவியாக தையல் இயந்திரங்கள் பிரதேச அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்டன.

நேற்றைய தினம் பாரதி சனசமூக நிலையத்தில் நல்லூர் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மாலினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், பிரதேச அபிவிருத்தி வங்கி முகாமையாளர் கே.எல். லக்ஸ்மணசர்மா, பிரதேச திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் ஆகியோர் பயனாளிகளுக்கான தொழில் உபகரணங்களை வழங்கினார்கள். (ஓ-7)

# கைப்பணிக் கிராமங்களாக மாதிரிக் கிராமங்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 27

பனை அபிவிருத்திச் சபையால் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 2 மாதிரிக் கிராமங்கள் கைப்பணிக் கிராமங்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் வடக்கில் யாழ்.மாவட்டத்தில் மாவியப்பிட்டிக் கிராமமும், கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தாழங்குடாக் கிராமமும் மாதிரிக் கிராமங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பனை வளத்தின் ஊடாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் பொருளாதார அபிவிருத்தியை வளப்படுத்தும் நோக்குடன் குறித்த 2 மாதிரிக் கிராமங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இரண்டு மாதிரிக் கிராமங்கள் ஊடாக பனை அபிவிருத்திச் சபையால் அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதனைவிட கிராமரீதியாக சிறுசுவடுகள் அமைப்பும் உருவாக்கப்பட்டு அதற்கான அபிவிருத்திச் செயற் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாதிரிக் கிராமங்கள் ஊடாக தொழில் முயற்சியாளர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு சந்தை வாய்ப்புகளும் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

## கிராம அலுவலர்களூடாக ஓய்வூதிய உறுதிப் பத்திரம்

அச்சுவேலி, ஜூலை 27

இலங்கை சமூக பாதுகாப்புச் சபை ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து கொண்ட பயனாளிகளுக்கான ''ஓய்வூதிய உறுதிப்பத்திரம்'' கிராம அலுவலர்களுக்கு ஊடாக வழங்கப் பட்டு வருகின்றன.

> ''ஓய்வூதிய உறுதிப்பத்திரம்'' கிராம அலுவலர்களுக்கு ஊடாக வழங்கப் பட்டு வருகின்றன.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கை சமூக பாதுகாப்புச் சபை அனைவருக்கும் ஓய்வூதியம் திட்டத்தின் கீழ் சுயவிருப்பின் பேரில் 55 வயதுக்கு உட்பட்ட அரச துறையில் மற்றும் கூட்டுத்தாபனங்களில் கடமை புரியாதவர்களை உறுப்பினர்களாக இணைத்து வருகின்றது.

அனைவருக்கும் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொள்பவர்களுக்கு 60 வயது பூர்த்தியடைந்த பின்னர் மாதாந்தம் ஓய்வூதியம் பெறுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஓய்வூதியத்திட்டத்தில் இணைந்து கொள்பவர்களுக்கு ஓய்வூதிய அட்டவணையுடன் கூடிய ஓய்வூதிய பத்திரங்கள் மற்றும் விவரங்கள் கொண்ட ஆவணங்கள் கையளிக்கப் பட்டு வருகின்றன.

பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் கிராம அலுவலர் மூலம் கையளிக்கப்படுகின்றன. (வ-11)

# தி.மு.கவை அழிப்பது ஸ்டாலினே

## கடுமையாகச் சாடுகிறார் பருதி இளவழுதி

சென்னை, ஜூலை 27
தி.மு.கவை அழிப்பது ஸ்டாலின் தான். அந்தக் கட்சியின் அழிவுக்கு ஸ்டாலின் ஒருவரே போதும் என்று கடுமையாகச் சாடியுள்ளார் தி.மு.கவில் இருந்து பிரிந்து தற்போது அ.தி.மு.கவில் இணைந்துள்ள பரிதி இளம்வழுதி.

கரூர் மாவட்டத்தில் அ.தி.மு.க. சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, "நான் தி.மு.கவில் இருந்தபோது அ.தி.மு.க ஆட்சி குறித்து தவறாக விமர்சனம் செய்துள்ளேன். ஆனால் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது ஜெயலலிதா என்னை அ.தி.மு.கவில் இணைத்துக் கொண்டார்.



ஆனால் தி.மு.க. ஆட்சியில் கருணாநிதி தன்னுடைய குடும்பங்களில் உள்ளவர்களை அரசியலில் ஈடுபடுத்துவதிலேயே தீவிரம் காட்டினார். மக்களுக்கு இலவச தொலைக்காட்சி வழங்கப்பட்டதிலும் கேபிள் மூலம் குடும்ப வருமானத்தை அதிகரித்துக் கொள்ளலாம் என்ற உள்நோக்கத்தையே கொண்டிருந்தனர்.

தி.மு.கவை அழிப்பதற்கு வெளியில் இருந்து யாரும் வரவேண்டிய அவசியம் இல்லை. கருணாநிதியின் மகனான ஸ்டாலின் ஒருவரே போதும். எதிர்வரும் 2014ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் பிரதமராகும் தகுதியும், திறமையும் முதல்வர் ஜெயலலிதாவுக்கு உள்ளது" என்று தெரிவித்தார்.(ற)

# ஊடுருவல்களை நிறுத்த வேண்டும்

## சீனாவிடம் வலியுறுத்துகிறது இந்தியா

புதுடில்லி, ஜூலை 27
இந்திய எல்லைக்குள் சீன இராணுவம் ஊடுருவுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று சீனாவிடம் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இருநாடுகளின் அதிகாரிகள் நிலையிலான பேச்சுக்களின் போதே இந்தியா இதனை வலியுறுத்தியது. இந்தியா - சீனா இடையே அமைதியை பராமரிப்பது, எல்லையில் சமநிலையை கடைப்பிடிப்பது தொடர்பான அதிகாரிகள் நிலையிலான பேச்சுக்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் சையீத் அபுபக்கர், "பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையிலும், நம்பிக்கை ஏற்படுத்தும் வகையிலும் பேச்சுக்கள் நடைபெற்றன. இந்திய - சீன எல்லை விவகாரம் தொடர்பாக ஒருங்கிணைப்பு ஏற்படுத்தவும், தொடர்ந்து பேச்சு நடத்தவும் செயல் திட்டத்தை வரையறுக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. சமீபத்தில் நிகழ்ந்த ஊடுருவல்களால் எல்லைப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை குறித்தும் இந்த சந்திப்பின்போது ஆய்வு செய்யப்பட்டது. எல்லைக்குள் சீன இராணுவம் ஊடுவருவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பது தொடர்பிலும் வலியுறுத்தப்பட்டது'' என்று தெரிவித்தார்.(ற)

டில்லி மாணவி வன்புணர்வு சம்பவம்

# நீதிமன்றத்தின் தீர்ப்பு மீண்டும் ஒத்திவைப்பு


புதுடில்லி, ஜூலை 27
இந்தியத் தலைநகர் புதுடில்லியில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் மாணவி ஒருவர் ஓடும் பஸ்ஸில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு உயிரிழந்த சம்பவத்தில் குற்றம்சாட்டப்பட்டுள்ள பதின்ம வயது குற்றச் சந்தேக நபரின் வழக்கை விசாரித்து வந்த நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்குவதை மீண்டும் ஒத்தி வைத்துள்ளது.

குற்றச் சட்டங்களின் பார்வையில் இளம் பிராயத்தவர் என்பதற்கான சட்டபூர்வ வரையறையை மாற்றக் கோரும் மனு ஒன்று இந்திய உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுளது என குற்றம்சாட்டப்பட்டவருக்கான வழக்குரைஞர்களில் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பதினேழு வயதுடைய இந்த சந்தேகநபர் மீது கொலைக் குற்றச்சாட்டு மற்றும் பாலியல் வன்புணர்வு ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

குறித்த குற்றம் நிரூபிக்கப்பட்டால், தற்போதைய இந்திய சட்டங்களின் கீழ் இவருக்கு அதிகபட்சமாக 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையே வழங்க முடியும். எனினும் சந்தேகநபர் தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த வழக்கின் தீர்ப்பு மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ற)



வானிலை தொடர்பான விவரங்களைத் துல்லியமாகக் கண்டறிந்து தகவல்களை வழங்கக் கூடிய இந்தியாவின் அதிநவீன செயற்கைக்கோள் 'இன்சாட் 3 டி' நேற்றுமுன்தினம் இரவு வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது.(ற)

# தமிழக மாணவர்கள் எழுச்சி அறப்போர் ஆவணப்படமாக

## சென்னையில் நாளை வெளியீடு

சென்னை, ஜூலை 27
இலங்கையில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகளைக் கண்டித்து தமிழக மாணவர்களால் நடத்தப்பட்ட எழுச்சிப் போராட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிப்பட்ட 'அறப்போர்' என்னும் ஆவணப்படம் நாளை சென்னையில் வெளியிடப்படவுள்ளது.

ஈழத் தமிழர்களின் தமிழீழக் கோரிக்கையை தமிழர்கள் அல்லாத பிற இனத்தவரிடம் கொண்டு செல்லும் முயற்சியாக குறித்த ஆவணப்படம் பிரஞ்ச், இத்தாலி, ஜெர்மன், ஸ்பானிஸ் மொழிகளின் உபதலைப்புகளுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆவணப் படம் ஏற்கனவே சுவிட்ஸர்லாந்தில் திரையிடப்பட்டு பெரும் பாராட்டைப் பெற்றநிலையில் தற்போது சென்னையில் திரையிடப்படவுள்ளது.

'அறப்போர்' ஆவணப் படத்தை செங்கொடி மீடியோ வேர்க்ஸ் சார்பில் சி.கபிலன் இயக்கியுள்ளார். (ற)

பெற்றோருக்கு எய்ட்ஸ்:

# ஊரவர்களால் மயானத்துக்கு விரட்டப்பட்ட குழந்தைகள்

பிரதாப்காவ், ஜூலை 27
எய்ட்ஸால் உயிரிழந்த தம்பதியருக்கு பிறந்த 5 குழந்தைகளும் கிராமத்தை விட்டு விரட்டியடிக்கப்பட்ட சம்பவம் உத்தரபிரதேசத்தில் நடந்துள்ளது.

உத்தரபிரதேசத்தின் பிரதாப்காவ் மாவட்டத்தில் உள்ள கிராமத்தில் வாழ்ந்த ஒரு தம்பதியர் எய்ட்ஸ்நோயால் உயிரிந்தனர். அவர்களுக்கு ஒரு பெண் உட்பட 5 குழந்தைகள் இருந்தனர்.

எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டிருந்த பெற்றோர் உயிரிழந்த பின்னர், குழந்தைகளுக்கும் அந்நோய் இருக்கலாம் என்று கருதிய உறவினர்கள் அவர்களை வெறுத்து ஒதுக்க ஆரம்பித்தனர். அதனையடுத்து ஊரார் சேர்ந்து குழந்தைகளை சுடுகாட்டுக்கு விரட்டியுள்ளனர். 5குழந்தைகளும் சுடுகாட்டிலேயே வாழ்க்கை நடத்தி வந்துள்ளனர்.

இத்தகவல் வெளியானதும், சம்பவ இடத்திற்கு விரைந்த அதிகாரிகள் 5 பேருக்கும் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும், அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தை கேள்வியுற்ற அந்த மாநில முதல்வர் அகிலேஷ் யாதவ், "குழந்தைகள் அனைவருக்கும் வங்கி கணக்கு ஆரம்பிக்கப்பட்டு அவர்களுக்கு தலா ஒரு லட்சம் வைப்புச் செய்யப்படும். அவர்கள் பாதுகாப்பாக வாழ அரசு விடுதிக்கு அனுப்பி வைக்கப்படுவர்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# மோடிக்கு எதிராக கையெழுத்திட்டேன்

## திருமாவளவன் கூறுகின்றார்

சென்னை, ஜூலை 27
குஜராத் முதல்வர் நரேந்திர மோடியின் விசா தொடர்பாக ஒபாமாவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் கையொப்பமிட்டேன் என்று திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

குஜராத் முதல்வர் நரேந்திர மோடிக்கு அமெரிக்கா செல்வதற்கான விசா வழங்கக்கூடாது என்று இந்தியாவில் பல கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. அதையடுத்து தி.மு.கவைச் சேர்ந்தவர்கள் அந்த விடயத்தில் தலையிடக் கூடாது என்று அந்தக் கட்சியின் தலைவர் கருணாநிதி தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து திருமாவளவன் கூறுகையில், "குஜராத்தில் நடந்த இனப்படுகொலையை அமெரிக்கா உட்படப் பல வெளிநாடுகள் கண்டித்துள்ளன. இங்கிலாந்தைச் சேர்ந்த 24 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நரேந்திர மோடிக்கு விசா வழங்கக் கூடாது என கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனை அடிப்படையாக வைத்து இந்தியாவிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே கையெழுத்து வாங்கும் முயற்சி நடைபெற்றபோது, நானும் அதில் கையெழுத்து இட்டேன்" என்று தெரிவித்துள்ளார்.(ற)

# இராணுவ இரகசிய ஆவணங்களை பகிரங்கமாக வெளிப்படுத்துவேன்

## மிரட்டுகின்றார் இந்தியாவின் முன்னாள் தளபதி

புதுடில்லி, ஜூலை 27
இந்திய இராணுவத்துக்கு வாகனங்கள் கொள்வனவு செய்ததில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி லஞ்சம் கொடுக்க முன்வந்தமை தொடர்பான ஆவணங்களை பகிரங்கப்படுத்துவேன் என்று இந்திய இராணுவத்தின் முன்னாள் தளபதி, வி.கே.சிங் எச்சரித்துள்ளார்.



இந்திய இராணுவத்துக்கு வாகனங்கள் கொள்முதல் செய்வது தொடர்பாக ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி தேஜிந்தர் சிங் 14 கோடி ரூபா லஞ்சம் கொடுக்க முன்வந்தார் என்று இராணுவத் தளபதி வி.கே.சிங் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதுகுறித்து விசாரணை நடத்திய சி.பி.ஐ. "வி.கே.சிங் தெரிவித்த முறைப்பாடு தொடர்பாக, கூடுதலாக எந்த வொருதகவல்களையோ, ஆவணங்களையோ, அவர் சமர்ப்பிக்காததால், இந்தவழக்கு விரைவில் முடித்துக் கொள்ளப்படும்' என்று அண்மையில் தெரிவித்திருந்தது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வி.கே.சிங், "இந்த வழக்கை தங்களால் விசாரிக்க முடியவில்லை என்று சி.பி.ஐ. கூறட்டும். நான் என்னிடமுள்ள ஆவணங்களை பகிரங்கமாகவே வெளியிடுகிறேன். இவ்வழக்கு தொடர்பான சகல ஆவணங்களும், சி.பி.ஐ.யிடம் சமர்ப்பிக்கப்பட்டு விட்டன. இதற்கு மேல் எதுவும் தேவையில்லை. இதில் ஏதோ தவறு இருக்கிறது. சி.பி.ஐ. என்னிடம் இதற்கு மேல் என்ன எதிர்பார்க்கிறது என்று புரியவில்லை'' என்று தெரிவித்தார்.(ற)

## கென்னடியின் மகளுக்கு தூதுவர் பதவி?

நியூயோர்க், ஜூலை 27
ஜப்பானுக்கான அமெரிக்கத் தூதுவராக, முன்னாள் ஜனாதிபதி கென்னடியின் புதல்வியான கரோலின் கென்னடி நியமிக்கப்படவுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவினாலேயே கரோலின் கென்னடியின் பெயர் இந்தப் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இவரது நியமனம் செனட் சபையால் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில், ஜப்பானுக்கான அமெரிக்கப் பிரதிநிதியாக செயற்படும் முதலாவது பெண் என்ற அந்தஸ்தை பெறுவார். (ற)



1950 ஆம் ஆண்டு கொரிய தீபகற்பத்தில் ஏற்பட்ட போர் 1953 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் திகதி முடிவுக்கு வந்தது. அதில் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். அதன் நினைவாக வட கொரியாவில் கல்லறைத் தோட்டம் ஒன்றை உருவாக்கியுள்ள அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜோங், நேற்று கல்லறைத் தோட்டத்தைத் திறந்து வைத்தார். அங்கு ஆயிரக்கணக்கானவர்கள் கூடி உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். (ற)

## ஒசாமாவின் ஏ.கே. 47 பொதுமக்கள் பார்வைக்கு

நியூயோர்க், ஜூலை 27
அமெரிக்காவில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆவணங்கள் இடம்பெற்றுள்ள கண்காட்சியில் அல்குவைதா இயக்க முன்னாள் தலைவர் ஒசாமா பின்லேடன் பயன்படுத்திய துப்பாக்கியும் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் விர்ஜினியாவில் உள்ள லாங்கீ நகரில், மத்திய உளவுத்துறை நிறுவனமான சி.ஐ.ஏ கண்காட்சி ஒன்றை அமைத்துள்ளது.

அதில் கடந்த 10 ஆண்டுகளில் நடந்த வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வுகளின் ஆவணங்கள் மற்றும் கருவிகள் இடம்பெற்றுள்ளன. அந்தக் கண்காட்சியில் ஒசாமா பின்லேடன் பயன்படுத்திய ஏ.கே 47 ரக துப்பாக்கியும் இடம்பெற்றுள்ளதுடன், பாகிஸ்தானில் ஒசாமா பின்லேடன் பதுங்கியிருந்த வீட்டின் மாதிரியும் இடம்பெற்றுள்ளது.



2011ம் ஆண்டு அமெரிக்க சீல் படையினரால் ஒபாமா சுட்டுக் கொல்லப்பட்டார். அப்போது அவரது உடல் அருகே கிடந்த ஏ.கே.47 துப்பாக்கியே கண்காட்சியில் இடம்பெற்றுள்ளது. (ற)

# இத்தாலியில் மாபியா வேட்டை

## ஹெலிகள், படகுகளுடன் நூற்றுக்கணக்கான பொலிஸார் களத்தில்

ரோம், ஜூலை 27
இத்தாலியின் பல்வேறு பகுதிகயில் மாபியா கும்பல்களை இலக்கு வைத்து இதுவரை இல்லாத அளவுக்கு மிகப்பெரிய தேடுதல் வேட்டையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். அதையடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.





ஹெலிகொப்டர்களும் கடல் ரோந்துப் படகுகளும் பாதுகாப்பு வழங்க நூற்றுக்கணக்கான பொலிஸ் அதிகாரிகள் நகர்களுக்குள் மாபியா வேட்டையில் இறங்கியுள்ளனர். இதுவரை 50க்கும் அதிகமானோர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். இத்தாலியின் தலைநகரிலும் கரையோர நகரான ஓஸ்டியாவிலும் சட்டவிரோதமாக போதைப் பொருள் வியாபாரங்களை இயக்கி வரும் முக்கிய சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் அடங்குகின்றனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இரண்டு முக்கிய குற்றக் கும்பல்களின் முன்னணி புள்ளிகளும் பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பாவில் தேடப்பட்டு வந்த முக்கிய மாபியா தலைவனான றொபேர்டோ பன்னுன்ஸி கம்போடியாவில் கடந்த வாரம் கைது செய்யப்பட்டிருந்தான். 65 வயதான றொபேர்டோ பன்னுன்ஸி உலகின் மிகப் பெரிய கொகெய்ன் போதைப்பொருள் இறக்குமதியாளன் என்று தெரிவித்துள்ள இத்தாலி அதிகாரிகள், அதைத் தொடர்ந்தே இந்த அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்றும் தெரிவித்தனர். (ற)

## இரகசிய கண்காணிப்பு அவசியம் தேவைதான்

### அனுமதி வழங்கியது அமெரிக்க செனட்சபை

வோஷிங்டன், ஜூலை 27
தொலைபேசி உரையாடல்களை இரகசியமாகக் கண்காணிக்கும் அமெரிக்காவின் உளவுத் திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுக்க அமெரிக்க செனட் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பில் செனட் சபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது 217 ஆதரவு வாக்குகளும் எதிராக 205 வாக்குகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இணையத்தளப்பாவனை மற்றும் தொலைபேசிப் பதிவுகளை, இரகசியமாக கண்காணிக்கும் திட்டங்களை அமெரிக்க தேசிய பாதுகாப்பு முகவர் நிலையம் மேற்கொண்டுவந்தது.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு முகவர் நிறுவனத்தினால் இவ்வாறு புலனாய்வுத் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றமை கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தது.

இது போன்ற செயற்பாடுகள் தனிப்பட்டவர்களின் இரகசியத் தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது.

எனினும் இந்தத் திட்டம் நாட்டின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு இது போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுஎன்று அமெரிக்கா தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றது. (ற)




## உலகின் உயரமான கட்டடத்தின் கட்டுமானங்கள் ஆரம்பமாகின

பிஜிங், ஜூலை 27
டுபாயில் உள்ள பர்ஜ் கலிபா என்னும் 828 மீற்றர் உயரமுடைய வணிக வளாகமே தற்போது உலகிலேயே உயரமான கட்டிடம் என்ற பெருமையைப் பெற்று விளங்குகின்றது.

இதனைக் கட்டி முடிப்பதற்கு ஐந்து ஆண்டுக் காலம் ஆனநிலையில், இதனை முறியடிக்கும் விதமாக தற்போது சீனாவில் 838 மீற்றர் உயரமுள்ள கட்டிடம் ஒன்று அமைக்கப்பட உள்ளது. இதன் கட்டுமான வேலைகள் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமாகி யது.

"ஸ்கை சிட்டி" என்று பெயரிடப்பட்டுள்ள இந்த கட்டிடம் மத்திய சீனாவில் உள்ள சங்க்ஷா என்ற இடத்தில் கட்டப்பட உள்ளது. அனைவரையும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கும் வகையில் பத்தே மாதங்களில் இந்தக் கட்டிடம் கட்டி முடிக்கப்படும் என்று கட்டுமான வேலையில் ஈடுபட்டுள்ள 'பிராட் குரூப்' நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தத் திட்டத்தின் மதிப்பு 1.46 பில்லியன் அமெரிக்க டொலராகும். (ற)



## பேரணிகளுக்கு எகிப்தில் தடை

### அந்நாட்டு இராணுவம் அறிவிப்பு

கெய்ரோ, ஜூலை 27
எகிப்தில் பேரணிகளை நடத்துவதற்கு அந்த நாட்டு இராணுவம் தடை விதித்துள்ளது.

வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் முர்சியின் ஆதரவாளர்களால் நேற்றைய தினம் பேரணி ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும் பேரணிக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று அறிவித்துள்ள எகிப்து இராணுவ தளபதி ஜென்ரல் அப்டேல் பட்டா அல் சிசி, அவ்வாறான பேரணிகள் நடத்தப்படுமாக இருந்தால், அதனை கட்டுப்படுத்த இராணுவம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மொஹமட் முர்சியை விடுவிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையும் வலியுறுத்தியுள்ளது.(ற)

## கனடாவில் இருந்து அமெரிக்காவுக்கு நீந்திச் சென்றவர் கைது

### விபரீத முயற்சிக்கு போதையே காரணம்

றெறன்றோ, ஜூலை 27
குடிபோதையில் கனடாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஆற்றில் நீந்திச் செல்ல முயன்றவர் தற்போது பொலிஸாரின் பிடியில் கம்பி எண்ணுகின்றார்.

கனடாவின் ஆன்டாரியோ நகரைச் சேர்ந்த ஜான் மோரில்லோ (வயது 47). இவர் கடந்த 22ஆம் திகதி இரவு அக்கம், பக்கத்தினருடன் சேர்ந்து மது அருந்தியுள்ளார்.

அப்போது கனடாவில் இருந்து அமெரிக்காவுக்கு டெட்ராய்ட் ஆற்றின் வழியாக செல்ல முடியுமா? என்று வாதம் எழுந்தது.

அதையடுத்து பொங்கி எழுந்த மோரில்லோ, தன்னால் முடியும் எனக் கூறி, ஆற்றின் குதித்து நீந்த ஆரம்பித்தார். நீந்தி கொண்டிருந்த மோரில்லோ திடீரென காணாமல் போகவே உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து 4 ஹெலிகொப்டர்கள், 3 படகுகளில் பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

பெரும் பிரயத்தனத்தின் மத்தியில் அதிகாலை ஒருமணிஅளவில் ஹெலிகொப்டரின் உதவியுடன் மோரில்லோ மீட்கப்பட்டார்.

இதன் பின் பொலிசார் நடத்திய விசாரணையில், "நான் செய்தது பெரிய தவறுதான். அதற்காக எல்லோரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். என்னால் முடியாது என்று சிரித்தவர்களிடம் அதை நிரூபித்து காட்டவே குதித்தேன்" என்று சாவகாசமாகப் பதிலளித்துள்ளார் மோரில்லோ.

மோரில்லோ மீது கப்பல் வழியில் நீரோட்டத்தில் நீந்திய குற்றத்தில் வழக்கு தொடர விண்ட்சர் துறைமுக ஆணையம் முடிவு செய்துள்ளது. இக்குற்றம் நிரூபிக்கப்பட்டால் ரூ.3 லட்சம் முதல் ரூ.15 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படும். (ற)

## தாதிய பயிற்சி நெறி; மேன்முறையீடு சமர்ப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் தாதிய சேவைப் பயிலுநர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகத்தேர்வில் தெரிவு செய்யப்படாதவர்கள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை யாழ். மாவட்ட செயலகத்தில் உள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு மேன்முறையீட்டை சமர்ப்பிக்குமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-14


# வாடகைக்கு உண்டு



இல.388, 6ஆம் யூனிற்,
இராமநாதபுரம், வட்டக்கச்சி,
கிளிநொச்சியில்
சகல வசதிகளுடன் கூடிய
கட்டடத் தொகுதி
வாடகைக்கு உண்டு.

தனியார் நிறுவனங்கள், வங்கிகள் விரும்பத்தக்கது.

தொடர்பு: சிரேஸ்,
077 064 8175
senthurans11@gmail.com

(29898)(3.5.6)



# அழகு தொடக்கம் ஆரோக்கியம் வரை........

- ஒரே வாரத்தில் நீங்களா என அதிசயிக்கும் கருமைநிற நீக்கம் கரும்புள்ளிகள், கருவளையம், கருந்திட்டுக்கள் கொழுப்பு படிவு, உதடு, கழுத்து கருமை நீக்கம்
- முதுமை விரட்டும் இளமை சிகிச்சைகள், முகப்பொலிவூட்டும் மூலிகைப் பேசியலுடனான சிகிச்சைகள், கழுத்து காய்கள், பாலுண்ணிகளுக்கான சிகிச்சைகள்.
- இடுப்பு,வயிறு போன்ற மிதமிஞ்சிய உடல் வளர்ச்சிக்கான சிகிச்சைகள், உடற்பருமன் கூட்டுதல்,குறைத்தல்.
- முடிசார்ந்த சிகிச்சைகள், முடி உதிர்வு, உடைவு, நரை போன்றன.


முற்பதிவு அவசியம்-077 735 1954



சானியா ஹேபல் கெயர்
இல.262, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,
ஆயுள் வேத வைத்தியசாலை,யாழ்.

(29954)(5.6.3)


## மின் விநியோகத்தில் தடை



யாழ்ப்பாணம், ஜூலை 27

வீதி அகலிப்புப் பணிகளுக்காகவும் புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

இன்று சனிக்கிழமை மருதனார்மடத்தின் ஒரு பகுதி, இணுவில்,கோண்டாவில், கொக்குவில், கொடிகாமம், மிருசுவில், விடத்தற்பளை, கெற்பலி, எழுதுமட்டுவாழ், கொடிகாமம் முதல் வரணி வரையான பிரதேசங்கள், சரசாலை,மட்டுவில் பிரதேசங்கள், வாதரவத்தை, வீரவாணி பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

நாளை ஞாயிற்றுக்கிழமை புன்னாலைக் கட்டு வன், ஈவினை, புத்தூர், ஆவரங்கால், வீரவாணி, வாதரவத்தை, ஊறணி, அச்சுவேலி, வல்வை, கொடிகாமம், மிருசுவில், விடத்தற்பளை, கெற்பேலி, எழுது மட்டுவாழ், கொடிகாமம் முதல் வரணி வரையான பிரதேசங்கள், சரசாலை, மட்டுவில் பிரதேசங் கள், நெடுங்குளம், பூம்புகார், நாவலடி ஆகிய இடங்களிலும்-

29 ஆம் திகதி திங்கட்கிழமை கொடிகாமம் முதல் வரணி வரையான பிரதேசங்கள், சரசாலை,மட்டுவில் பிரதேசங்கள், வாதரவத்தை, வீரவாணி பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடிகாமம் முதல் வரணி வரையான பிரதேசங்கள், சரசாலை,மட்டுவில் பிரதேசங்கள், வாதரவத்தை, வீரவாணி பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

31 ஆம் திகதி புதன்கிழமை, ஓகஸ்ட் முதலாம் திகதி வியாழக்கிழமை, 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் சரசாலை, மட்டுவில் பிரதேசங்கள், வாதரவத்தை, வீரவாணி, புத்தூர் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ந)

## ஆங்கில ஆசிரியர் பயிற்சி நெறி

கிளிநொச்சி மாவட்ட கல்வி வளர்ச்சி அறக் கட்டளையின் ஆதரவில் ஆங்கில ஆசிரியர் தேவையைப் பூர்த்தி செய் யும் முகமாக பாடசாலை விட்டு விலகிய அடிப்படை ஆங்கில அறிவுள்ள தொழில் தேடும் இளைஞர்களுக்கான ஆங்கில ஆசிரியர் பயிற்சிநெறி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் ஆசிரியர்கள் கொண்ட அணியினர் பயிற்சியினை வழங்குகின்றனர். தெரிவு செய்யப்படுவோர் வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுசரணையோடு ஆரம்பப் பிரிவு ஆங்கில பயிற்சி ஆசிரியர்களாக வேதனத்துடன் ஒரு வருட காலத்துக்கு பாடசாலைகளில் நியமிக்கப்படுவர். ஆர்வமுடைய இளைஞர்கள் 0777 228 243 இலக்கத்தோடு தொடர்பு கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட கல்வி வளர்ச்சி அறக்கட்டளை செயலாளர் அறிவித்துள்ளார். (எ)

## லயன்ஸ் கழக திட்டமிடல் மாநாடு

சர்வதேச லயன்ஸ் கழக்த்தின் 306 BI பிராந்தியம் 10 இன் திட்டமிடல் மாநாடு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பிராந்திய தலைவர் பேராசிரியர் இரா.சாந்தன் தலைமையில் யாழ். சிவன் பண்ணை வீதியில் உள்ள சிற்றி கம்பஸில் நடைபெறவுள்ளது. (ஒ-14)


# உடனடி வேலைவாய்ப்பு

இலங்கையில் உள்ள முன்னணி நிதி நிறுவனம் ஒன்றிற்கு
யாழ். மாவட்டத்தில் கீழ்வரும்
பதவி வெற்றிடங்கள் உள்ளன

**நிதி திட்டமிடலாளர்கள்:**

- 18-45 வயதிற்குட்பட்ட இருபாலாரும் விண்ணபிக்கலாம்
- க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்திபெற்றிருக்கவேண்டும்.
- சந்தைப்படுத்தல் துறையிலோ/காப்புறுதித் துறையிலோ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**மாதாந்த நன்மைகள்:**

- அடிப்படைத் கொடுப்பனவு - 22000/=
- அத்துடன் விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவு. உங்கள் சுய விவரங்களை தொலை பேசி இலக்கத்துடன் 03.08.2013 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறுகேட்டுக்கொள்கின்றோம்.

விளம்பர இல. 4465,
மே/பா, உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(29953)
(45.6.3)


## 3ஆவது பிறந்தநாள் வாழ்த்து



உதயகுமாரன் -றாகினி
தம்பதியரின் இரட்டைச் செல்வங்களான
**கம்சியா,கனிசா**

தங்களது மூன்றாவது பிறந்த தினத்தை மந்துவில் மேற்கிலுள்ள குணப்பெரியப்பாவின் இல்லத்தில் இன்று (27.07.2013) சனிக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள்.
இவர்கள் பல கலைகளையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

Happy Birthday

வாழ்த்துபவர்கள்:
அப்பா.அம்மா, பெரியன்ரா, பெரியப்பா, சின்னரன்ரா, குட்டிச் சித்தா-சித்தி, ரவிமாமா-அத்தை, சிறிமாமா-அத்தை, அக்கராயன் மாமா-அத்தை, வித்திமாமா-அத்தை, அம்மம்மா, தாத்தா, அப்பம்மா, அஜந்தன் அண்ணா(சுவிஸ்), கார்த்திஅண்ணா, சது அண்ணா,அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், கண்டா அம்மம்மா, வினோச்சித்தி.

மந்துவில் மேற்கு, கொடிகாமம்.    நா.உதயகுமாரன் (தேவன்)

(29607)(3.5.6)

## 6ஆவது பிறந்த நாள் வாழ்த்து



*செல்வன் சுதாகர் சத்யன்*

சுதாகர் கெங்கேஸ்வரி தம்பதியரின் புதல்வன் சுதாகர் சத்யன்
இன்று (27.07.2013) சனிக்கிழமை தனது பிறந்த நாளை பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத்தெருவில் இருக்கும் தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.
இவரை அன்பு அம்மா, அம்மப்பா, அம்மம்மா, லண்டன் அம்மப்பா, அம்மம்மா, லண்டன் ஸ்ரீமாமா குடும்பத்தினர், டென்மார்க் வாசுமாமா, பாங் அப்பப்பா, முரளி மாமா குடும்பத்தினர், ஜேர்மனி பெரியம்மா குடும்பத்தினர் மற்றும் மேகலா சித்தி, ரத்னா சித்தி, அண்ணன்மார்களான ஜதுஷன், பிரவின் ஆகியோரும் இவரை நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

செ. ஜெகசோதி
(அம்மப்பா)

(A.11054)(6.3.45)

ஸ்ரீ ராம ஜெயம்

# வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.



# வரலட்சுமி விரத உற்சவம்



**16.08.2013 வெள்ளிக்கிழமை**

**விஜய வருஷ வரலட்சுமி விரதம் நடைபெற இருப்பதால் விரத நூல் பெறும் அடியார்கள் 10.08.2013 சனிக்கிழமைக்கு முன் பெயர் நட்சத்திரங்களைக் காரியாலயத்தில் பதிவு செய்து எம் பெருமாட்டி மகாலட்சுமியின் திருவருளைப் பெற்று நல் வாழ்வு வாழ்வோமாக**

ஆதீன மகா சபை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2476

(அ/11052)(3.5.6)

# நெடுந்தீவில் குளங்கள் விரைவில் ஆழமாக்கப்படும்



யாழ்ப்பாணம், ஜூலை 27
நெடுந்தீவுப் பகுதியில் குளங்களை ஆழமாக்கும் திட்டம் விரைவில் செயற்படுத்தப் படவுள்ளது. இதற்கென புள்டோசர், பெக்கோ இயந்திரங்கள் இன்னும் சில தினங்களில் நெடுந்தீவுக்கு வந்து சேரும் என நெடுந்தீவு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.
குளங்களை ஆழப்படுத்துவதன் மூலம் மழை நீரைத் தேக்கி உவர்த்தன்மையை நீக்கும் திட்டத்தினூடாக குளங்கள் உள்ள பகுதிகளில் விவசாய நடவடிக்கைகள் காலக்கிரமத்தில் முன்னெடுக்க முடியும் எனவும் கூறப்பட்டது. (வ-7)

# தென்னிலங்கைச் சாராயத்தை நாடும் மதுப்பிரியர்கள்



யாழ்ப்பாணம், ஜூலை 27
குடாநாட்டில் தென்னிலங்கைச் சாராயத்துக்கு அதிகளவு கிராக்கி ஏற்பட்டுள்ளதால் உள்ளூர் பனஞ் சாராயத்துக்கு மவுசு குறைவடைந்துள்ளதாக பனை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.
கடந்த காலங்களில் குடாநாட்டில் பனஞ்சாராயம், பனம் கள் போன்றவை மதுப்பிரியர்களின் பாவனையில் இருந்தது. இதனால் பெரும் கிராக்கி இருந்ததுடன் வெளி மாவட்டங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. அத்துடன் அதிகளவான நுகர்வும் இருந்தது.
எனினும் தற்போது மதுப்பிரியர்கள் தென்னிலங்கையிலிருந்து தருவிக்கப்படுகின்ற மதுபான வகைகளுக்கு ஆர்வம் காட்டுவதால் உள்ளூர் பனஞ்சாராயம், கள் என்பவற்றை கைவிட்டுள்ளனர்.
இதன் காரணமாக உள்ளூர் பனஞ்சாராயம், கள் என்பவற்றுக்கான கிராக்கி வீழ்ச்சி கண்டுள்ளது. தென்னிலங்கைப்பகுதியில்இருந்து தருவிக்கப்படுகின்ற மதுபான வகைகள், உள்ளூர் மதுபான வகைகளை விட விலைகள் குறைவாக விற்பனை செய்யப்படுவதுடன் அதிகளவான செறிவுத் தன்மையும் காணப்படுவதால் மதுப்பிரியர்கள் தென்னிலங்கைப் பகுதி மதுபான வகைகளின் பாவனையாளர்களாக மாறியுள்ளனர்.
ஆனால் உள்ளூர் பனஞ்சாராயம் செறிவு குறைவாகவும் மருத்துவ ரீதியாக பக்கவிளைவுகள் குறைவாகவும் கொண்டிருப்பதாக ஆய்வுகள் கூறும் நிலையில் மதுப்பிரியர்கள் விலை குறைவாக விற்பனை செய்யப்படும் மதுபான வகைகளுக்கு அடிமையாகியுள்ளனர்.
மதுப்பிரியர்களது இத்தகைய மாற்றமும் உள்ளூர் பனஞ்சாராயத்துக்கான கிராக்கியை குறைத்துள்ளது.
இதன் காரணமாக பனஞ்சாராய உற்பத்தியாளர்கள் தமக்கான முதலீடுகளைக் கைவிட்டுள்ளனர். எனினும் வெளிநாடுகளில் பனஞ்சாராயத்துக்கான மவுசு இன்னும் குறைவடையவில்லை. அதற்கான சந்தை வாய்ப்புக்கள் உள்ளன. இது தொடர்பாக மதுப்பிரியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினால் மீண்டும் சந்தை வாய்ப்பைப் பெறமுடியும் எனவும் தெரிவித்துள்ளது. (வ-14)

## பசுமாடு கடத்த முயன்றவருக்கு விளக்கமறியல்


தென்மராட்சி, ஜூலை 27
தென்மராட்சி தெற்கு தனங்களப்பு பகுதியில் 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பசு மாடுகளை கடத்த முயன்ற நபர் சாவகச்சேரி பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டார். இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.
குறித்த நபரை நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-9)

## கல்லூரிக்கு இரு மருங்கிலும் மூடப்படாத குழிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 27
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு முன்பாக அமைக்கப்பட்ட வீதியின் இரு மருங்கிலும் வெட்டப்பட்ட குழிகள் மூடப்படாத நிலையில் உள்ளமை குறித்து பெற்றோர் கவலை தெரிவித்தனர்.
தெல்லிப்பழை- பண்டத்தரிப்பு வீதி அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டது. வீதி புனரமைப்புக்காக வீதியோரத்தின் பல இடங்களில் வெட்டப்பட்ட குழிகள் இன்னமும் மூடப்படாத நிலையில் காணப்படுகின்றன.
இந்த வீதியில் இரவு வேளையில் செல்வோர் பாதிக்கப்படுவதுடன், மழை காலத்தில் குறித்த குழிக்குள் வெள்ளம் தேங்கும் அபாயம் காணப்படுவதாகவும் அந்த வேளையில் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் தவறி விழும் அபாயம் ஏற்படலாமெனவும் தெரிவித்தனர்.
உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி குழிகளை மூடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் பெற்றோர் கேட்டுள்ளனர். (வ-9)

# ஆயிரம் புசல் விதை நெல் பெரும் போகத்துக்காக

## விதை உற்பத்தி சங்கம் ஏற்பாடு



யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ்.குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் பெரும்போக நெற்செய்கைக்கென ஆயிரம் புசல் விதை நெல்லை கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளர் ரி.ரவி மயூரன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;
கடந்த போகத்தின்போது கடும் மழைத் தாக்கத்தால் நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. இதன் காரணத்தால் இந்த போகத்துக்கான நெற் செய்கைக்குரிய விதை நெல்லை முழுமையாகப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
ஒப்பந்தக்கார விவசாயிகளிடம் இருந்து இதுவரைக்கும் பிஜி 406 இனத்தைச் சேர்ந்த 450 புசல் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. கொள்வனவு செய்யப்பட்ட நெல்லை ஆராய்ச்சிக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
குடாநாட்டில் விவசாயிகள் அதிகமாக பிஜி 406 இன நெல்லையே செய்கைக்கு பயன்படுத்துகின்றனர். இதன் காரணமாக இந்த இனத்தைச் சேர்ந்த விதை நெல்லை அதிகமாக விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
விதை நெல் வைத்திருக்கும் விவசாயிகள் சங்கத்துடன் தொடர்பு கொண்டு அவற்றை வழங்க முடியும். குடாநாட்டில் இந்த முறை பெரும் போகத்துக்கான நெற்செய் கைக்குரிய விதை நெல் லுக்கு பெரும் பற்றாக் குறையும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள் ளது.
கடந்த போகத்தின்போது மழையின் தாக்கத்தால் வெள்ளத்தில் மூழ்கி நெற் பயிர்கள் பெரிதும் பாதிக் கப்பட்டன.
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெல்லை ஆராய்ச்சிக்கு உட்படுத்தி, அதன் முளை திறன் இருப்பது உறுதிப்படுத்திய பின்னரே செய்கைக்கு பயன்படுத்த முடியும் என்றும் விவசாய ஆராய்ச்சியாளர் ஒருவர் தெரிவித்தார்.
இதன் காரணமாக விவ சாயிகள் சிலர் தமது கையி ருப்பில் உள்ளவிதைநெல்லை ஆராய்ச்சிக்கு உட்படுத்தவும் நடவடிக்கைஎடுத்துள்ளனர்.(வ-17)

## மக்கள் வங்கியால் இலகுகடன் அடகு நகையை மீட்பதற்காக



யாழ்ப்பாணம், ஜூலை 27
மக்கள் வங்கியில் தங்க நகைகளை அடகு வைத்து மீளத் திருப்ப முடியாத நிலையிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு அடகுக்கான இலகு கடன் திட்டத்தை மக்கள் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளதாக மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.சுவீந்திரன் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
மக்கள் வங்கியில் தங்க நகைகளை அடகு வைத்து கடன் பெற்றவர்கள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் அவற்றை மீளத் திருப்ப முடியாமல் தமது விலை மதிப்பற்ற பூர்வீகமான தங்க நகைகளை இழக்க நேரிட்டுள்ளது. ஒரு வருட காலத்துக்குள் நகைகளை மீளப்பெற முடியாமல் ஏல விற்பனையில் தமது நகைகளை இழக்க நேரிட்டுள்ளது.
இந்த ஏல விற்பனையிலிருந்து நகைகளை மீட்பதற்கு வசதியாக மக்கள் வங்கி வாடிக்கையாளர்களுக்கு இலகு கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
இதனடிப்படையில் 24 மாதங்களுக்கு மேற்படாதவாறு மாதாந்தம் அல்லது காலாண்டுக்கு ஒரு முறையாக தவணைப்பணமாககடன்தொகையைச் செலுத்துவதற்கு வசதியாக இந்த இலகுகடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
நகைகளை அடகு வைக்கும் போது கணிக்கப்பட்ட வட்டி வீதத்தின் அடிப்படையில் அடகு நகைக்காக வழங்கப்பட்ட முற்பணத் தொகைக்கு இந்த இலகு கடன் வழங்கப்படும்.
இலகு கடனைப் பெறுபவர் தற்போது நிலுவையிலுள்ள வட்டிப் பணத்தை செலுத்திய பின்னர் அடகு முற்பணத் தொகைக்கு கடனுக்கென விண்ணப்பிக்க முடியும்.
இலகு கடன் சேவையை சகல மக்கள் வங்கிக் கிளைகளிலும், சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (வ-14)

# சாவகச்சேரி பிரதேச சபையின் 19 வேலைத்திட்டங்கள்

## பன்முகப்படுத்தப்பட்ட நிதியில்

தென்மராட்சி,ஜூலை 27
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் இவ்வருடத்துக்குரிய வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் தென்மராட்சி பிரதேசத்துக்கான நிதி ஒதுக்கீட்டில் சாவகச்சேரி பிரதேச சபையால் மேற்கொள்ளப்படவுள்ள19வேலைத் திட்ட மற்றும் நிதி ஒதுக்கீடு விவரங்கள் வருமாறு:-
கைதடி கிழக்கு இந்து மயானம் மற்றும் கலைமகள் துர்க்கா சனசமூக நிலையக் கட்டடப் புனர் நிர்மாணம் (1,47,000) ரூபாவும், கோவிலாக்கண்டி காந்தி சனசமூக நிலையத்துக்கு குடிநீர்த் தாங்கி நிர்மாணம் (73,500) ரூபாவும், கைதடி தென்கிழக்கு விநாயகர் ச.ச.நிலைய கலாசார மண்டபம் நிர்மாணம் (58,000)ரூபாவும், கைதடி தென்கிழக்கு வளர்மதி ச.ச. நிலையத்துக்குத் தளபாட விநியோகம் (49,000) ரூபாவும், மட்டுவில் கிழக்கு மோகனதாஸ் ச.ச.நிலையப் புனரமைப்பு வேலைகள் (49,000)ரூபாவும்,தாவளை-இயற்றாலை விநாயகர் ச.ச.நிலையத் தளபாட விநியோகம் (45,000) ரூபாவும், வரணி-இயற்றாலை பாரதி ச.ச.நிலையப் புனரமைப்புவேலைகள்(49,000) ரூபாவும், கல்வயல் பாலமுருகன் ச.ச.நிலையத்துக்குத் தளபாட விநியோகம் (49,000) ரூபாவும், கச்சாய் வடக்கு விறுமர் ச.ச. நிலையத்துக்குத் தளபாட விநியோகம் (49,000) ரூபாவும், கைதடி கிழக்கு துர்க்கா ச.ச.நிலையக் கட்டடப் புனரமைப்பு (88,000) ரூபாவும், கைதடி மத்தி குமரநகர் உதயசூரியன் ச.ச. நிலையக் கட்டடப் புனரமைப்பு (88,000) ரூபாவும், கைதடி மேற்கு பாரதி சனசமூக நிலையத்துக்கு குடிநீர்த் தாங்கி அமைத்தல் (93,100) ரூபாவும், மந்துவில் மேற்கு விநாயகர் ச.ச. நிலையக்கட்டடப்புனரமைப்பு (88,000) ரூபாவும், மந்துவில் வடக்கு குட்மன் ச.ச. நிலைய கூரைதிருத்த வேலை (49,000) ரூபாவும், கைதடி உதயசூரியன் ச.ச.நிலையக் கட்டடம் புனரமைத்தல் (98,000) ரூபாவும், வரணி மாசேரி கலைமகள் ச.ச. நிலையக் கட்டடம் புனரமைத்தல் (49,000) ரூபாவும், வரணி வடக்கு விநாயகர் ச.ச.நிலையத்துக்கு தளபாடங்கள், புத்தகங்கள் வழங்கல் (49,000) ரூபாவும், வரணி மாசேரி மாணிக்கவாசகர் வீதி திருத்தம் (98,000) ரூபாவும், சரசாலை வடக்கு பொம்பிக்குளம் மயானம் புனரமைப்பு வேலைகள் (1,47,000) ரூபாவும், மொத்தமாக 13 லட்சத்து 63 ஆயிரத்து 200 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (வ-9)

# கல்வியில் பின் தங்கிய மாவட்டம் திருமலை

## கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கவலை



திருகோணமலை,ஜூலை 27
கிழக்கு மாகாணத்தில் ஏனைய இரண்டு மாவட்டங்களை விடவும் திருகோணமலை மாவட்டம் தொடர்ந்தும் கல்வியில் பின்னோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. இதற்கு அதிபர்கள் போரைக் காரணம் காட்டி தப்பித்துக் கொள்ள முயல்வதை இனி மேல் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

போர் எம்மை விட்டுப் போனாலும் போரை நாம் காரணம் காட்டி கொண்டிருப்பது நாம் சமூகத்துக்குச் செய்து கொண்டிருக்கின்ற துரோகமாகும். இவ்வாறு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.பீ. எம்.நிசாம் தெரிவித்தார்.

2010ஆம், 2011ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தர மற்றும் சாதாரண தரப் பரீட்சையில் கிழக்கு மாகாணப் பாடசாலைகள் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்காக நடத்தப்பட்ட கூட்டம் திருகோணமலை சென். ஜோசப் கல்லூரியில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலை மாவட்டத்தில் நிலவி வரும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக இந்த வருட இறுதிக்குள் மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் 452 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் இந்த நியமனம் வழங்கப்படவுள்ளதால், 452 ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம் இந்த மாவட்டத்தில் இருந்து கிடைக்கவில்லை.

> ஆசிரியர்கள் வருடம் முழுவதும் சும்மா இருந்துவிட்டு தாம் ஓய்வூதியம் பெறும் வழியாக அந்த நியமனத்தைக் கருதுகிறார்கள்.

திருகோணமலையில் குறைந்த பட்சம் ஆசிரியர் தொழிலுக்கு தகுதியுடையவர்களை யாவது நாம் உருவாக்கத் தவறிவிட்டோம்.

இந்தநிலையில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை கொண்டு அவற்றை நிரப்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்த விடயம் நாம் கல்வியில் பின்தங்கியிருக்கிறோம் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். வெளிமாவட்ட ஆசிரியர்கள் ஓரிரு மாதங்களில் அவர்களின் சொந்த ஊருக்கு மாறிச் செண்டு விடுகிறார்கள் என்று அதிபர்கள் அடிக்கடி என்னிடம் முறைப்பாடு செய்கின்றனர்.


பாடசாலைத் தேவைகள் குறித்து அரசியல்வாதிகளிடம் கோரிக்கை முன்வையுங்கள். அப்போது அவர்கள் ஆசிரியர் இடமாற்றத்தில் தலையிடமாட்டார்கள். இந்த விடயங்கள் அரசியல்வாதிகளுக்கு தெரியாமல் உள்ளன.

எனவே அரசியல்வாதிகளை குறைகூற முடியாதுள்ளது. பாடசாலைகளில் ஆலோசனை வழிகாட்டல் பிரிவு என்பது ஒரு சாதாரண விடயம் என்று ஆசிரியர்கள், அதிபர்கள் நினைத்துக் கொண்டிருப்பது மோசமான விடயமாகும்.

சூழல், குடும்பம், சமூகம் என்று பல்வேறு காரணிகளால் பாதிக்கப்பட்ட ஒரு மாணவனை சாதாரண வாழ்க்கை முறைக்கு கொண்டு வருவதென்பது சுலபமான விடயமல்ல.

ஒரு மாணவனை அவனது பிரச்சினையில் இருந்து விடுவிக்க ஆறு மாதங்களும் எடுக்கலாம்; ஆறு வருடங்களும் எடுக்கலாம். இதற்காகவே பாடசாலைகளில் ஆலோசனை வழிகாட்டலுக்காக பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

ஆனால் நாம் எதற்கு நியமிக்கப்படுகிறோம் என்று தெரியாமல் அந்த ஆசிரியர்கள் வருடம் முழுவதும் வேலை எதுவும் செய்யாது இருந்துவிட்டு ஓய்வூதியம் பெறும் வழியாக அந்த நியமனத்தைக் கருதுகிறார்கள். – என்றார் (ச)



அம்பாறை, பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட உல்லை அறுகம்பைக்கு உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்து வருகின்றது. இவ்வாறு வருகை தந்த உல்லாசப் பயணிகள் உல்லாசமாக நடமாடுகின்றனர்.

## கார்மேல் பற்றிமா கல்லூரி சாதனை

எருவில்,ஜூலை 27
2012 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ சாதாரணதர பெறுபேற்றின் அடிப்படையில் மகாத்மா காந்தி புலமைப்பரிசில் வழங்கலில் மாவட்டமட்டத்தில் ஆறு இடங்களையும் பெற்று கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலை சாதனை படைத்துள்ளது.

இலங்கையில் கல்வி பயிலும் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு 2006ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரைக்கும் மகாத்மா காந்தி புலமைப்பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனடிப்படையிலே 2006ஆம் ஆண்டு 100 பேருக்கு வழங்கப்பட்ட புலமைப்பரிசில் திட்டம் 2012ஆம் ஆண்டு 150 பேருக்கு என அதிகரித்துச் செல்கின்றது. இந்தத் திட்டம் மாணவர்களின் கற்றலுக்கு ஊக்கமளிக்கும் வகையிலே அமைந்திருக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலையே மாவட்டத்துக்கான ஆறு இடங்களையும் பெற்றுக்கொண்டமை பெருமையைத் தேடிக்கொடுத்துள்ளது என்று கல்லூரி முதல்வர் எம்.ஸ்ரீபன் மத்தியு தெரிவித்தார். (ச-31)

## கிழக்கில் டெங்கு ஒழிப்பு வீடு, வீடாகச் சோதனை



வாழைச்சேனை,ஜூலை 27
மட்டக்களப்பு,வாழைச்சேனை, ஓட்டமாவடி மற்றும் கோறளைப்பற்று மத்தி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் இடம்பெற்றது.

இந்த வேலைத் திட்டம் ஓட்டமாவடி அல்- கிம்மா நிறுவனத்தின் அனுசரணையில் ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை பிரதேச சபைகளினதும், பொலிஸாரினதும் உதவியுடன் இடம்பெற்றது.

வீதிகளில் இருந்த குப்பைகளை அகற்றியதுடன், வீடு வீடாகச் சென்று டெங்கு பரவக் கூடிய இடங்களை இனங்கண்டு அவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (ச)

## சட்டவிரோத மீன்பிடியால் கிழக்கு மீனவர்கள் பாதிப்பு




கொழும்பு,ஜூலை 27
மட்டக்களப்பு மாவட்ட கடல் பிரதேசத்தில் வெளிமாவட்ட மீனவர்களின் வருகையால் தங்களது வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுகின்றன என்று உள்ளூர் மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

வெளிமாவட்ட மீனவர்கள் தடைசெய்யப்பட்டுள்ளவலைகளை பயன்படுத்தி, மீன்களை பிடித்துச் செல்கின்றனர் என்று மட்டக்களப்பு மாவட்ட மீனவர்கள் கூறு கிறனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜூன் மாதம் தொடங்கி ஒக்ரோபர் மாதம் வரையிலான காலப் பகுதி கரைவலையில் மீன் பிடிக்கும் காலம். அதன்போது வெளிமாவட்ட மீனவர்கள் சட்டவிரோதமான வகையில் அங்கு வந்து மீன் பிடித்து தமது வருமானத்துக்கு இடையூறு விளைவிக்கும் என்று மாவட்ட கரைவலை உரிமையாளர்கள் சங்கம் கூறுகிறது.

தொடர்ந்து இவ்விதம் சட்டவிரோதமாக மீன்பிடித்தலில் ஈடுபட்டால் மீன்படி உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மட்டக்களப்பு மாவட்ட மீன்பிடி உதவி இயக்குநர் ஜோர்ஜ் தெரிவித்தார். (ச)

## பிரத்தியேக வகுப்புகள் நடைபெறும் இடம் அவதானிப்பு



வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறும் இடங்களை வாழைச்சேனை பிரதேச செயலர் திருமதி ரி.தினேஸ் தலைமையிலான குழுவினர் வியாழக்கிழமை சென்று பார்வையிட்டனர்.

இதன்போது ஞாயிற்றுக்கிழமை, விடுமுறை தினங்களிலும் மற்றும் இரவு நேரங்களிலும் பிரத்தியேக வகுப்புக்கள் நடத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது.

பிரத்தியேக வகுப்பு நடைபெறும் இடங்களில் குடிதண்ணீர், சுகாதார வசதிகள் மற்றும் சுற்றுச் சூழல் விடயங்கள் தொடர்பாகவும் பிரத்தியேக கல்வி நிலைய உரிமையாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. (ச)

## கைகலப்பில் இருவர் காயம்

மட்டக்களப்பு,ஜூலை 27
மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகளுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் இருவர் காயமடைந்துள்ளனர்.

வந்தாறுமூலையில் பிரதேச விவசாய சங்க நிர்வாகத் தெரிவு வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

இதன்போது விவசாயிகளுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இருவர் காயமடைந்துள்ளனர் என்று ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு படுகாயமடைந்தவர்களில் ஒருவர் செங்கலடி பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

மற்ற நபர் ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டு வீடு திரும்பியுள்ளார். (ச)

## வந்தாறுமூலையில் கைக்குண்டு மீட்பு



மட்டக்களப்பு,ஜூலை 27
மட்டக்களப்பு மாவட்டத்தின் வந்தாறுமூலையில் வியாழக்கிழமை கைக்குண்டொன்று மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

வந்தாறுமூலை,களுவன்கேணி வீதியிலுள்ள வெற்றுக் காணியொன்றில் நிலத்தில் புதையுண்ட நிலையில் காணப்பட்ட கைக்குண்டொன்று மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது என்று படையினர் தெரிவித்தனர். (ச)

## டெங்கு வைரஸ் தொடர்பில் ஆராய பரிசோதனை வசதி

கொழும்பு,ஜூலை 27
டெங்கு நோயை அடையாளம் காண்பதற்கு அவசியமான வசதிகளை வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்துக்குள் விஸ்தரிப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.
இதற்கமைய டெங்கு வைரஸில் ஏதேனும் மாற்றங்கள் நிகழ்கின்றனவா என்பதனை ஆராய்வதற்காக அணுதொழில்நுட்ப பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
இலங்கையில் மாத்திரமன்றி உலகின் ஏனைய நாடுகளினதும் டெங்கு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கான வசதிகள் வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்துக்குள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

“இலங்கையில் மாத்திரமின்றி உலகின் ஏனைய நாடுகளினதும் டெங்கு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து அந்த ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்ற சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ச)

# போர் முடிவடைந்த போதிலும் தமிழருக்குச் சுதந்திரமில்லை

### அனுரகுமார எம்.பி. குற்றச்சாட்டு


கொழும்பு,ஜூலை 27
போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும் தமிழ் மக்களுக்கு சுதந்திரம் இன்னமும் கிடைக்கவில்லை என்று ஜே.வி.பி.யின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கைது செய்யப்பட்டவர்களில்



குமரன் பத்மநாதன் விடுதலை செய்யப்பட்டார். எனினும் கைது செய்யப்பட்ட ஏனையவர்கள் விடுதலை செய்யப்படவில்லை.
வடக்கில் காணிப் பிரச்சினை காணப்படுகின்றது. போர் ஏற்படுவதற்கும் இது ஒரு முக்கிய காரணியாகும். வடக்கு காணிகளை அரசியல் வாதிகளின் அடியாள்களுக்கு வழங்காது பிணக்குகளைத் தீர்க்க முயற்சிக்க வேண்டும்.
பௌத்த பிக்கு களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கியது யார்? இனவாதத்தை தூண்டி குழப்ப நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.
அரச தரப்பினர் நாட்டைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. மாறாக அதிகாரம் பற்றியே கவலைப்படுகின்றனர்.
மாகாணசபை முறைமையை ரத்துச் செய்து, தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குக் காத்திரமான தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.-என்றார். (ச)

## 124 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கையில் புதிய நுளம்பு

கொழும்பு,ஜூலை 27
இலங்கையில் புதிய நுளம்பு வர்க்கமொன்றை பொரளை வைத்திய பரிசோதனை நிலையம் கண்டு பிடித்துள்ளது.
நாட்டின் பல பகுதிகளிலும் நுளம்பு குறித்து மேற் கொள்ளப்பட்ட பரிசோதனையில் இந்த புதிய நுளம்பு வர்க்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று பொரளை வைத்திய பரிசோதனை நிலையத்தின் பணிப்பாளர் அனில் சமரநாயக்க தெரிவித்தார்.
இந்தப் புதிய நுளம்பு வர்க்கம் டெங்கு நுளம்புகள் பரவிக் கிடக்கும் இடங்களில் காணப்படுகிறது என்று



அவர் குறிப்பிட்டார்.
இந்த புதிய நுளம்பு வர்க்கம் டெங்கு நுளம்பு முட்டைகளை உண்பதாக முதல் கட்ட பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.
டெங்கு நுளம்பை போல் காணப்படும் புதிய நுளம்பு மனித இரத்தம் உறிஞ்சுகிறதா என்று இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.
சுமார் 124 ஆண்டுகளுக்குப் பின் இலங்கையில் புதிய நுளம்பு வர்க்கமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச)



தனது சேவைக்காலத்தை முடித்துக் கொண்ட பாதுகாப்புப் பிரதானி எயார் ஷீவ் மார்ஷல் ரொஷான் குணதிலக்க வியாழக்கிழமை அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

## ஜப்பானிய அமைச்சர் இலங்கை வருகை



கொழும்பு,ஜூலை 27
ஜப்பானிய உள்விவகார மற்றும் தொடர்பாடல் அமைச்சர் யோஷிதக சிந்தோ நாளை ஞாயிற்றுக்கிழமை இலங்கை வருகை தரவுள்ளார்.
ஜப்பானிய அமைச்சர் கொழும்பில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, கெஹெலிய ரம்புக்வெல ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.
இந்தச் சந்திப்புக்களின் போது இரு தரப்பு உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பில் பேச்சுக்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## முழந்தாழிட்ட ஆசிரியையின் வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பு,ஜூலை 27
வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஆனந்த சரத்குமாரவினால் முழந்தாழிட வைக்கப்பட்டதாகக் கூறப்படும் நவகத்தேகம பாடசாலை ஆசிரியையின் வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.
நீதிமன்ற உத்தரவின் பேரிலேயே வியாழக்கிழமை இரவு முதல் இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இரண்டு பொலிஸாரே ஆசிரியையின் வீட்டில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆசிரியையை முழந்தாழிடவைப்பித்த முன்னாள் உறுப்பினர் ஆனந்த சரத்குமார பிணை நிபந்தனைகளை மீறினார் என்ற குற்றச்சாட்டின்பேரில் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## 20 கணினிகள் அன்பளிப்பு

கொழும்பு,ஜூலை 27
இலங்கை மருந்துப் பொருள் வர்த்தக துறைசார் சம்மேளனம் சுகாதார அமைச்சின் ஒப்பனைப் பொருள் மற்றும் மருந்து ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவுக்கு 20 கணனிகளை அன்பளிப்பு செய்துள்ளது.
சுகாதார அமைச்சில் நடைபெற்ற நிகழ்வில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் இலங்கை




மருந்துப் பொருள் வர்த்தக துறைசார் சம்மேளதின் புதிய தலைவர் ஸ்டுவர்ட் செப்மன் அவற்றைக் கையளித்தார். (ச)

## 10 வாரங்களுக்கு மீன்பிடிக்கும் இந்திய கோரிக்கை நிராகரிப்பு

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 27
இலங்கையில் பத்து வாரங்களுக்கு மீன்பிடிக்கக் கோரும் இந்திய மீனவர்களின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளது என்று கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வாக பத்து வாரங்கள் இந்திய மீனவர் இலங்கைக் கடலிலும், அடுத்த பத்து வாரங்கள் இலங்கை மீனவர்கள் இந் தியக் கடலிலும் மீன்பிடிக்க அனுமதி வழங்குமாறு இந்திய மீனவர் சங்கங்கள் கோரியிருந்தன.
இந்த வேண்டுகோள் சாத்திய மற்றதென கருதி அதனை நிராகரித்துவிட்டோம்.
இந்தியக் கடற்பரப்பில் மீன் பிடிக்கும் இலங்கையரை இந்தியப் படைகள் கைது செய்து வழக்குத் தொடர்வது போல், இலங்கைக் கடலில் மீன் பிடிக்கும் இந்தியர்களும் இனிக் கைது செய்யப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்



படுவர்.
இலங்கை - இந்திய அரசுகளுக்கு இடையில் பேச்சு நடத்தப்பட்டுள்ள நிலையில் தற்போது முன்பு போன்று குழுக்களாக இந்திய மீனவர்கள் இலங்கைக் கடலுக்குள் பிரவேசிப்பதைத் தவிர்த்துக் கொண்டுள்ளனர்.
அவ்வப்போது ஓரிருவர் இவ்வாறு அத்துமீறிப் பிரவேசிக்கின்றனர்.
மீனவர்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு இயற்கை இடர்களை 24 மணித்தியாலத்துக்கு முன்பதாக அறிவிக்கும் வகையில் விசேட திட்டங்கள் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.-என்றார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பலஸ்தீனத்தில் அமைதி நிலவ பேச்சுவார்த்தை உதவட்டும்...!

அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் முகிழ்த்த இஸ்ரேல்- பலஸ்தீனப் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடாக இல்லை. அது தொடர்பில் சமரசமான இறுதித் தீர்வு ஒன்றை எட்டும் முயற்சிகள் மீண்டும் மேற்கொள்ளப்பட உள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

எனினும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இஸ்ரேல் பிரதிநிதியும் பலஸ்தீனப் பிரதிநிதியும் சில நாள்களுக்கு முன்னர் ஆற்றிய உரைகள், ஆக்கபூர்வமான சமாதானத் தீர்வுக்கு ஊக்கமளிப்பதாக இல்லை என்ற கருத்து மேலெழுந்து உள்ளது.'

எதற்கும் இரு தரப்புகளுக்கும் இடையில் மீண்டும் உயர்மட்டப் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1967ஜூன் போருக்கு முன்பிருந்த எல்லையை அடிப்படையாக வைத்து பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்றும் மேற்குக்கரை, காஸா, கிழக்கு ஜெருசலம் உள்ளடங்கலான சுதந்திரமான பலஸ்தீன அரசு உருவாக்கப்படவேண்டும் என்றும் பலஸ்தீன தரப்பில் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று பகுதிகளிலும் உள்ள யூதக்குடியிருப்புகள் அகற்றப்படவேண்டும்என்பதும் மிகப் பிரதானமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

ஆனால் யூதக் குடியிருப்புக்களை அகற்ற இஸ்ரேல் மறுக்கிறது. 1993 ஒஸ்லோ ஒப்பந்தத்துக்கு முரணாகத் தனது ஆக்கிரமிப்புப் பகுதிகளில் யூதக் குடியிருப்புக்களை விஸ்தரித்து வருகிறது.

மேற்குக் கரையில் இஸ்ரேலினால் உத்தியோகபூர்வமாக அமைக்கப்பட்ட 121 குடியிருப்புகளில் 3 லட்சத்து 50 ஆயிரம் யூதர்களும், கிழக்கு ஜெருசலேமில் அமைக்கப்பட்ட குடியிருப்புக்களில் 3 லட்சம் யூதர்களும், சிரியாவுக்குச் சொந்தமாக இருந்த கோலான் குன்றுகளில் உள்ள குடியிருப்புகளில் 20 ஆயிரம் யூதர்களும் குடியமர்த்தப்பட்டுள்ளனர். மேற்குக் கரையில் உள்ள மூன்று பெரிய குடியிருப்புக்களுக்கு நகர அந்தஸ்து கூட வழங்கப்பட்டுள்ளது.

தான், 1967 ஜூன்மாதம் நடைபெற்ற ஆறுநாள் போரில் கைப்பற்றிய பகுதிகளை நிரந்தரமாக வைத்திருப்பதற்கான இஸ்ரேலின் தந்திரமே யூதக்குடியிருப்புகள். தமது பகுதிகளில் யூதக் குடியிருப்புக்களை வைத்துக்கொண்டு பலஸ்தீன மக்களால் நிம்மதியாக வாழ முடியாது என்பது மெத்தவும் நிதர்சனமானது.

1993 இல் நோர்வேயின் முயற்சியால் வாஷிங்டனில் வைத்து யஸீர் அரபாத், யிட்ஸாக் ராபின், ஆகிய இருவரும் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் முன்னிலையில் ஒஸ்லோ சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டபோது, உலகமே வியந்தது. மத்திய கிழக்கு வரலாற்றில் இஸ்ரேல் – பலஸ்தீனத் தலைவர்கள் முதல் தடவையாக நேரடிப் பேச்சுகளை நடத்தி அமைதிக்கான பாதையைத் திறந்துவிட்டிருந்தனர்.

அந்த ஒப்பந்தம்தான் இன்று மேற்குக் கரையிலும், காஸாவிலும் பலஸ்தீன அரசு ஏற்படக் காரணமாயிற்று.

ஆனால் ஒஸ்லோ ஒப்பந்தம் கையெழுத்தாகி இருபது வருடங்கள் கடந்தும், ஜெருசலேம், பலஸ்தீன அகதிகள், ஆக்கிரமிப்புப் பகுதியில் உள்ள யூதக்குடியிருப்புகள் மற்றும் பாதுகாப்பு, எல்லை, குடிதண்ணீர்ப் பிரச்சினை ஆகியவற்றுக்கு தீர்வு காணப்படவில்லை. இவற்றுக்குத் தீர்வு காண்பதற்கே எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வாஷிங்டனில் பேச்சுகள் ஆரம்பமாகவுள்ளன.

பேச்சுகள் நிபந்தனைகள் எதுவுமின்றி நடைபெற வேண்டும்; சகல பிரச்சினைகளுக்கும் பேச்சுகள் மூலம் தீர்வு காணப்படவேண்டும் என்கிறது இஸ்ரேல். ஆனால், ஆக்கிரமிப்புப் பகுதியில் யூத குடியிருப்புக்களை விஸ்தரித்துக்கொண்டு சமாதானம் பேசுவது காற்றில்லாத இடத்தில் பட்டம் விடுவது போன்றதாகும்.

தமது சொந்த இடங்களிலிருந்து துரத்தப்பட்டு இன்னமும் இஸ்ரேலின் எல்லை நாடுகளில் வாழும் பலஸ்தீன மக்கள் தமது பகுதிகளுக்குத் திரும்பிச்சென்று நிம்மதியான வாழ்வை ஆரம்பிக்க வழி ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதே நியாயம்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் சமாதானம் ஏற்படுத்துவதும், சுதந்திர பலஸ்தீன அரசு ஏற்படுத்துவதுமே தமது வெளிநாட்டுக் கொள்கையில் முதலிடத்தில் இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்திருந்தார். 2009இல் அவருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசும் வழங்கப்பட்டது.


பதவி ஏற்ற ஆரம்பம் முதல் பராக் ஒபாமா அளித்த உத்தரவாதம் பலஸ்தீனர்களுக்கு நம்பிக்கை அளித்தது. ஆனால் நான்கு வருடங்கள் கழிந்தும் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படவில்லை. அந்தப் பெரும் பின்னடைவு நிலையை நோக்கிச் செல்வதனை அகற்றும் நோக்குடனேயே இப்போதைய பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

அமெரிக்காவின் அனுசரணையுடன் நடைபெற உள்ள பேச்சுவார்த்தை, இரு தரப்பினரதும் விட்டுக்கொடுப்பு இருந்தால் மட்டுமே வெற்றியடைய முடியும்.

மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு சமாதானமான முறையில் தீர்வுகாணக் கிடைத்த இறுதிச் சந்தர்ப்பமாக இதனைக் கருதி இருதரப்பினரும் நிரந்தர தீர்வுக்கு முயற்சிசெய்ய வேண்டும். அது நடைபெறுமா....?

# அழிவில் இருந்து பூமியைக் காப்போம்

நம்மைச் சுற்றியிருக்கும் இயற்கை வளம் நிரம்பிய மரங்கள், காய்கள் பயிர்கள், வயல்வெளிகள், பூக்களென்று நம்முடைய சுற்றுப்புறம், நம்முடைய கண்களை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டு வருகிறது. கிராமத்திலுள்ள சின்னச்சின்ன ஊர்கள், ஊருக்குள்ளே வாழும் மனிதர்கள், மனிதர்களோடு தோழமை கொண்டு துள்ளித் திரிந்த ஆடு மாடுகள், நாய்கள், பூனைகள், வீட்டுக்குள்ளே கூடு கட்டி வாழ்ந்த சிட்டுக்குருவிகள், மழைக்காலத்தில் உள்ளுக்குள்ளே தலைநீட்டிப் பார்க்கும் தவளை போன்ற எண்ணற்ற உயிரினங்கள் அனைத்துக்கும் சோறு போட்டு மகிழ்வித்த சுற்றுப்புறத்தையுடைய இயற்கை வளம், காலப்போக்கில் அதன் மீது அக்கறை காட்டாமையாலும், பராமரிப்பு மேற்கொள்ளப்படாமையாலும் கவனிப்பாரற்று சீரழிந்து கொண்டு வருகிறது. எதிர்காலத்தில் இந்தச் சீரழிவு பெரும் பூதாகாரமாக விசுவரூபமெடுத்து பெரும் சவாலாக உருவாகக் கூடும்.




முன்னேற்றம் அதனுடனே பயணிக்கிற நாகரிகம் ஆகியவைகளுடைய ஆதிக்கத்தால் காடுகள் அழிந்து கொண்டு வருகின்றன. காடுகளிலுள்ள மரங்கள், மலைகளிலுள்ள மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டதாலும், சுற்றுப்புறத்தின் பசுமை அழிந்ததாலும், பெய்யும் மழை குறைந்ததாலும், அடிக்கடி நிலச்சரிவுகள் ஏற்படுகின்றன. செழிப்பான மழை, காடுகளுக்குள்ளேயிருக்கும் உலர்சருகுகள், மக்குகளென்று இயற்கையான உரங்களைச் சுமந்து கொண்டு ஆறுகளின் படுகைகளில் படியச் செய்து அவைகளுக்கு ஊட்டச்சத்தை கொடுத்து வந்தது. ஆறுகளைச் சுற்றியிருக்கிற வயல் வெளிகள் படுகைகளிலுள்ள ஊட்டச்சத்தை உறிஞ்சிக் கொண்டதோடு, வயல்வரப்புகளுடைய செழுமை நிறைந்த மண், எண்ணற்ற உயிரிணங்களுக்கு உணவுக் களஞ்சியமாகவும் இருந்து வந்தது. முன்னேற்றம் என்கிற பெயரில் வனமரங்கள் வெட்டப்படுவதாலும், முட்செடிகள் அறுக்கப்படுவதாலும், மூலிகைச்செடிகள் வேரோடு பிடுங்கப்படுவதாலும், வனவிலங்குகள் வேட்டையாடப்படுவதாலும், காட்டுநிலங்கள் அபகரிக்கப்படுவதாலும் இயற்கை தன் அழகை மட்டுமல்ல தன் உடைமையையும் சிறிது சிறிதாக இழந்து கொண்டிருக்கிறது. இந்த சட்டவிரோதமான செயல்களால் காடுகளுடைய பரப்பளவு குறைந்து கொண்டே வருகிறது. இயற்கையின் அருமையை புரிந்து கொள்ளாமல் இந்தப் பேரழிப்பினால் மனிதன் ஈடு கட்ட முடியாத செல்வங்களை இழந்து கொண்டு வருகிறான்.

தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்களிலிருந்து வெளியேறுகிற கரியமல வாயு பூமியின் மேல்மட்டத்தில் பரவிக் கொண்டு வருவதால், புவியினுடைய வெப்பத்தை அதிகரித்து, மேல்மட்டத்திலுள்ள காற்றை மாசுபடுத்தப்படுத்துகிறது.

தொழிற்சாலைக் கழிவுகள் நிலத்துடைய செழிப்புத்தன்மையைச் சீரழித்து வருகிறது. மேலும் கடலோரப்பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பெருகி வரும் மக்கள் தொகையால் உருவாகியுள்ள சத்தங்கள் புவியை அதிர வைத்திருக்கின்றன. இனி வருங்காலத்தில் நதிகளும் மற்றும் ஆறுகளும் வற்றிப் போவதற்கு அதிகமான வாய்ப்புள்ளது. உணவுப் பொருள்கள் கிடைக்காமல், குடிதண்ணீர் கிடைக்காமல், பட்டினி, பஞ்சம் போன்ற கொடிய நோய்களால் பீடிக்கப்பட்டு அதிகமான பேரிழப்புகளைச் சந்திக்க நேரிடலாம். தொழிற்சாலைகளுடைய முன்னேற்றம் நதிகளை மாசுபடுத்தியிருக்கிறது. காற்றை மாசுபடுத்தியிருக்கிறது, நம்மைச் சுற்றியுள்ள சுற்றுப்புறத்தை மாசுபடுத்தியிருக்கிறது.

இயற்கையோடு தோழமை கொள்வோம், இயற்கையை அரவணைத்துக்கொண்டு செயல்படுவோம், இயற்கையின் தோள்களில் தலைசாய்த்து இளைப்பாறுவோம், இதனைப் புரிந்து கொண்டு நடந்தால் நாளைய தலைமுறைக்கு ஓர் அழகிய, அருமையான உலகை ஆக்கிக் கொடுக்க முடியும்.

வாருங்கள் சுற்றுப்புறத்தைப் பாதுகாப்போம்! இயற்கையை நேசிப்போம்!! இந்தப் பூமியைக் காப்பாற்றுவோம்!!!



உணவுப் பொருள்கள் கிடைக்காமல், குடிதண்ணீர் கிடைக்காமல், பட்டினி, பஞ்சம் போன்ற கொடிய நோய்களால் பீடிக்கப்பட்டு அதிகமான பேரிழப்புகளைச் சந்திக்க நேரிடலாம்

# சாதனைகளை நோக்கி கால்பதிக்கும் கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயம்

அபரா

சைவமும்தமிழும்தழைத்தோங்கும் சாவகச்சேரியின் மேற்கே 3 கி.மீ தூரத்தில் கண்ணுக்கு குளிர்ச்சியும், கரும்பச்சை நிறமும் தரும் இயற்கைத் தாவரப் பரம்பலோடு ஒன்றித்து நிற்கும் அழகிய கிராமம் தான் கல்வயல். அந்தக் கிராமத்தில் மிடுக்கோடு மிளிர்ந்து நிற்கிறது ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்.


இலங்கைத் தீவிலே சுதந்திரத்துக்கு முற்பட்ட காலப்பகுதியிலே ஐரோப்பியரின் ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவ மதப்பிரசாரமும் பரம்பலும் அதிகரித்துக் காணப்பட்டன. அந்த வேளை 1900 ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் நிர்வாகத்துக்கு உட்பட்ட மிஷன் பாடசாலையாக இந்தப் பாடசாலை உதயமாகியது. எனினும் மத ரீதியான பிரசாரங்களில் எடுபடாத இந்தப் பகுதி மக்கள் தமது பிள்ளைகளை மிஷன் பாடசாலைக்கு அனுப்ப மறுத்தனர். இதன் காரணமாக ஓரிரு மாணவர்களுடன் கல்வயல் சைவப்பிரகாச வித்தியாலயம் என்ற பெயருடன் இயங்கிய பாடசாலை பிற்காலத்தில் செயலிழந்தது.

எனினும் விழிப்புக் கொண்ட மூத்தோர்கள் இந்தப் பாடசாலை மீண்டும் மிஷனரிப் பாடசாலையாக புனரமைக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக நான்கு பங்காளர்களுக்கு இருந்த சுமார் 12 பரப்புக் காணியை ஒன்றிணைத்து தர்மசாசனமாக பாடசாலைக்கு எழுதிக்கொடுத்தனர். அவர்களும் அவர்கள் குடும்பத்தவர்களுமாகிய கதிர்காமு, கார்த்திகேசு, கதிரவேலு, காசித்தம்பி, செல்லையா, கணபதிப்பிள்ளை, சுப்பையா, அருணாசலம், இராமலிங்கம், சின்னையா, பெண் அம்மாக்குட்டியும், சங்கரப்பிள்ளையும் இன்று வரை நன்றி உணர்வோடு பாடசாலைச் சமூகத்தால் நினைவு கூரப்படுகின்றனர்.

இதன் பின்னர் வைத்திலிங்கம் விநாயகமூர்த்தி தலைமையில் ஊரவர்கள் அந்த இடத்தில் ஓலைக் கொட்டில் ஒன்றை அமைத்து பாடசாலையை ஸ்தாபித்த 1930-06-18 ஆம் திகதி யாழ்ப்பாண வேதாந்த மடத்தை சேர்ந்த ஸ்ரீமான் மகாதேவாசுவாமிகளின் ஆசீர்வாதத்துடன் ஸ்ரீசண்முகானந்த வித்தியாசாலை எனும் பெயருடன் பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆரம்ப நாளில் 31 மாணவர்கள் இணைந்து கொண்டனர். தலைமை உபாத்தியாயராக ஆ.முருகேசு இருந்தார்.

வித்தியாலய அதிபர், ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவையினால் குறுகிய காலத்தில் அதாவது 1936 ஆம் ஆண்டு மேற்படி பாடசாலை சிரேஷ்ட பாடசாலை பரீட்சைச் சான்றிதழ் (எஸ்.எஸ்.சி) வகுப்பு வரை வளர்ச்சியடைந்தது. அதன் தொடர்ச்சியாக 1962 ஆம் ஆண்டுவரை சைவ வித்தியா விருத்தி சபையினால் நடத்தப்பட்டு வந்தது. இந்தக் காலத்தில் மாணவர்களின் கல்வியும் ஆன்மிகமும் வளர்ச்சி கண்டன.

தொடர்ந்து இலங்கையின் சுதந்திரத்துக்கு பின்னரான அரச கல்விக் கொள்கைகளின் சீர்திருத்தங்களின் காரணமாக 1962.03.15 ஆம் திகதி மேற்படி பாடசாலை அரசினால் சுவீகரிக்கப்பட்டு அரச நிர்வாக கட்டமைப்பினுள் கொண்டு வரப்பட்டது. இதனால் அந்த ஆண்டு தொடக்கம் தரம் 1-7 ஆம் வகுப்பு வரையே வகுப்பு நிலையில் மாற்றம் கண்டது. இதனால் மாணவர்களின் தொகை வீழ்ச்சி கண்டது. ஏனைய மாணவர்கள் நகர்ப்புறம் நோக்கி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. பின்னரும் மீள் திருத்தத்துக்கேற்ப தரம் ஐந்து வரையான வகுப்புக்களை உடைய பாடசாலையாக மாற்றமடைந்தது. இந்தச்செயற்பாடுவளர்ச்சிப் போக்கை நோக்கிச் சென்ற பாடசாலையில் பெரிய தாக்கத்தை உருவாக்கியது. எனினும் இருப்பதைக் கொண்டு திருப்தியடைவோம் என்பதற்கமைய கடமையாற்றிய அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் முயற்சியினால் பாடசாலை வளர்ந்து வருவதை காணமுடிகின்றது.



1930 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இந்தப் பாடசாலையின் அதிபர்களாக சி.சுப்பிரமணியம், க.சரவணமுத்து, மு.கந்தையா, இ.சரவணமுத்து, க.இராசரத்தினம், ப.இராசரத்தினம், கே.எஸ்.பொன்னையா, வ.கைலேஸ்வரன், க.கதிர்காமு, கு.கதிர்காமசேகரர், செ.சிவஞானம், இ.ரவீந்திரன் (தற்போதைய அதிபர்) என பன்னிருவருடைய சேவைகள் பெருமையுடன் நினைவு கூரத்தக்கவை. இவற்றிலும் சிறப்பாக 1994 ஆம் ஆண்டு ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் ஒரே தடவையில் ஏழு மாணவர்கள் சித்தியடைந்தமை பாடசாலைக்கு மேலும் பெருமை சேர்க்கின்ற விடயமாகும்.

மேற்படி பாடசாலை கடந்த கால இடர் காரணமாக தென்மராட்சிப் பிரதேசத்தில் முதன்முதலில் தனது இருப்பை இழந்த பாடசாலையாக கருதப்பட்ட போதிலும் 2002 ஆம் ஆண்டின் மீளக்குடியேற்றலுடன் மீளெழுச்சி பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. 2003 ஆம் ஆண்டு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினரால் கட்டட புனரமைப்பும், வலயக் கல்வி அலுவலகத்தினால் வகுப்பறைத் தொகுதியும், யுனிசெப் நிறுவனத்தினரால் மாணவருக்கான குடிதண்ணீர் தேவைக்கான தண்ணீர்த் தாங்கியும், GTZ நிறவனத்தினால் மலசலகூட வசதிகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் இன்றுவரை மாணவர்களுக்கு மேலதிகமாக பிரதேச மக்களுக்காக பாடசாலைக்கு வெளியே அமைக்கப்பட்ட விநியோகக் குழாயூடாக குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தச் செயற்பாடு பாடசாலைக்கும் சமூகத்துக்குமான உறவுப் பாலத்தின் ஓர் அங்கமுமாகும்.

தற்போது இந்தப் பாடசாலைக்கு கல்வயல், கெருடாவில், கற்குழி, நுணாவில் கிழக்கு, மட்டுவில் தெற்கு போன்ற பகுதிகளிலிருந்து மாணவர்கள் வருகை தந்து தமது கற்றல் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றனர். கற்றல் மேம்பாட்டுக்கான பிரத்தியேக வகுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிரதேசத்தின் சனச்செறிவு குறைவாக காணப்படும் நிலையில் பாடசாலையில் 29 ஆண்களும் 50 பெண்களுமாக மொத்தம் 79 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். கடுகு சிறிதானாலும் காரம் பெரிது என்பது போல மாணவர் தொகை குறைந்த பாடசாலையாக இருந்த போதும் பாடசாலையின் பிரதான பொதுப்பரீட்சையாகிய புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் தோற்றி கடந்த 10 வருடங்களாக வருடாந்தம் இருவருக்கு மேற்பட்டோர் சித்தியடைந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. 2010, 2011 ஆம் ஆண்டுகளில் முறையே 5 பேரும் 4 பேரும் சித்தியடைந்து சாதனை படைத்துள்ளனர். மேலும் இணைபாடவிதான செயற்பாடுகளாகிய வாய்ப்பாட்டு மனனம், மனக்கணிதம், கோலப்போட்டி, ஆத்திசூடி, ஆங்கிலப்போட்டிகளில் கோட்ட, வலய ரீதியான வெற்றி நிலைகளை பெற்றுள்ளமை பாராட்டுக்குரியது. அத்துடன் 2007 ஆம் ஆண்டு வலய ரீதியாக மேற்கொள்ளப்பட்ட பிள்ளைநேயப் பாடசாலை தெரிவுப் போட்டியில் பங்குபற்றி A தொகுதி சார் பாடசாலைக் கட்டமைப்பில் 3 ஆம் இடத்தைபெற்றுள்ளமைபெருமை சேர்க்கும் விடயமாகின்றது.

மேலும் பாடசாலையின் பௌதிக வள மேம்பாட்டுக்காக பாடசாலை சமூகம், பா.அ.சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு, பழையமாணவர் சங்கம் என்பன உருவாக்கப்பட்டு சிறப்பாக செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

மேலும் இந்தப் பாடசாலையின் பௌதிக ரீதியான வ்ளர்ச்சிக்கு கடந்த காலங்களில் குறிப்பாக கணினி அறை புனரமைப்புக்காகவும் மேலைத்தேய இசைக்கருவி கொள்வனவுக்காகவும், அலுவலக உபகரணக் கொள்வனவுக்காகவும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு திட்டத்திலிருந்து முறையே ஈ.சரவணபவன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சில்வேஸ்திரி அலென்ரின் போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவிகளும் கிடைத்திருந்தமை நன்றியுடன் குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்தப் பாடசாலையின் மாணவர்களின் கற்றல் மேம்பாட்டுக்காகவும் அதன் வளர்ச்சியை தக்கவைத்துக் கொள்ளவும் பௌதிக ரீதியாகவும் மனிதவள ரீதியாகவும் பின்வரும் தேவைகள் காணப்படுவதாக பாடசாலை சமூகத்தினால் முன்வைக்கப்படுகின்றது. குறிப்பாக கற்றல் செயலட்டைகளை மாணவர்களுக்கு வழங்கவும் நவீன கற்பித்தல் சாதனப் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காகவும் போட்டோ கொப்பி இயந்திரம், தொலைக்காட்சிப்பெட்டி, பல்லூடக எறியி என்பனவும் மனிதவள ரீதியாக நிரந்தரமான ஆங்கில பாட ஆசிரியரும் தேவையாகவுள்ளதாக பாடசாலை சமூகம் எதிர்பார்த்து நிற்கின்றது. இதன் தேவைகளை உரிய தரப்பினர் அனைத்து மாணவர்களுக்கும் சமவாய்ப்புக் கல்வி கிடைத்தலை உறுதி செய்யும் வகையில் உள்வாங்கி நிறைவு செய்ய வேண்டும் என்பது இந்தச் சமூகத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# வேண்டவே வேண்டாம்

சி.நற்குணலிங்கம்

மக்களிடையே வேண்டத்தகாத பாலியலுறவு முறைகளின் பண்புகள் மாற்றமடைந்து வருவதனால் 21 ஆம் நூற்றாண்டுக்கு அதி அச்சுறுத்தலாக எயிட்ஸ் நோய் அமைந்துள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளுடன் வளர்முக நாடுகளை ஒப்பு நோக்கும் போது இலங்கை, இந்தியா போன்ற வளர்முக நாடுகளில் எச்.ஐ.வி. வைரஸ் நோயின் பரம்பல் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு மருத்துவ முறைகள் பெரிதும் துணை நிற்காத காரணத்தினால் இது ஓர் உயிர்க்கொல்லி நோயாக இன்றும் வலுப்பெற்று வருகின்றது.

எயிட்ஸ் நோய் பரவுவதற்கான காரணிகளில் முக்கியமானதாக முறை தவறிய பாலியல் உறவு காணப்படுகின்றது. ஓரினச் சேர்க்கை, விபசாரம் போன்ற விரும்பாத செயல்பாடுகள் மூலமும் இந்த நோய் தொற்ற வாய்ப்புள்ளது. அத்துடன் தொற்று நோய்க்குள்ளானவர்களின் குருதியை மற்றவர்களுக்கு ஏற்றுவதன் மூலமும் இந்த நோயை பலர் பெற்றுக் கொள்கிறார்கள். ஆண்களிலும் பார்க்க பெண்களுக்கே இந்தத் தொற்று விரைவாக ஏற்பட வாய்ப்புண்டு.

நாடுகளில் எத்தனையோ வகையான முக்கிய பிரச்சினைகள் இருக்க, இதுவும் அந்த நாடுகளுக்கு அதுவும் இலங்கை போன்ற நாடுகளுக்கு ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அவசரமாக தீர்க்கப்பட வேண்டி இருக்கின்ற பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதா, எயிட்ஸ் பிரச்சினையை கவனிப்பதா? இந்தப் பிரச்சினை எமக்குத் தேவை தானா? விழித்துக் கொள்ளுங்கள்! எச்.ஐ.வி / எயிட்ஸ் தாக்கமானது பல்வேறு பாரதூரமான விளைவுகளை தோற்றுவிக்கின்றது. இந்த விளைவுகளை பார்த்தாவது மக்கள் திருந்த வேண்டும். ஒரு தந்தை அல்லது தாய் பல தரப்பட்டவர்களுடன் உடலுறவு கொள்வதனால் பெற்றுக் கொள்ளப்படும் குழந்தையும் பாதிக்கப்பட்டு சமூகத்தவர்களால் ஒதுக்கப்படும் நிலையும் ஏற்படுகின்றது. எயிட்ஸ் உள்ளவர்களிடையே நோய் எதிர்ப்புச் சக்தி மிகவும் குறைவடைந்து காணப்படுவதால் வேறு நோய்கள் அவர்களை தொற்றுவது இலகுவானதாக உள்ளது. குறிப்பாக காசநோய் விரைவில் தொற்றுவதற்கு பற்றீரியாக் கூறுகள் அதிகம். இந்த நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் சமூகத்தில் நடமாட அஞ்சுகின்றனர், வெட்கப்படுகின்றனர். எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளானவர் வேறு விடயங்களில் கவனம் செலுத்துவதை விட தனது நோய் பற்றியே கூடுதலாக சிந்திப்பர். தன்னையே வெறுக்கும் நிலை ஏற்படும். மனதில் கவலை, கோபம் அதிகரிக்கும். வாழ்க்கையில் பற்று ஏற்படாது. மனதில் தளர்வு நிலை காணப்படும். இறப்புப் பற்றிய உணர்வு வாட்டிய வண்ணம் இருக்கும். துன்பியல் வாழ்க்கைக்கு எயிட்ஸ் நோயை விட வேறும் வேண்டுமா? இந்த நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகும்.

குறிப்பாக இலங்கையில் எயிட்ஸ் நோயால் 2013 ஆம் ஆண்டு இது வரை 16 பேர் உயிரிழந்துள்ளனர். 90 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களில் 7 பேர் குழந்தைகளாவர். தற்போது இலங்கையில் இந்த நோய் தீவிரமாக பரவத் தொடங்கியுள்ளதாக சுகாதார சேவை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனவே மக்களுக்கு இந்த நோய் தொடர்பான விழிப்புணர்வும், இந்த நோயின் தாக்கமும், சமூகத்தின் பார்வை பற்றிய விடயமும் அவசியமாகும்.

மக்களே! உங்களை நீங்களாகவே தேவையில்லாமல் மாய்த்துக் கொள்ளாதீர்கள். உங்களை நீங்களே அழித்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் மட்டும் அழிவது மட்டுமலாமல் மற்றவர்களையும் அழித்துக் கொள்ளாதீர்கள். அற்ப ஆசைக்காகவும், கவனயீனத்தாலும் மகிழ்வாக வாழ வேண்டிய நீங்கள் உங்கள் வாழ்க்கையைச் சுருக்கிக் கொள்ளாதீர்கள். சமூகத்தில், சிரிக்க வாழாது சிரித்து வாழ்வோமாக.




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

## யோகக் கலைப் பயிற்சிநெறி அறிமுக விழா


யாழ். யோக அரங்கம் நடத்தும் இலவச யோகக் கலைப் பயிற்சிநெறிக்கான அறிமுக விழா வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய நாச்சிமார் கோயில் திருமண மண்டபத்தில் நாளை ஞாயிறு காலை 6 மணி தொடக்கம் 7.30 மணி வரை அரங்க இயக்கு நர் எஸ்.உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.
சனி, ஞாயிறு மற்றும் புதன் கிழமைகளில் காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரை யோகா பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும். ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து பயன் பெற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## தேசிய மட்டத்தில் முதல் இடம்



யாழ்ப்பாணம், ஜூலை 27
தேசிய தமிழ்மொழித் தினப் போட்டியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியான செல்வி பானுஜா குமரகுருபரன் தனி நடனம் பிரிவு-2 இல் முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கம் வென்றுள்ளார். (ஒ-5)

★ ★ ★



பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவி செல்வி வேல்விழி கலையழகன் அகில இலங்கைத் தமிழ் மொழித்தின ஆக்கத்திறன் (எழுத்தாக்கம்) போட்டியில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் வென்று சாதனை புரிந்துள்ளார்.

★ ★ ★



இடைக்காடு மகா வித்தியாலய மாணவி தங்கவேல் தீபிகா தேசிய மட்ட தமிழ் மொழித் தினப் போட்டியில் பிரிவு-5 இலக்கியத் திறனாய்வுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கம் வென்றுள்ளார். (ந)

## பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜூலை 27
வயாவிளான் மத்திய மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவும் வயவன் மலர் வெளியீடும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## காத்தவராயன் கூத்து

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ்ப்பாணம் ஆரியகுளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் மண்டலாபிஷேக இறுதி நாள் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தின இரவு8மணிக்கு காத்தவ ராயன் சிந்து நடைக் கூத்து நடைபெறும் எனப் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டு கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (ந-10)

## விநாயகர் முன்பள்ளியில் சிறுவர் பூங்கா திறப்பு விழா


தென்மராட்சி, ஜூலை 27
கைதடி விநாயகர் சனசமூக நிலைய விநாயகர் முன்பள்ளிச் சிறுவர் பூங்கா திறப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு விநாயகர் சன சமூக நிலையத்தில் தலைவர் செ.மயூரன் தலைமையில் நடைபெறும். (ந)

# சந்நிதியில் இருந்து இன்று கதிர்காமத்துக்கு யாத்திரை

வடமராட்சி, ஜூலை 27
தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயிலில் தங்கியுள்ள முருகன் அடியார்கள் கதிர்காமத்துக்கு யாத்திரையாக இன்று சனிக்கிழமை புறப்படுகின்றனர்.
சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஏற்பாட்டில் ஆண்கள் பெண்கள் உட்பட சுமார் 40 முருகன் அடியார்கள் கதிர்காமத்துக்கு யாத்திரையாக செல்கின்றனர். இவர்களுக்கென தனியான பஸ்வண்டி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் அனைத்து பராமரிப்புச் செலவுகளையும் சந்நிதியான் ஆச்சிரமமே மேற்கொள்கின்றது.
யாத்திரை மேற்கொள்ளும் முருகன் அடியார்கள் 4 தினங்கள் கதிர்காமத்தில் தங்கியிருந்து கதிர்காமக் கந்தனை வழிபடுவார்கள். இவர்கள் எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை கதிர்காம யாத்திரையை முடித் துக்கொண்டு சந்நிதிக்குத் திரும்புவார்கள். (ந-8)

# இளையோர் தினம் இன்று

கொழும்புத்துறை, ஜூலை 27
உலகளாவிய ரீதியில் கடைப்பிடிக்கப்படும் உலக இளையோர் தின நிகழ்வுகள் இன்று யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ளன.
யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உலக இளையோர் தின நிகழ்வுகள் இன்று மாலை யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் வழிபாடுகளுடன் ஆரம்பமாகி சிலுவைப் பவனியாக யாழ். பேராலயத்தை சென்றடையும்.
இந்தச் சிலுவைப் பேரணியில் யாழ்ப்பாணம், இளவாலை, பருத்தித்துறை, கிளி- முல்லை, தீவக மறைக் கோட்டங்களைச் சேர்ந்த சுமார் 2000 இற்கு மேற்பட்ட இளையோர் கலந்து கொள்வர்.
மேற்படி 5 மறைக் கோட்டங்களிலும் கடந்த சில மாதங்களாக பவனிவந்த சிலுவைகள் இந்த இறுதி நாள் நிகழ்வில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பேராலயத்தில் நிகழ்வுகள் இடம் பெறும். இறுதி நிகழ்வுகளில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையும் இணைந்து கொள்ளவுள்ளார்.
இளையோர் ஒன்றியத்தினால் பங்கு மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பணப் பரிசில்கள், வெற்றிச் சின்னங்களும் வழங்கப்படும்.
அதேவேளை பிறேஸில் நாட்டில் றியோடிஜெனாறோ என்ற இடத்தில் நடைபெறும் உலக இளையோர் தின நிகழ்வுகளில் பாப்பரசர் முதலாவது பிரான்சிஸ் தலைமையில் பல இலட்சக் கணக்கான இளையோர் உலகெங்கும் மிருந்தும் ஒன்று கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-135)




கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஸ்ரீ பருவதவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்க சுவாமி ஆலயப் பெருந் திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.
எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறு நாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ந)

★ ★ ★

வேலணை வங்களாவடி ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமான் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா எதிர் நாளை 28 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.
எதிர்வரும் 5 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த்தத் திருவிழாவும், மறுநாள் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வேலணை வெள்ளைக் கடற்கரையில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (வ-8)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூலை 27
கொழும்புத்துறை வசந்தபுரம் புனித யாகப்பர் ஆலயத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.
இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவும் நாளை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (ந-135)

## பயிற்சி நெறிக்கு 149 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 27
தொழில்துறை திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள ஆறு மாத கால தொழில் பயிற்சி நெறிக்கு காரைநகர் பிரதேசத்தைச் சேர்ந்த 149 இளைஞர், யுவதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
வடமாகாண சபை, வட மாகாண செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து தொழில் துறை திணைக்களம் இந்தப் பயிற்சி நெறியை நடத்தவுள்ளது. காரைநகர் தொழில் பயிற்சி நிலையத்தில் கடந்த புதன்கிழமை இவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. தச்சு, பொறியியல், கணினி ஆகிய பயிற்சி நெறிகள் இந்த 6 மாத காலப் பயிற்சிக் காலத்தில் வழங்கப்படவுள்ளன. அத்துடன் தெரிவு செய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்கு பயிற்சி காலத்தில் மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படவுள்ளது. (வ-14)


## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 27
மார்க்கண்டு சுவாமிகள் சபையால் நடத்தப்படும் மார்க்கண்டு சுவாமிகள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முன்பள்ளி முன்றிலில் சபையின் தலைவர் ந.சண்முகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.
பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.குகநேசன் கலந்து கொள்வார். (ஒ)

## மாதிரி வினாத்தாளை இணையத்தில் பார்வையிடலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தயாராகும் மாணவருக் காக சித்திரப் பாட மாதிரி வினாத் தாளை கந்தர்மடத்தில் இயங்கும் ஐஏரி சித்திரப் பயிற்சி நிறுவனம் www. iatart. webs.com என்ற இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளது.
மேலும் இந்தத் தளத்தில் தமிழ் மொழியில் சித்திரப் பாட விடயங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். (ந)

## ஆலயங்களில் தேர்த் திருவிழாவின் போது...



மட்டுவில் வடக்கு மருதடி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா வின்போது.... (ந-9)



சரசாலை நுணாவில் பிள்ளையார் ஆலய தேர்த் திருவிழா வின்போது.... (ந-9)




அனலைதீவு ஐயனார் ஆலய தேர்த்திருவிழாவின் போது... (ந-7)

## நினைவுப் பேருரை

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் இந்து மாமன்ற முன்னாள் தலைவர் வே.பாலசுப்பிரமணியம் அமரத்துவம் எய்திய 21 ஆவது ஆண்டு நினைவுப் பேருரை இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்.
அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நினைவுப் பேருரையை 'சிவமாம் தன்மை பெருவாழ்வு' என்ற தலைப்பில் தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த பேராசிரியர் க.சண்முகம் நிகழ்த்துவார். (ந)

## பருத்தித்துறை மாவட்ட சாரணர் ஆணையாளராக நியமனம்



இலங்கை சாரணர் சங்கத்தின் பருத்தித்துறை மாவட்ட உதவி ஆணையாளராக இதுவரை கடமையாற்றிய வேலுப்பிள்ளை சண்முகலிங்கம் பருத்தித்துறை மாவட்ட சாரணர் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
இலங்கை சாரணர் சங்கத்தின் தலைமை ஆணையாளர் பேராசிரியர் நிமால் டி சில்வாவினால் இந்த நியமனம் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் ஓய்வுநிலை கணித ஆசிரியரும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனுமாகிய சண்முகலிங்கம் யாழ். மண்ணில் மறைந்துவரும் சாரணர் இயக்கத்தை பாடசாலைகளில் மீண்டும் புத்துயிர்ப்பு அடையச் செய்வதில் அரும்பாடுபட்டுக் கொண்டிருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.'
கடந்த வருடம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பேடன்பவல் விழாவில் ஜனாதிபதியினால் சாரணர் சேவை குறித்து பாராட்டுப் பத்திரம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ந)

# வறட்சியின் பிடிக்குள் முல்லைத்தீவு மாவட்டம்

முல்லைத்தீவு, ஜூலை 27
முல்லைத்தீவு மாவட்டம் வறட்சியின் பிடியில் சிக்கித் தவிக்கின்றது. பல மாதங்களாக மழை பெய்யாததாலும், கடும் வெப்பம் காரணமாகவும் இங்கு கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது.
கால்நடைகளின் மேய்ச்சல் தரவைகள் காய்ந்த நிலையில் காணப்படுகின்றன. குடி தண்ணீரும் கால்நடைகளுக்குக் கிடைப்பதில்லை. இதனால் இவை வாடி வதங்கிய நிலையில் உணவையும், குடி தண்ணீரையும் தேடி அலைந்து திரிவதைக் காண முடிகின்றது.
மேலும் ஏராளமான வன விலங்குகள் நீர் அருந்த முத்துஐயன்கட்டுக் குளத்தை நாடி வருவதை அவதானிக்க முடிகின்றது.
இங்குள்ள சில கிராமங்களில் கிணறுகள் இல்லாத நிலை காணப்படுவதால் அங்கு வசிக்கும் மக்கள் கடுமையான தண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் குடி தண்ணீர் தேடி இவர்கள் வேறு இடங்களை நாடிச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.



ஏராளமான வான் பயிர்கள் நீரின்றி அழிவடையும் நிலையில் உள்ளன.
இதைவிட கடுமையான வெப்பம் நிலவுவதால் நோய்ப் பாதிப்புக்களும் காணப்படுகின்றன.
கடுமையான வறட்சியின் பிடியில் முல்லைத்தீவு மாவட்டம் முழுவதும் சிக்கித் தவிப்பதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-500)

## 'டிப்பர்' ஓட்டத்தால் அணைக்கட்டு சேதம்

அக்கராயன், ஜூலை 27
துணுக்காய் உயிலங்குளம் அணைக்கட்டு வழியாகத் தினமும் ஏராளமான டிப்பர்கள் சுமையுடன் பயணிப்பதால் அணைக்கட்டு சேதமடைந்து வருவதாக இந்தக் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
உயிலங்குளக் கிராமத்தின் வீதிகள் அணைக்கட்டின் கீழ் உள்ள போதிலும் சகல வாகனங்களும் அணைக்கட்டின் மேலாகவே செல்கின்றன.
இதனால் அணைக்கட்டுக்குச் சேதம் ஏற்பட்டு உடைவு ஏற்படக் கூடியநிலை காணப்படுகின்றது.
இது தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டங்களில் அடிக்கடி குரல் எழுப்பப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# அரைகுறையான வீதிப் புனரமைப்பில் அவலப்படும் சுதந்திரபுரம் மக்கள்

முல்லைத்தீவு, ஜூலை 27
முல்லைத்தீவு சுதந்திரபுரம் குடியேற்றத் திட்டத்துக்குச் செல்லும் பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகள் அரைகுறையான நிலையில் காணப்படுவதால் இங்குள்ள மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
ஏ-35 வீதியின் சுதந்திரபுரம் சந்தியில் இருந்து சுதந்திரபுரம் குடியேற்றத் திட்டத்துக்குச் செல்லும் சுமார் நான்கு கிலோ மீற்றர் நீளமான இந்த வீதி கடந்த பல ஆண்டு களாகப் புனரமைக்கப்படாமல் காணப்பட்டது.
இந்த நிலையில் கடந்த 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 48 கிராமிய வீதிகளைக் கொங்கிறீட் இட்டுப் புனரமைப்புச் செய்யும் திட்டத்தின் கீழ் குறித்த வீதியும் தெரிவு செய்யப்பட்டு கற்கள் பரவப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.
இதனால் இந்த வீதியூடாகப் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள் உட்பட பொது மக்கள் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போது இங்கு சுமார் 300 குடும்பங்கள் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# இரண்டு பாடசாலைகளில் தொழில்நுட்பப் பாடங்கள்

அக்கராயன், ஜூலை 27
கிளிநொச்சி கல்வி வலயத்திலுள்ள இரண்டு பாடசாலைகளில் தொழில் நுட்பப் பாடங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சி மத்திய கல்லூரி, பூநகரி மகாவித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளிலேயே தொழில்நுட்பப் பாடங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்ப விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட 10 பாடங்களை மாணவர்கள் எதிர்காலத்தில் இங்கு கற்க முடியும். உயிரியல் தொழில்நுட்பமும் இந்தப் பாடங்களில் அடங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கிராம ரீதியில் பெற்றோர் மற்றும் மகளிர் அமைப்புக்களுக்கு விழிப்பூட்டும் கருத்தரங்குகள் வவுனியா மாவட்ட சிறுவர் அதிகார சபையால் நடத்தப்பட்டுள்ளன.
சிறுவர்கள் மீது பெற்றோர் எவ்வாறு கவனம் செலுத்த வேண்டும். மற்றும் சிறுவர்களுக்கு கல்வி மற்றும் பிற விடயங்களில் எவ்வாறு விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பாக இந்தக் கருத்தரங்குகள் இடம்பெற்றுள்ளன.
இதன் ஒரு கட்டமாக சாந்தபுரம் கிராமத்தில் இடம்பெற்ற விழிப்புணர்வுக் கருத்தரங்கில் 250க்கும் மேற்பட்ட பெற்றோர் மற்றும் மகளிர் அமைப்பு உறுப்பினர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-421)

# இந்தியன் வீட்டுத் திட்டத்தில் முன்பள்ளி அமைத்துத் தருக

அக்கராயன், ஜூலை 27
துணுக்காய் இந்தியன் மாதிரி வீட்டுத்திட்டத்தில் முன்பள்ளி ஒன்றை அமைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
போரினால் பாதிக்கப்பட்ட மக்களை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த இந்தியன் வீட்டுத் திட்டத்தில் இதுவரை முன்பள்ளி எதுவும் அமைக்கப்படாததால் சிறார்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது.
மாற்று வலுவுள்ள குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற இந்தக் குடியிருப்பில் பல வசதியீனங்கள் காணப்படுகின்றன.
இதில் முன்பள்ளியொன்று அமைக்கப்படாதது பெரும் குறைபாடாக உள்ளது.
இதேவேளை இந்த 50 வீட்டுத் திட்டத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதனால் இரண்டு பொதுக் கிணறுகள் இங்கு அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)




அக்கராயன் கண்ணகைபுரத்தில் இடம்பெற்ற வயல் விழாவின் ஒரு அங்கமாக அங்கு பயிரிடப்பட்ட பாசிப்பயறு பயிர்களை கரைச்சி பிரதேச செயலர் உள்ளிட்ட விருந்தினர்கள் பார்வையிடுகின்றனர். (க-18)

## முழுநிலா ஒன்றுகூடல்

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் முழு நிலா அறிவோர் ஒன்றுகூடல் இடம்பெற்றுள்ளது.
இந்த முழு நிலா அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திருமதி சூரியகுமாரி தலைமையில் ஆரம்பமானது.
இந்த நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவை சு.பரமநாதபிள்ளை ஆற்றினார்.
இந்த நிகழ்வில் முன்னாள் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், கரைச்சிப் பிரதேச சபையின் முன்னாள் விசேட தலைவர் பொ.நித்தியானந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (க-6)

# கண்டாவளைக்கு மின்சாரம்

கிளிநொச்சி, ஜூலை 27
கிளிநொச்சி கண்டாவளைக் கிராமத்துக்கான மின் விநியோக வேலைகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.



கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் கண்டாவளைக் கிராமம் அமைந்துள்ளது. மின்விநியோகத்தை தாமதமின்றி வழங் குமாறு இந்தப் பகுதி மக்களும் பொது அமைப்புக்களும் பல தடவைகள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்திருந்தனர்.
தற்போது இந்தக் கிராமத்துக்கான மின்சார விநியோகத்தை மேற்கொள்ளும் பொருட்டு பிரதான மின் கம்பங்கள் நடப்பட்டு மின் விநியோகப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (க-6)

# கற்றுக்கொண்டே இருங்கள் உன்னத நிலையை அடையலாம்

## வவுனியா வடக்கு பிரதேச செயலர் அறிவுரை

மாங்குளம், ஜூலை 27
ஒருவன் பூரணமான மனிதனாக ஆக வேண்டுமானால் பிறப்பிலிருந்து இறக்கும் வரை கற்றுக்கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் சமுதாயத்தில் உன்னத நிலையை அடைய முடியும்.
இவ்வாறு தெரிவித்தார் வவுனியா வடக்கு பிரதேச செயலர் எஸ்.பரந்தாமன்.
கடந்த சனிக்கிழமை கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற க.பொ.த. உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வின் பிரதம விருந்தினராக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;
தொடர்ந்து கற்றுக் கொண்டிருக்கும் போது தான் வெற்றி வாய்ப்பு எம்மைத் தேடிவரும். வாய்ப்புக்கள் கிடைக்கின்ற போது அதனைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். வெற்றி என்பது இலகுவில் கிடைத்துவிடும் ஒன்றல்ல. அயராத உழைப்பினால் தான் அது எமக்குக் கைகூடும். எமது வெற்றிக்கான இலக்கை நோக்கியதாக எமது பயணம் அமைதல் வேண்டும். அதற்கு இரவு பகல் பாராது முயற்சி செய்ய வேண்டும்.
பாடசாலை வாழ்க்கை என்பது மறக்க முடியாததொன்றாகும். மாணவப்பருவம் எந்த வகையிலும் மீண்டும் கிடைக்காததொன்றாகும். அந்த வகையில் இன்று இங்கு இடம்பெறும் ஒன்றுகூடல் பயன்மிக்கதொன்றாகும்-என்றார். (க-422)

## பதவி இராஜினாமா

மருத்துவர் ஞானசீலன் குணசீலன் தான் வகித்து வந்த மன்னார் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பதவியை கடந்த வாரம் இராஜினாமா செய்துள்ளார்.
நடைபெறவிருக்கும் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராக மன்னார் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காகவே இவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாகத் தெரிய வருகின்றது.
இது தொடர்பாக அவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது இந்தச் செய்தியை உறுதி செய்தார். (க-12)

# மாந்தை கிழக்கு வீதிகளுக்கு தெருவிளக்கு பொருத்தும் நடவடிக்கை

மாந்தை கிழக்குப் பிரதேசத்திலுள்ள வீதிகளுக்கு 5 லட்சம் ரூபா செலவில் மின் விளக்குகளைப் பொருத்துவதற்கான நடவடிக்கைகளை பிரதேச சபைத் தவிசாளர் மேற்கொண்டுள்ளார்.
இந்தப் பிரதேசத்தில் மீள் குடியமர்ந்த மக்களின் நலன் கருதி மின்விளக்குகளைப் பொருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
பரந்துபட்ட பிரதேசமான மாந்தை கிழக்கிலுள்ள 15 கிராம அலுவலர் பிரிவுகளில் தற்பொழுது வன்னிவிளாங்குளம், அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், பாலிநகர், சிவபுரம், செல்வபுரம், பாண்டியன்புரம், நெட்டாட்டான் குளம் ஆகிய ஒன்பது கிராமங்களுக்கு தற்போது மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் பல குடும்பங்கள் நன்மை அடைந்துள்ளன.
மின்சார விநியோகம் மேற்கொள்ளப்பட்ட வீதிகளுக்கு 5 லட்சம் ரூபா செலவில் நூறு மின்விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. இதற்கான சகல ஒழுங்குகளையும் பிரதேச சபைத் தவிசாளர் மேற்கொண்டுள்ளார். (க-115)

# தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு பெருவிழா இன்று திருமறை கலாமன்றில்; நாளை பல்கலையில்

## கைலாசபதி கலையரங்கில் ஆய்வரங்கம் நிகழ்வு



" இரண்டாம் நிகழ்வுகளின் ஓர் அங்கமாக நடை பெறும் ஆய்வரங்கம் நாளை ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலை யரங்கில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தலை மையில் நடைபெறவுள் ளது.

யாழ்ப்பாணம்,ஜூலை 27

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும், யாழ். மறை மாவட்டமும் இணைந்து முன்னெடுக்கும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற் றாண்டுப் பெருவிழா இன்று ஆரம்பமாகும். முதல்நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு திருமறைக் கலாமன்றத்தின் திறந்த வெளியரங்கில் விழாக்குழுவின் இணைச் செயலாளர் அருட்திரு அ.ஜெயசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தொடக்கவுரையை தென்னிந்தியத் திருச்சபை முன்னாள் பேராயர் அதிவண கலாநிதி எஸ்.ஜெபநேசன் நிகழ்த்துவார்.

அதனைத் தொடர்ந்து 'தமிழ்த்தூது'' எனும் மீள் பதிப்பு நூல் வெளியீடும் ''புதுப்புனல் பாய்ந்திடுக'' எனும் கவியரங்கமும், யாழ். தமிழ்ச் சங்கத்தின் உப தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பியின் கருத் துரையும் இடம்பெறும். இரண்டாம் நாள் நிகழ்வு களின் ஓர் அங்கமாக நடை பெறும் ஆய்வரங்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆய்வரங்கில் ஆரம்ப நிகழ்வையடுத்து முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட மண்டபங்களில் சம நேரங்களில் நான்கு அமர் வுகளாக கட்டுரைகள் சமர்ப்பிக் கப்படவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக சட்டத் துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணி தலைமையில் ''மொழியும் பிரயோகமும்'' என்ற தொனிப் பொருளிலும், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன் தலைமையில் ''இலக் கியமும் பயில் நிலையும்'' என்ற தொனிப் பொருளிலும், மூத்த தமிழ்ப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் கல்வியும் தனிமனித ஆளுமைகளும் என்ற தொனிப் பொருளிலும், முன்னாள் பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன் தலைமையில் ''சமயமும் வாழ்வியலும்'' என்ற தொனிப்பொரு ளிலும் கட்டுரைகள் சமர்ப்பிக் கப்படவுள்ளன.

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக ஆய்வாளர்களிடமிருந்தும் தமிழியல் ஆர்வலர்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற 60 கட்டுரைகளில் 26 கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டு சமர்ப் பிக்கப்படவுள்ளன.

உயர்தர மற்றும் பட்டப் படிப்பு மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், தமிழ் ஆர்வலர்கள் என அனைவருக்கும் பயன் நல்கக் கூடிய ஆய்வரங்கமாக இது அமையும் என யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவரும், தமிழ்ச் சங்கத்தின் உப தலைவருமான பேராசிரியர் கி.விசாகரூபன் தெரிவித்தார்.(வ-7)

**வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த**

# உறவினர் எவரும் இல்லாத முதியவர் கைதடி முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஒன்றரை மாதங்களாக சிகிச்சை பெற்று வந்த வயோதிபர் ஒருவர் நேற்று முன்தினம் கைதடி அரச முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.

மேற்படி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நடக்க முடியாத முதியவரை அழைத்துப் போக உறவினர் எவரும் வராத நிலையில் வைத்தியசாலை நிர்வாகமே அவரை கைதடி முதியோர் இல்லத்தில் சேர்த்துள்ளது.

திருநெல்வேலி பாற்பண்ணை வீதியைச் சேர்ந்த இராசையா பாலசிங்கம் (வயது-74) என்ற வயோதிபரே முதியோர் இல்லத்தில் சேர்க்கப் பட்டவராவார்.

வயோதிபரின் உறவினர் எவராவது இருந்தால் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் கேட்டுள்ளார்.

போர் காரணமாக மனைவி, பிள்ளைகளை முதியவர் இழந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (எ-17)




சோ.ஆ.நிறுவனத்தின் ஏற்பாட்டில் சமுதாய புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான சமாதானக் கல்வி தொடர்பான இரண்டுநாள் பயிற்சிப் பட்டறை கிளிநொச்சி ஊற்றுபுலம் அ.த.க. பாடசாலையில் அண்மை யில் நடத்தப்பட்டது. இதில் பங்குபற்றிய மாணவர்களையும் நிகழ்ச்சித் திட்டப் பணியாளரையும் காணலாம். (வ-14)

---

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைசுமை குறையும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு.

**இடபம்:** தன்னம்பிக்கையுடன் காணப் படுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மதிப்பார்கள். பணப் பற்றாக்குறை நீங்கும். உத்தியோகத்தில் தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.

**மிதுனம்:** எடுத்த வேலையைத் தடையின்றி முடிப்பீர்கள். அரச அதிகாரிகளின் நட்பு கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அனபுத்தொல்லைகள் விலகும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** வெளுத்ததெல்லாம்பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக்கொள்ளாதீர்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டுமே என்ற பயம் வரும். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினைகள் வந்து நீங்கும்.

**சிங்கம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பணவரவு திருப்தி தரும். பிரிய மானவர்களைச் சந்தித்து மகிழுவீர்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள்.

**கன்னி:** சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அரச காரியங்களிலிருந்த பின்னடைவு நீங்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு பணிகளை முடிப்பீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**நாளை**

ஆடி-12 ஞாயிற்றுக்கிழமை 28.07.2013
திதி: ஷஷ்டி பி.ப. 03.55 வரை
நட்சத்திரம்: ரேவதி பி.இ. 04.31 வரை
சுபநேரம்: 09.02 - 10.32 வரை
இராகுகாலம்: 04.32 - 06.02 வரை

**துலாம்:** முன்கோபம், பதற்றம் விலகும். எடுத்த காரியங்களை முடிக்கமுடியாமல் அவதிப்பட்ட நிலை மாறும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**விருச்சிகம்:** மனதில் பட்டதை பளிச் சென்றுபேசி அனைவரையும் ஆச்சரியப் படுத்துவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**தனுசு:** பணம் தேவையான அளவு இருக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**மகரம்:** அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். பணவரவு திருப்தி தரும். வெளிவட்டாரம் மகிழ்ச்சி தரும்.

**கும்பம்:** எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். யாரையும் நம்பி உறுதிமொழி தர வேண்டாம். சில விடயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது. உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டிவரும்.

**மீனம்:** தடைகளைத் தூண்டி முன்னேறுவீர்கள். பல வேலைகள் தடைப்பட்டு முடியும். எதிர்பாராத திடீர் பயணங்களும், செலவுகளும் வந்து செல்லும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் வீண் விவாதம் வேண்டாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 6 | 9 | |
| | 6 | | 7 | 2 | | | 4 | 3 |
| | | 1 | 9 | | | 7 | 8 | 2 |
| | | 5 | 2 | | | | 7 | 4 |
| | | | 5 | | 4 | | | |
| 6 | 4 | | | | 7 | 9 | | |
| 7 | 1 | 8 | | | 2 | 3 | | |
| 4 | 9 | | | 1 | 8 | | 2 | |
| | 2 | 3 | | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 4 | 1 | 3 | 6 | 2 | 5 | 7 |
| 3 | 1 | 2 | 5 | 4 | 7 | 9 | 6 | 8 |
| 6 | 5 | 7 | 9 | 8 | 2 | 3 | 4 | 1 |
| 4 | 2 | 1 | 6 | 5 | 9 | 7 | 8 | 3 |
| 5 | 8 | 6 | 7 | 2 | 3 | 1 | 9 | 4 |
| 9 | 7 | 3 | 8 | 1 | 4 | 6 | 2 | 5 |
| 1 | 6 | 8 | 2 | 7 | 5 | 4 | 3 | 9 |
| 2 | 4 | 5 | 3 | 9 | 1 | 8 | 7 | 6 |
| 7 | 3 | 9 | 4 | 6 | 8 | 5 | 1 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## தியாகிகள் தினம் மன்னாரில் இன்று

அம்பாறை,ஜூலை 27

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) நடத்தும் 1986 ஜூலைக் கலவரத்தில் கொல்லப்பட்ட தியாகிகள் நினைவு தின நிகழ்வு இன்று சனிக்கிழமை மன்னாரில் நடைபெறவுள்ளது. இந்த நினைவு தின நிகழ்வு ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் மன்னார் வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச-30)

# மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு வெற்றி பெறும்

## ரெலோ செயலர் கூறுகிறார்

அம்பாறை,ஜூலை 27

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களின் பேராதரவுடன் அமோக வெற்றிபெற்று வட மாகாண சபை ஆட்சி அதிகாரத்தில் அமரப் போவது திண்ணமாகும்.

இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) செயலர் ஹென்ரி மகேந்திரன் கூறினார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) அம்பாறை மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்களின் கூட்டம் திருக்கோவிலில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தில் எதுவுமில்லை என்ற நிலைப்பாடு இருந்த போதிலும் அதனை அடிப்படையாக வைத்து அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்குச் செல்ல முடியுமான நிலைமை காணப்படுகிறது.

எனவே நடைபெறவிருக்கும் வட மாகாணசபைத் தேர்தலில் நாம் போட்டியிட்டு மீண்டும் தமிழ்த் தேசியத்தின் மீதான தமிழ் மக்களின் பற்றுதலை ஆழமாக வெளிப்படுத்த வேண்டும்.

எனவே நடைபெறவிருக்கும் வட மாகாண சபைத் தேர்தல் நீதி, நியாயமாகவும், ஜனநாயக ரீதியிலும் நடத்தப்படுமா என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இவ்வாறான நிலையிலும் எந் தத் தடைகள் வந்தாலும் அத்தடைகளைத் துச்சமாகக் கருதி தமிழ் மக்கள் ஏகோபித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து பெரு வெற்றியை உறுதிப்படுத்த முன்வரவேண்டும்.- என்றார். (ச-30)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் நடன ஆசிரியை
திருமதி திலகவதி கருணாகரன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **பரமேஸ்வரி கனகசபாபதி**
அவர்கள் கடந்த 25.07.2013 ஆம் திகதி வியாழக்கிழமை பி.பகல் இறைபதம் அடைந்துள்ளமையால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

**கல்லூரிச்சமூகம், யா/இணுவில் மத்திய கல்லூரி.** (29894) (11.6.3)

## 30 ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி

### (யூலை 25, 27)

### தமிழ்த் தேசிய வீரர்கள் தினம்



ஆரம்பகாலத் தலைவர்
**தங்கத்துரை**



முன்னணிப் போராளி செயல் வீரன்
**ஜெகன்**



ஆரம்பகாலத் தளபதி
**குட்டிமணி**

1983 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம், 27 ஆம் திகதிகளில் கொழும்பு வெலிக்கடை வெஞ்சிறையில் படுகொலை செய்யப்பட்ட விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தின் முன்னோடிகளான தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன், தேவன், நடேசுதாசன், குமார், சிவபாதம், சிறீகுமார், குமாரகுலசிங்கம், மரியாம்பிள்ளை உட்பட 53 தமிழ்த் தேசிய வீரர்களுக்கும் மீண்டும் எமது கண்ணீர் அஞ்சலி.

**தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)**
TAMIL EELAM LIBERATION ORGANIZATION (TELO)
இணையத்தள முகவரி : www.telo.org

(29802)(3,6)

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
**19.09.1949**

இறப்பு
**08.04.2004**



அமரர் **சின்னச்சாமி சுப்பையா**
**(இரத்தினம்)**
(உரிமையாளர் - துர்க்கா விற்பனை நிலையம்)

பாசமெனும் பாலை ஊட்டி
நேசத்தால் எமை சீராட்டி
கலக்கத்தில் எமக்கு வலுவூட்டி
தக்கதாய் எமக்கு வழிகாட்டி–வாழ்ந்த
எம் குடும்ப விளக்கே
நாம் உள்ளவரை நினைவிருக்கும் எம் உள்ளமதில்

22 A, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

நினைவலைகளுடன்
**குடும்பத்தினர்.**

(29962)(11.6.3)

## 37 ஆவது சிரார்த்ததினம்



அமரர்
**அல்பிரட் தங்கராஜா துரையப்பா**
தோற்றம்: 15.07.1926
மறைவு: 27.07.1975



முன்னாள் யாழ். மாநகர முதல்வரும் பிரசித்திபெற்ற சட்டத்தரணியும், முன்னாள் யாழ். மாவட்ட பிரதம ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளரும், மக்கள் சேவகர், மக்கள் முதல்வர் அவர்களின் இன்றைய 37 ஆவது சிரார்த்த தினத்தில் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் சமாதியில் மலர்வளையம் வைத்து அஞ்சலிகள் செலுத்தப்படும்.

காலஞ்சென்ற அல்பிரட் பரமேஸ்வரி
திருமதி ஈசா (மகள்)

(29939) (45.6.3)

K.A. வைகுந்தநாதன்
யாழ். மாநகர முன்னாள்
பாதுகாப்பு உத்தியோகத்தர்,
இலங்கை சமாதான நீதிபதியும்
ஓய்வுபெற்ற உத்தியோகத்தரும்.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு : 10.05.1944 இறப்பு : 27.06.2013

அமரர்
**அரியரத்தினம் மயூரநாதன்**

(அன்னார் மதியாபரணம் -காம்சனா, வைகுந்தநாதன்-சுசீலாதேவி ஆகியோரின் சகோதரனும், நளினி குடும்பத்தினர், தயாநிதி குடும்பம் ஆகியோரின் சிறிய தந்தையும், நீதிராசாவின்( கணக்காளர்) பெரிய தந்தையும் ஆவார்.)

அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்வுகளின் போது கலந்தும் மற்றும் பல வழிகளிலும் அனுதாபம் பகிர்ந்தும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (27.07.2013) சனிக்கிழமை முற்பகல் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ் விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வைகுந்தநாதன் (J.P)
(முன்னாள் அரச ஊழியர்)
துன்னாலை , கரவெட்டி.
021 490 2987

சாறையடி, புலோலி,
பருத்தித்துறை.

(29935)(5.6.3)

## மரண அறிவித்தல்

### வைத்தியான் மரியநாயகம்



மெலிஞ்சிமுனை, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியான் மரியநாயகம் 25.07.2013 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியான் -சவிராசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சந்தியாகு -யக்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், விக்றோரியாப்பிள்ளையின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான அடைக்கலம், றீற்றா மற்றும் மலர், தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இராயப்பு, தோமாஸ், கிறிஸ்தோப்பு மற்றும் சவிரிமுத்து, சவிரியான் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.07.2013) சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கரம்பன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மெலிஞ்சிமுனை,
ஊர்காவற்றுறை.

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(29950)(3.6.11)

## லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான விளக்கம்

* மேலே குறிப்பிட்டுள்ள நாடுகளுக்குச் செல்ல விரும்புவோர் நேரில் வரவும்
* போய்ச் சேர்ந்த பின்பு பணம் செலுத்தலாம்
* மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்
இல. 72, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 492 1831, 021 492 1832

## விற்பனைக்கு

அல்சேசன் ஆண், பெண் நாயும் டாசோன் ஆண், பெண் நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும், 45 நாள் பூர்த்தி ஆன அதன் குட்டிகளும், வான் கோழி, மணிதாரா, கினிக்கோழி, வண்ரம், ஒரு வருட பூர்த்தியான J.C.இன பசுக்கன்றும்.

தொடர்பு: வி. மயூரன்
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
ஆயக்கடவை பிள்ளையார் கோவில்,
முன்பாக, புத்தூர் கோவிலடி.
(பாலைக்குளி அருகில்)

## மணமகள் தேவை

* 88இல் பிறந்த 2 இல் செவ்வாய், 14 ½ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற விவாகரத்துப் பெற்று வந்துள்ள மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 78இல் பிறந்த 7இல் செவ்வாய், 22 பாவமுடைய விரிவுரையாளர் மணமகனுக்கு (B.Sc) இஞ்சினியர், டாக்டர் மணமகள் தேவை.
* 82 இல் பிறந்த 2இல் செவ்வாய், 11½ பாவமுடைய மனேச்சமன் அசிற்ரன் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

நாலக்கண்ணன் திருமணசேவை
இல. 435/3, கோவில் வீதி, நல்லூர்.
தொ.பே. 077 6070 862

## சிங்கப்பூர் வேலை அனுமதியை பெற்றுக்கொள்வதற்குரிய விளக்கம்

(Employment Pass)

* இரண்டு வருட வேலை
* மாதாந்த சம்பளம் 1250 சிங்கப்பூர் டொலர்
* மாபிள் தொழிற்சாலை.
* மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

107 x 1250 = 133,750/=

அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்
இல.72, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 0214 921831, 0214 921832

(சி/10447) (10,6,3)

## மாதாந்தக் கலையரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 27

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்தக் கலையரங்கு, மன்ற மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. இசையரங்குடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் மாலை 6.30 மணிக்கு முள்ளியவளை அண்ணாவியார் எம்.எஸ். மணியத்தின் நெறியாள்கையில் முல்லை மோடி, கோவலன் கண்ணகி நாட்டுக்கூத்து நடைபெறவுள்ளது. (ந)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் சந்தி, அச்சுக்கூட ஒழுங்கையில் 4 பரப்புக் காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 588 7170
romseyclose@hotmail.com
0044 7875 2087 32

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி மகளிர் கல்லூரி வீதியில் பாடசாலைக்குப் பின்புறமாக உள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 613 9149

DRC DANISH REFUGEE COUNCIL

DRC's Sri Lanka program was initiated in 1998 and aims to support durable solutions for Internally Displaced Persons (IDP's) in the north and east of the country. The program includes activities in the sectors of emergency relief, durable solutions, and assisting IDP's as well as returning populations. DRC's Head Office is located in Vavuniya, with district offices in Trincomalee, Jaffna, Mullaitivu and a liaison office in Colombo.

**Program Helper-Operation**

The Programmed Helper- Administration will be based in the field office in Mullaittivu. S/he will work under the overall charge of the Finance and Admin Officer, Mullaittivu. (PTK)

**General Responsibilities:**

The Programmed Helper- Operation responsibilities and duties are, but not limited to:

- Ensure a good supply of stationary, kitchen and office supplies and prepare the necessary documents for purchase of same..
- Update and maintain the staff attendance and leave record and transmit to Vavuniya office.
- Receive/Send incoming/outgoing letters/correspondence.
- Assist in administration of programme related events (meetings, workshops, seminars, etc).
- Make Appointments and hotel bookings for staff.
- Maintain staff/Vehicles movement records.
- Act as a receptionist and ensure reception area is kept clean and tidy.
- Filling and recording the all administrative documents and displaying them where necessary.

**Specific duties:**

- Scanning of documents related to Finance & Admin functions.
- Support to the Admin/Finance Officer in staff documentation related issues.
- Support to the Logistic Assistant in inventory of office/guest house related items

**Requirements:**

The applicant should have passed the GCE Advanced Level. Experience or knowledge of Admin related work along with a basic level of English (verbal and written) & basic computer knowledge would be preferred. Candidate should be willing to work irregular hours. Residents of Mullaitivu will be given preference.

**Applicants:**

- Interested candidates with the above requirements are invited to submit their bio-data along with two non-related referees, at least one of whom should be a current or former supervisor, to Head of Office, DRC, Ward No 01, Puthukudiyiruppu Junction, Paranthan Road, Mullaitivu to no later than 31st July 2013.
- Please note that DRC is not to be held responsible for late transmission or non-timely receipt of the application.
- Only short listed candidates will be contacted. Successful applicants should be able to start work on short notice.
- Female candidate are encouraged.
- Individuals of all ethnic backgrounds are encouraged to apply.
- Canvassing in any form will be a disqualification.

(சி/11059)(3.6)

## தொலைத் தொடர்பு கோபுரம் அமைத்தல்

### முக்கிய அறிவித்தல்-வலி மேற்கு

வலி மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட கலட்டி வீதியில் (சாந்தி மில் லேன்) மொபிற்றல் (Mobital) எரிசலாற் (Etisalat) தொலைத் தொடர்பு கோபுரம் இணைந்த வகையில் நிர்மாணிப்பதற்கு சபையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றேன்.

திருமதி நா.ஜங்கரன்,
தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை

(c/11058)(6.3.11)

## புதிய வேலைவாய்ப்புகள்

யாழ். குடாநாட்டில் கடந்த 10 வருடங்களாக இயங்கிவரும் உற்பத்தி நிறுவனத்துக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

01. சந்தைப்படுத்தல் பிரிவு பணியாளர்கள்:
Marketing/Sales Jobs பகுதி மற்றும் முழுநேரப் பணியாளர்கள்
1.1 யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம்
1.2 கிளிநொச்சி மாவட்டம்
1.3 முல்லைத்தீவு மாவட்டம்
1.4. வவுனியா மாவட்டம்

02. கோப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் பணியாற்றக் கூடியவர்கள்:
2.1 காரியாலயம் கணினியில் Excel, Word, Internet பணியாற்றக்கூடிய A/L கணிதப்பிரிவில் பயின்ற, பெண் பணியாளர்.
2.2 உற்பத்திப் பிரிவில் பணியாற்றக்கூடிய பணியாளர்கள்

03. வாகன சாரதிகள்: யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் (இலகுரக மற்றும் கனரக வாகன அனுமதிப்பத்திரமுள்ளவர்கள்)

04. நல்லூர்: நகர சபை எல்லைக்குள் வசிக்கும் கணினியில் Excel, Word, Internet பணியாற்றக்கூடிய A/Lகணிதப் பிரிவில் பயின்ற, பெண் பணியாளர் பகுதி மற்றும் முழு நேரப் பணியாளர்கள்.

மேலுள்ள பணிகளுக்குத் தகுதியானவர்கள் தங்களது விண்ணப்பங்களை சுயவிவரக்கோவையுடன் 05.08.2013 இற்கு முன்னர்

விளம்பர இல: 4464,
C/o, உதயன்,
இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

றொட்வில்லர் (Rottweiler) 52 நாள்கள் நிரம்பிய ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
மானிப்பாய்
077 493 3987

## மாங்கல்யா திருமண சேவை

அரசாங்கத்தில் நிரந்தர பொறுப்பு அதிகாரியாக வேலை செய்யும் மணமகனுக்கு வரன் தேவை.(பிறந்த ஆண்டு 1975). பட்டதாரிகள், தனியார் துறையினரின் குறிப்புகள் உண்டு. மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். T.P: 021 720 0811 கு.திருவிளங்கம்.
90, சட்டநாதர் கோயில் வீதி, நல்லூர்

## தவறிவிட்டது

P.விமலநாதன் எனும் பெயருடைய மோட்டார் வாகன பெயர் மாற்றப் பத்திரமும், புத்தகமும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்
தொடர்பு: 077 911 6249 (11053) (3.6.11)

## காணி விற்பனைக்கு

அச்சுவேலி, மகிளடி வைரவர் கோயிலின் பின்புறமாக அமைந்த 4 பரப்பு 10 குளி விஸ்தீரணம் உடைய காணி விற்பனைக்கு.
தொடர்பு: 077 869 3188
(31094)(3.6.11)

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

The Jaffna Education Centre
(சீயோன் தேவாலயத்துக்கு அருகில்)

Spoken English with Grammer
Shorthand Typing
IELTS, ESOL போன்ற பரீட்சைகளுக்கு தயார் செய்துவிடல் வகுப்புகள் நடைபெறுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம் 27.07.2013
ஆசிரியர்: இ.லோகநாயகி
பாடமுடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
T.P: 077 677 93 40

## ELGi சேவிஸ் ஸ்ரேசன் மெசினரிஸ்

4, 8,16,தொன் லிப்டுகள்,கொம் பிரசர், பிரசர் பம்ப், கிறிஸ் பம்ப், ஓட்டோ லிப்ட், பைக் லிப்ட், வீல் அலைன்ஞர்
சகல திருத்துதல் வேலைகளும் செய்து தரப்படும்
ELGi சப்ளையர் (SUPLIER), SN-Tech
94, 4ஆம் குறுக்குத் தெரு (அடைக்கல மாதா ஆலய வீதி), யாழ்ப்பாணம்.
தொடர்பு :- 077687 2656, 077 726 3181 (29877)(3.6.11)

## ஏலவிற்பனை

அலுவலக பாவனைக்குட்படுத்தப்பட்ட பொருள்கள் இன்று (27.07.2013) சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு 33, கலட்டி அம்மன் கோயில் வீதி, யாழ்ப்பாணம் (கலட்டி அம்மன் கோயில் அருகில்) என்னும் விலாசத்தில்,கீழ்வரும் பொருள்களுக்கான ஏல விற்பனை நடைபெறும்.

விற்பனைப் பொருள்கள்:

1. கட்டில்
2. வாங்கு
3. மேசை
4. பின்னல் கதிரை
5. இரும்பு அலுமாரி (6'3"-6'18")
6. கோப்பு அலுமாரி
7. குளிர்சாதனப் பெட்டி
8. சலவை இயந்திரம்
9. கணினி
10. பந்தலுக்குப் பயன்படுத்தப்படும் கல்வனைஸ் குழாய் (பாகிஸ்தான்)
11. ஏனைய தளபாடப் பொருள்கள்
12. தகரப்பந்தலுக்கான உபகரணம் (தகரம் தவிர்த்து)

நுழைவுச்சீட்டு: 100/=
(திருப்பித் தரப்பட மாட்டாது)

(c/11044)(3.6.11)

## கஞ்சா வைத்திருந்த இருவருக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு,ஜூலை 27
கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.எம்.எம்.றியாழ் உத்தரவிட்டுள்ளார்.

இந்த சந்தேகநபர்கள் இருவரையும் வியாழக்கிழமை ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோதே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

சந்தேகநபர்கள் இருவரும் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் ஏறாவூர் பிரதேசத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தாக்கமாட்டோம் முஸ்லிம் மக்களை

## உறுதி கூறுகிறது பொது பல சேனா


கொழும்பு,ஜூலை 27
முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத் தப்படமாட்டாது என்று பொது பல சேனா அமைப்பு அறிவித்துள்ளது.

முஸ்லிம் மக்களை இலக்கு வைத்து தாக்குதல்களையோ, போராட்டங்களையோ நடத் தப் போவதில்லை என்று பொது பல சேனா அமைப்பு உறுதியளித்துள்ளது.

இந்த உறுதிமொழியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சமய விவகார ஆலோசகர் அப்துல் காதர் மசூர் மௌலானாவிடம், பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கல பொடத்தே ஞானசாரதேரர் வழங்கியுள்ளார்.

பொது பல சேனா தலைமையகத்தில் இரு தரப்பினருக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. அந்தச் சந்திப்பின் போது, முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகளுடன் எமக்குத் தொடர்பில்லை என்று பொது பல சேனா தெரிவித்துள்ளது.

சில குறுகிய நோக்கங்களைக் கொண்ட தரப்பினர் பொது பலசேனாவின் பெயரைப் பயன்படுத்தி இவ்வாறான தாக்குதல் சம்பவங்களில் ஈடு பட்டு வருவதாகத் ஞானசார தேரர் தெரிவித்தார்.




முஸ்லிம் மக்களின் தனித்துவ அடையாளங்களைப் பாதுகாக்கும் முயற்சிகளுக்கு பொது பல சேனா எதிர்ப்பை வெளியிட வில்லை என்று அவர் மேலும் கூறினார். (ச)

## 'டைனமோ' இல்லாததால் சைக்கிள்கள் பறிமுதல்



மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேற்றாத்தீவு, மாங்காடு, செட்டிபாளை யம், களுதாவளை, களுவாஞ்சிக்குடி ஆகிய பிரதேசங் களிலிருந்து சுமார் 250 இற்கு மேற்பட்ட சைக்கிள்களை மக்களிடமிருந்து பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

வீதியில் இரவில் டைனமோ வெளிச்சம் இல்லாமல் சென்றவர்களின் சைக்கிள்களே இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

டைனமோ வெளிச்சம் இல்லாத சைக்கிள்களில் பல்வேறு வேலை நிமித்தம் வெளியில் நடமாடிய பொதுமக்களை அவதானித்த களுவாஞ்சிக்குடி பொலிஸார், எந்தவித முன்னறிவித்தலுமின்றி, அனைவரினதும் சைக்கிள்களை பறித்து லொறியில் ஏற்றி களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர் என்று மக்கள் தெரிவித்தனர். (ச)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 27
கிளி/முழங்காவில் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத் தில் இடம்பெறவுள்ளது.

இதில் கல்லூரியின் பழைய மாணவர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதி அதிபர் சி.சசிதரன் கேட்டுள்ளார்.

(400)

# முஸ்லிம்களுக்கு அநியாயங்கள் இறைவனிடம் பிரார்த்தியுங்கள்

## சுபைர் கூறுகிறார்

மட்டக்களப்பு,ஜூலை 27
முஸ்லிம் அரசியல் தலை மைகளை நம்பி இருந்து விடாமல் இறைவனிடம் பிரார்த்தியுங்கள் என்று கிழக்கு மாகாண சபையின் பிரதி தவிசாளர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

ஏறாவூர் அஹமட் பரீட் வித்தியாலய பழைய மண்டபத்தில் சத்துணவு வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
இன்று நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக நடந்து வருகின்ற அநியாயங்களை முஸ்லிம் அரசியல் தலைமைகள் தட்டிக்கேட்பார்கள்; அதற்காக குரல் கொடுப்பார்கள் என்று முஸ்லிம்கள் எண்ணி இருந்து விடாதீர்கள்.

இந்தப் புனிதமான றம்ழான் நோன்பு மாதத்தில் இறைவனிடம் இருகைகளையும் ஏந்திப் பிரார்த்தியுங்கள். முஸ்லிம் தலைமைகளை நம்புவதை விட இறைவனிடம் கையேந்திப் பிரார்த்திப்பது மேலானதாகும். நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக சதி நடவடிக்கைகள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. முஸ்லிம்களின் புனித பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டும் சேதப்படுத்தப்பட்டும் வருகின்றன.

இந்தநிலையில் முஸ்லிம் அரசியல் தலைமைகள் வெறுமனே ஊடகங்களுக்கு அறிக்கை விடுபவர்களாக மாத்திரமே இருக்கின்றனர். இந்த நிலைமையிலிருந்து எம்மை பாதுகாக்க வேண்டி இறைவனிடம் பிரார்த்திக்க வேண்டும்- என்றார். (ச)


**Sky இல் சிறுவர்களுக்கான கணினி**
12,900/= Free- H.Phone/ Web cam/ 4GB Pen

89, Kandy Road, Jaffna.
(021 222 1417/ 075 069 8608)
(யாழ்.கச்சேரிக்கு அருகில்)
(சி/11063) (10,16,14)

**St.Antony's**
**கணினிகள் மலிவு விற்பனை**


எம்மிடம் சகல விதமான கணினிகள், மடிக் கணினிகள், பொக்கற் கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் மலிவு விலையில்.



மடிக் கணினிகள் உடனடியாக திருத்திக் கொடுக்கப்படும்.
187, கே.கே.எஸ். றோட்,
யாழ் நகர்.
021 222 4865/0750698608
(15ஆவது வருட சேவையில்)
(சி/11062)

**வீடு விற்பனைக்கு**
யாழ்.நகருக்கு அருகில் சுதுமலையில் 3 அறை வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 042 69 36
077 291 26 56
(29964)(10,16,14)


# மரண அறிவித்தல்

## மயில்வாகனம் புஸ்பராசா

(இளைப்பாறிய பிரதம லிகிதர்-யாழ். கச்சேரி)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் புஸ்பராசா நேற்று (26.07.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-அமுதரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை- நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், லீலாவதியின் அன்புக் கணவரும், ரஞ்சித்குமார் (நோர்வே), ரஞ்சிதா (நோர்வே), ரஞ்சனா (நோர்வே), ஜெயக்குமார், ரஜி (நோர்வே), விஜி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருள்மதி (நோர்வே), காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும், செகராசசிங்கம் (நோர்வே), ஜசிந்தா, பாஸ்கரன் (நோர்வே), தயாளன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும், நேசமலர் (லண்டன்), யோகராஜா (லண்டன்), காலஞ்சென்ற் அழகராசா ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்றவர்களான திருச்செல்வம், துரைசிங்கம், திருவருட்செல்வம் மற்றும் திரவியம், சுசிலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், லவன் (நோர்வே), விதுரன் (நோர்வே), தனன் (நோர்வே), திலக்சனா, சங்கவி, கார்த்திக், அபி (நோர்வே), ஸ்ரெபி (நோர்வே), பிறிஞ்செட் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2013) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.30 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 14, கிறோசெற் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(29962) (10,16)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி செல்வானந்தி சிறிரங்கநாதன்
அவர்களின் பாசமிகு தந்தை

## பொன்னம்பலம் சோதிவேல்

அவர்கள் அமரத்துவம் அடைந்த தையிட்டு அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப் பதோடு அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்
யா/நாவற்குழி ம.வி, நாவற்குழி, கைதடி.

(29966) (10,16,14)


**கார் விற்பனைக்கு**
HF-xxxx இலக்க நிஷான் FB 15
வெள்ளை நிற கார் விற்பனைக்கு
தொடர்பு: 071 9022 353
(29963) (10,1)

**வலி-தென் மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்**
**பகிரங்க ஏல விற்பனை**
நாம்பன் மாடு - 01
பசுமாடு -01
காலம் - 28.07.2013 (ஞாயிறு)
நேரம் - பி.ப 2.00 மணி
தொடர்பு -
021 320 1113,
077 483 1299
(29959) (10,16)

**வீடியோ கமரா விற்பனைக்கு**
Fx1000E Full HD Sony
Video கமரா Made in Japan
தொடர்புக்கு:
0777 146762
(29965) (10,16,14)

**கார் விற்பனைக்கு**
TATA - INDICA -LXI - (Silver) WP-KA XXXX விற்பனைக்கு உண்டு.
சனி,ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம்.
(முகவர் தேவையில்லை)
தொடர்பு:
077 130 6024, 021 492 3070
(29958) (3.6.11)


**வேலை ஆள் தேவை**
நீர்கொழும்பில் உள்ள எமது ஐஸ்கோண் தொழிற்சாலை ஒன்றுக்கு அங்கு தங்கியிருந்து வேலை செய்வதற்கு ஆண் ஒருவர் தேவை. தங்குமிட வசதியுடன் ரூபா.15,000/= வேதனமாக வழங்கப்படும்.
தொடர்பு: 11A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3857
(29969) (10,16,14)

**தவறிவிட்டது**
சாவகச்சேரி நவீன சந்தை முன்பாக செல்வம் கூல் பாருக்கும் பஸ் நிலையத்துக்கும் இடையில் நேற்று (26.07.2013) மோட்டர் சைக்கிள் திறப்பு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி திருக்கணித பதிப்பகத்தில் ஒப்படைக்கவும்.
தொடர்பு: 077 96 80040
(சி/2725) (10,16,14)

**வீடு விற்பனை**
இராஜ வீதி, ஆவரங்கால் மேற்கில் இரண்டு பரப்புக் காணியில் சகல வசதியும் கொண்ட புதிதாக அமைக்கப் பட்ட வீடுவளவு விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 077 6231 509
(29965) (10,16,14)

## பிரதேச செயலகங்களில் சான்றிதழ் கணினி மயம்

### பதிவாளர்நாயகம் திணைக்களம் அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 27
நாடு முழுவதிலுமுள்ள 249 பிரதேச செயலர் பிரிவுகளின் பிறப்பு, திருமண மற்றும் இறப்பு சான்றிதழ்கள் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் திணைக்களம் அறிவித்துள்ளது.

> தற்போது 200 பிரதேச செயலர் பிரிவுகளில் கணினிகள் மூலமாக சான்றிதழ்களின் பிரதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவற்றில் தற்போது 200 பிரதேச செயலர் பிரிவுகளில் கணினிகள் மூலமாக சான்றிதழ்களின் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்த வருடத்துக்குள் எஞ்சியுள்ள 49 பிரதேச செயலர் பிரிவுகளிலும் சான்றிதழ்களை கணினிமயப்படுத்தி பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை கொழும்பு மாவட்டத்துக்குள் பிறந்த அனைவரும் மாவட்டத்தில் உள்ள 13 பிரதேச செயலர் பிரிவுகளிலும் தமது பிறப்பு, திருமண, மரணச் சான்றிதழ்களின் பிரதிகளைப் பெறுவதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. (ஜ-22)

# தேர்தல்கள் குறித்து பொதுமக்களுக்கு நம்பிக்கையில்லை

### போலி வாக்குறுதிகளே காரணம் என்கிறது 'கபே'

கொழும்பு,ஜூலை 27
தேர்தல்கள் தொடர்பில் மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்று கபே அமைப்பு தெரிவித்துள்ளது.
அரசியல்வாதிகள் அளிக்கும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையே இதற்கான காரணம் என்று அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.
நாட்டின் அரசியல்வாதிகள் மீதும் அரசியல் முறைமை மீதும் மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர் .
இந்த நிலைமையானது நாட்டின் வாக்களிப்பு வீதத்தை மிகவும் மோசமான முறையில் பாதிக்க கூடும் என்று கபே அமைப்புக் கூறியுள்ளது.
செய்யக்கூடிய விடயங்களின் அடிப்படையில் அரசியல்வாதிகள் தங்களது வாக்குறுதிகளை அளிக்க வேண்டியது

> போலி வாக்குறுதிகளை அளிப்பதன் மூலம் மக்களின் அதிருப்தியை சம்பாதிக்க நேரிடும்.

அவசியமாகும்.
மாறாக போலி வாக்குறுதிகளை அளிப்பதன் மூலம் மக்களின் அதிருப்தியைச் சம்பாதிக்க நேரிடும். அது நாட்டின் ஜனநாயகப் பொறிமுறைமைக்கு குந்தகத்தை ஏற்படுத்தும் என்று கபே எச்சரிக்கை விடுத்துள்ளது. (ச)

## கழிவு தேயிலை சிக்கியது



கொழும்பு,ஜூலை 27
பாவனைக்கு உதவாத சுமார் 31 ஆயிரத்து 500 கிலோ கிராம் கழிவு தேயிலையை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.
வெல்லம்பிட்டி, சேதவத்தை பிரதேசத்தில் கழிவு தேயிலை மறைத்து வைக்கப்பட்டிருந்த களஞ்சியசாலை ஒன்றை முற்றுகையிட்டபோதே அங்கிருந்து பெருந்தொகையான கழிவு தேயிலை கைப்பற்றப்பட்டது என்று பொலிஸ் விசேட அதிரடிப்படையின் தலைமையகம் தெரிவித்துள்ளது.
வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 10 கிலோ கழிவு தேயிலை அடங்கிய 150 பெட்டிகளும் கைப்பற்றப்பட்டன என்று தலைமையகம் கூறியுள்ளது. (ச)

## வருடாந்த பரிசோதனை....



சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன கலந்துகொண்டார்.

## கல்வியியற் கல்லூரிக்கு 3400 பேர் இணைப்பு

கொழும்பு,ஜூலை 27
2012 ஆண்டுக்காக ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த 3400 பேரை கல்வியியற் கல்லூரிகளில் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.



இந்த மாத இறுதிக்குள் மாணவர்கள் 18 கல்வியியற் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
இதேவேளை ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடங்களுக்காக கல்வியியற் கல்லூரிகளில் மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மேலும் சில வாரங்கள் தாமதம் ஏற்படலாம் என்று அமைச்சு கூறியுள்ளது. (ச)

## கிழக்கு மாகாண சபையில் சமர்ப்பித்த பிரேரணையை மீளப்பெற்றது மு.காங்கிரஸ்

கொழும்பு,ஜூலை 27
13 ஆவது திருத்தச்சட்டத்தைப் பலவீனப்படுத்தும் திருத்தங்களை மேற்கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை, கிழக்கு மாகாணசபையில் சமர்ப்பித்த முஸ்லிம் காங்கிரஸ், கடைசி நேரத்தில் பின்வாங்கியுள்ளது:
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சமர்ப்பித்திருந்த தீர்மானம் கிழக்கு மாகாண சபையில் புதன்கிழமை விவாதிக்கப்படவிருந்த நிலையிலேயே, முஸ்லிம் காங்கிரஸ் அதனை மீளப்பெற்றுக் கொண்டுள்ளது.
இதனால், இந்தத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்கக் காத்திருந்த, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் உள்ளிட்ட எதிரணி உறுப்பினர்களும் ஏமாற்றத்துடன் சபையில் இருந்து வெளியேறினர்.
இந்தத் தீர்மானம் குறித்த விவாதம் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், தற்போது அதனை முன்னெடுப்பதில்லை என்று கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாண சபையின் குழுத் தலைவர் ஏ.எம். ஜெமீல் தெரிவித்தார்.
இலங்கை அரசு 13 ஆவது திருத்தச்சட்டத்தை திருத்தும் முடிவை பிற்போட்டுள்ளதால், பொருத்தமான நேரத்தில் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படும் என்று அவர் கூறினார். (ச)

# சிறந்த நிர்வாகக் கட்டமைப்புக்கு வடக்கு தேர்தல் சிறந்த சந்தர்ப்பம்

## ஜீவோதய நலன்புரி நிறுவனம் தெரிவிப்பு

அம்பாறை,ஜூலை 27
வடக்கில் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கு வடமாகாண சபைத் தேர்தல் சிறந்த சந் தர்ப்பமாக அமையவுள்ளது.
எனவே இந்த தேர்தலின் முக்கியத்துவம் உணர்ந்து மக்கள் ஏகோபித்து வாக்களிக்க முன்வரவேண்டும்.
இவ்வாறு, வடக்கு, கிழக்கு மாகாண ஜீவோதய நலன் புரி நிறுவனத்தின் தவிசாளரும், தொழிற்சங்கவாதியுமான எஸ்.லோகநாதன் கூறினார்.
அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் இணை நிறுவனமான வடக்கு, கிழக்கு மாகாண ஜீவோதய நலன்புரி நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக் கூட்டம் கல்முனை சனச மண்டபத்தில் நடைபெற்றது.
இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த மூன்று தசாப்தகாலப் போரால் பல்வேறு துன்ப, துயரங்களுக்குள்ளாகி பல இழப்புக்களையும் சந்தித்து இன்றும் மீளாத் துன்பங் களை வடபகுதி மக்கள் அனுபவித்து வருகின்றனர்.
பேரினவாதத்தின் அடக்கு முறையும், ஆக்கிரமிப்புகளும் வடக்கில் மட்டுமன்றி கிழக்கிலும் தொடர்ந்த வண்ணமுள்ளன.
இந்தநிலையில் தான் ஒரு சிறிய ஒளிக்கீற்றுப் போல் வடமாகாண சபைக்கான தேர்தல் அறிவிப்பு

> தேர்தலை நம் தமிழ் மக்கள் எளிதாகக் கருதி விடாது, முக்கியத்துவத்துடன் நோக்க வேண்டும்.

வந்துள்ளது. இந்தத் தேர்தலை நம் தமிழ் மக்கள் எளிதாகக் கருதி விடாது, முக்கியத்துவத்துடன் நோக்க வேண்டும். வடக்கில் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கு வடமாகாண சபைத் தேர்தல் சிறந்த சந்தர்ப்பமாக அமையவுள் ளது.
குறிப்பாக சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ள இந்தத் தேர்தலில் வடக்குத் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவை வெளிப்படுத்துவதுடன், தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்துவதாகவும் அமைய வேண்டும்.
இந்தநிலையில் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் உட்பட இடம்பெயர்ந்த சகல மக்களையும் உள்வாங்கி நீதி, நேர்மையுடன் வடக்குத் தேர் தலை நடத்துவதற்கு அரசும் முன்வர வேண்டும்.
தமிழினத்தின் விடிவுக்காக அன்றும், இன்றும் அர்ப்பணிப்புடன் பாடுபட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் போட்டியிடவுள்ளது.
இதனை வரவேற்கத்தக்கதாக நாம் ஏற்றுக் கூட்டமைப்பின் அமோக வெற்றிக்காகவும், வடக்கின் மாகாண சபை ஆட்சி அதிகாரத்திலமர்ந்து சிறந்த நிர்வாகக் கட்ட மைப்புடன் சேவையாற்றுவதற்காகவும் ஏகோபித்த ஆதரவை வழங்கவும் வேண் டும்- என்றார். (ச-30)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# இந்தியாவின் விட்டுக் கொடுப்பு இலங்கைத் தமிழருக்கே பாதிப்பு

அதிகாரப்பரவலாக்கல் அம்சமான 13 ஆவது திருத்தம், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளதை நாம் புரிந்துகொள்கின்றோம். அதனால்தான் 13 ஆவது திருத்தத்தையும், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும் இலங்கை அரசு இல்லாது ஒழிக்க முயல்கின்றது.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் தலைமைகளுடன் கலந்தாலோசித்து இந்தியா தனது இலங்கை பற்றிய கொள்கைகளை வகுக்க வேண்டும் - என்றார். (த-5)

# நேற்றும் ஒரு கட்சி வேட்பு மனு

நேற்றுமுன்தினம், பத்தர முல்ல சீவரத்ன தேரோவை செயலாளராகக் கொண்ட ஜனசெதபெரமுன என்ற கட்சி வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் வேட்பு மனுத் தாக்கல் செய்தது.

நேற்று அந்தக் கட்சி வடக்கின் ஏனைய இரு மாவட்டங்களான யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகியவற்றில் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி நேற்று முன்தினம் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளது. அத்துடன் சுயேட்சைக் குழுவொன்றும் தேர்தலில் போட்டியிடக் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் ஒவ்வொரு சுயேட்சைக்குழு கட்டுப்பணம் செலுத்தியுள்ளது. (த-5)

# மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை பெரும் பின்னடைவு

அழுத்தம் கொடுப்பதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வர்' என்று பிரிட்டன் சமூகங்கள், உள்ளூராட்சி, வெளிவிவகார, பொதுநலவாய விவகாரத்துக்கான பணியகத்தின் மூத்த அமைச்சர் பரோனெஸ் சயீடா லர்சி, தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

போருக்குப் பின்னரான நல்லிணக்கத்திலோ பொறுப்புக்கூறலிலோ முன்னேற்றம் ஏற்படாமை குறித்தும், இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் நிலை குறித்தும் இலங்கை அரசிடம் எங்கள் கவலைகளை வெளிப்படுத்தி உள்ளோம்.

கருத்து மற்றும் வெளிப்பாட்டுச் சுதந்திரம் நீதித்துறைச் சுதந்திரம் உள்ளிட்ட இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்தும் கவலை கொண்டுள்ளோம்.

மனித உரிமைகள் நிலைமையில் உறுதியான முன்னேற்றம், நல்லிணக்கம் வடக்கு மாகாண சபைக்கு நீதியான - நியாயமான - அமைதியான தேர்தல், ஊடகங்கள் மற்றும் சமூக அமைப்புகள் பொதுநலவாய மாநாட்டில் சுதந்திரமாக செயற்பட அனுமதித்தல் என்பனவற்றை பிரிட்டன் எதிர்பார்க்கிறது. இதை நாம் இலங்கை அரசுக்குத் தெளிவாக வலியுறுத்தி உள்ளோம் - என்றார். (த-5)

# வடக்குத் தேர்தலின் போது பிரச்சினைகள் இடம்பெறா

நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். தேர்தலை முன்னிட்டு வேட்பாளார்களின் பாதுகாப்புத் தொடர்பாகவும் தேர்தல் காலத்தில் பாதுகாப்பு தொடர்பாகவும் செய்தியாளர்களால் அங்கு கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த போதே ஏக்கநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலை முன்னிட்டு பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். யாழ். மாவட்டதிலுள்ள 17 பொலிஸ் நிலையங்களிலும் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்ய, விசாரணைகள் மேற்கொள்ளவெனத் தனிப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. விசேட தொடர்பாடல் வசதிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் கட்சிகள் தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் போது ஏற்படும் இடர்நிலையைத் தவிர்க்கும் பொருட்டு தனித்தனிப் பிரிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இது வரை எந்த முறைப்பாடுகளும் பதிவாகவில்லை - என்றார். (த-4-86)

# காணாமற்போனோர் குறித்து ஆராய்வதற்கு ஆணைக்குழு

குறித்து வெளிப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் அதற்குப் பொறுப்பானவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஒலிவர் டி. புரோ தலைமையிலான ஐ.நா. நிபுணர்குழு கடந்த சில தினங்களுக்கு முன்னர் வலியுறுத்தியுறுத்தி இருந்தது.

இதனையடுத்து, கடந்த 30 ஆண்டுகளில் காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்த ஆணைக்குழு ஒன்றை நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார் என ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இந்த ஆணைக் குழுவுக்கான உறுப்பினர் நியமனம், அதன் பணி எல்லை குறித்த முடிவு விரைவில் எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வில், இறுதிக்கட்டப் போரில் காணாமற்போனவர்கள் தொடர்பில் பெரும்பாலான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இது தொடர்பில் விசாரித்த இராணுவ நீதிமன்றமும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் இறுதிக்கட்டப் போரில் சரணடைந்த எவரும் காணாமற்போகவில்லை என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

**விற்பனைக்கு**

அச்சகம் ஒன்றுக்கு தேவையான அனைத்துப் பொருள்களும் உடன் விற்பனைக்கு. தொடர்பு:-0772727227

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா?உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.அழையுங்கள்.
0779086737 **GUNAA BEST PC**
52,Hospital Road,Jaffna.

**காணி துப்பரவு செய்தலும் மட்டப்படுத்தலும்**

காணி துப்பரவு செய்தல், மட்டப்படுத்தல், பழைய வீடு உடைத்து கொடுத்தல் என்பன நியாய விலையில் செய்து தரப்படும்.



தொடர்பு:
0779341148

## உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

**வலிகாமம் கல்வி வலயத்தில் பின்வரும் பாடங்களுக்கு நிரந்தர அல்லது கடமை நிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.**

1.உதவிக் கல்விப் பணிப்பாளர் - உடற்கல்வி
2.உதவிக் கல்விப் பணிப்பாளர் - முன்பள்ளி
3.உதவிக் கல்விப் பணிப்பாளர் - முறைசாராக் கல்வி
4.உதவிக் கல்விப் பணிப்பாளர் - சமூக விஞ்ஞானம்
5.உதவிக் கல்விப் பணிப்பாளர் - வர்த்தகம்
6.உதவிக் கல்விப் பணிப்பாளர் - தொழில்நுட்பப் பாடங்கள்

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்**

★ இப்பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் வலிகாமம் வலயத்துக்கு உட்பட்டவர்களாகவும் குறைந்தது 3 வருட காலமேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லை உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

★ இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு IIIஐச் சேர்ந்த குறிப்பிட்ட பாடத்தை (அல்லது அப்பாடம் சார்ந்த ஏற்புடைய பாடத்துறை) ஒரு பாடமாக கொண்டு பட்டம் பெற்ற இலங்கை ஆசிரியர் சேவை I வகுப்பு அல்லது இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 2-1 ஐச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு III இல் உள்ள உத்தியோகத்தர்கள் எவரும் இல்லாதவிடத்து, இலங்கை ஆசிரியர் சேவை தரம் I இல் உள்ள மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-1 உடன் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றுவோர் ஆகியோரிடமிருந்து பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-1 இலுள்ள ஆசிரியரிடமிருந்து தெரிவு மேற்கொள்ளப்படும்.

**குறிப்பு:-**

விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 12/08/2013 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**செ.சந்திரராஜா,**
**வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்.** (சி/11064)

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து மூத்ததம்பி



சிறுப்பிட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து மூத்ததம்பி நேற்று (26.07.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நாகபூசனி இல்லம்,**
**சிறுப்பிட்டி கிழக்கு.**
**021 2230068**

(29971)

**தகவல்:**
**திரு.திருமதி. யோகநாதன் தவமணிதேவி.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும் நன்றி நவிலலும்



கடந்த 28.06.2013இல் சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

### திருமதி செல்லம்மா சரவணமுத்து

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (27.07.2013) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கேணியிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (28.07.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். இந்த நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிகள், பதாதைகள், வெளியிட்டோருக்கும் இறுதிவரை உதவி புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

உசன், மிருசுவில். (சி/[illegible]) குடும்பத்தினர்.

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை, ஜூலை 27
பருத்தித்துறை குரும்பை கட்டி உதயசூரியன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கழகங்களுக்கிடையே நடத்தி வரும் மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம் பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகள்:

காலை 8 மணி
ஐங்கரா விளையாட்டுக்கழகம் எதிர் மாவடி ஸ்ரார் விளையாட்டுக்கழகம்

மு.ப. 9.30 மணி (காலி றுதி ஆட்டம்)
காலை 8 மணி ஆட்டத்தில் வெற்றி பெற்ற அணி எதிர் வதிரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம்

பிற்பகல் 2 மணி
கலைமகள் விளையாட்டுக் கழகம் எதிர் திருநாவலூர் விளையாட்டுக்கழகம்

மாலை 4 மணி (காலிறுதி ஆட்டம்)
பி.ப. 2 மணி ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி எதிர் அண்ணா சிலையடி விளையாட்டுக்கழகம். (ற-34)

★★★

யாழ்ப்பாணம், ஜூலை 27
மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகம் நடத்தும் பாலகிருஷ்ணன் வெற்றிக் கிண்ண '20/20' கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

காலை 8மணி
நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் யூனியன்ஸ் விளையாட்டுக்கழகம்.

முற்பகல் 11மணி
ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் கிறாஸ் கோப்பர்ஸ் விளையாட்டுக் கழகம்.

பிற்பகல் 2மணி
ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக்கழகம் எதிர் விக்ரோறியா விளையாட்டுக்கழகம். (ற-23)

★★★

பருத்தித்துறை, ஜூலை 27
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் விளையாட்டு நிகழ்வுகளில் இன்று காலை 7மணிக்கு நெடுந்தூர மரதன் ஓட்டப் போட்டியும் மாலை 4 மணியளவில் விநோத உடைப் போட்டியும் இடம்பெற உள்ளன. (ற-34)

★★★

தென்மராட்சி, ஜூலை 27
கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 58ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக்கழகம் தென்மராட்சிப் பிரதேச கிரிக்கெட் அணிகளுக்கிடையே நடத்திய கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் இன்று பி.ப.2 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறும்.
அதில் மட்டுவில் வடக்கு கண்ணகை விளையாட்டுக் கழகம் மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ற-34)



நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியில் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் கழகத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. விளையாட்டு நிகழ்வுகளில் இடம்பெற்ற சைக்கிள் ஓட்டப்போட்டியின் ஆரம்பத் தருணம்... (ற-23)

# கரவெட்டி ஞானம்ஸ் சம்பியன்

பருத்தித்துறை, ஜூலை 27
அச்சுவேலி முரசொலி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் கழகங்கள் இடையே நடத்திய 5 பந்துப் பரிமாற்ற மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் சம்பியனாக கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் தெரிவானது.



இறுதியாட்டத்தில் கொட்டடி இளங்கதிர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் களமிறங்கியது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கரவெட்டி ஞானம்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.
கரவெட்டி ஞானம்ஸ் அணியின் ஆரம்ப ஆட்டக்காரர்கள் மிகவும் அதிரடியாக ஆடினர். கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 62 ஓட்டங்களைக் குவித்தனர்.
கரவெட்டி ஞானம்ஸ் சார்பாக கீதன் 22 ஓட்டங்களையும் அனுசயந்தன் 19 ஓட்டங்களையும்பெற்றுக்கொண்டனர்.
பந்துவீச்சில் கொட்டடி இளங்கதிர் அணியின் எந்தவொரு பந்து வீச்சாளரும் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தத் தவறியிருந்தனர்.
இமாலய இலக்கான 63 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இளங்கதிர் விளையாட்டுக் கழகத்தினர் ஆரம்பம் முதலே சீரான இடைவெளியில் தமது இலக்குகளை இழந்தனர். அதனால் ஓட்ட வேகம் ஆமை வேகத்திலேயே நகர்ந்துகொண்டிருந்தது. முடிவில் 4.5 என்ற பந்துபரிமாற்றங்களில் 28 ஓட்டங்களுக்குள் தமது அனைத்து இலக்குகளையும் இழந்து 34 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவினர் கொட்டடி இளங் கதிர் விளையாட்டுக் கழகத் தினர்.
துடுப்பாட்டத்தில் இளங்கதிர் விளையாட்டுக்கழகத்தில் பிரசாந் 13 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.
கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் சார்பாக பந்து வீச்சில் கீதன் 2 இலக்குகளையும் சேந்திரன் 1 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.
இறுதியாட்டத்தில் சகல துறைகளிலும் ஜொலித்த ஞானம்ஸ் அணியின் கீதன் ஆட்டநாயகனாகவும் இச்சுற்றுப்போட்டியில் தொடர்நாயகனாக இதே அணியின் சேந்திரனும் தெரிவாகினர். (ற-34)

## மஞ்சிக் கிண்ண கரப்பந்து சுற்றுத் தொடர் நாளை

வலி.வடக்கு, ஜூலை 27
மஞ்சி வெற்றிக் கிண்ணத் தொடருக்காக யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தால் தென்மராட்சி, வடமராட்சியைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி முதல் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகத்தில் நடைபெறவுள்ளது.
போட்டிகளில் பங்குபற்றும் கழகங்கள் குறித்த நேரத்தில் மைதானத்துக்கு வருகை தரும்படி கரப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ற-86)

# தடகளப் போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டியும், ஆண், பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்களும் இன்று சனிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி றூபினிவரதலிங்கம்தலைமையில் இடம்பெறவுள்ளன.
ஆண்களுக்கான உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் யாழ். பிரதேச செயலக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை



பிரதேச செயலக அணி மோதவுள்ளது.
தொடர்ந்து இடம்பெறும் பெண்களுக்கான உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் வேலணை பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதவுள்ளது.
அதைத் தொடர்ந்து தடகளப் போட்டிகளின் இறுதி நிகழ்வுகள் இடம்பெறும். இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினராக சங்கானை பிரதேச செயலர் ஆர்.சோதிநாதன் , கௌரவ விருந்தினர்களாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் றோயல் விமலேந்திரன், முன்னாள்யாழ்.மாவட்டவிளையாட்டுத்துறை அதிகாரி திருமதி எவ்.ஜே றூபசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-23)

## உதைபந்து மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியடைந்தோர்

யாழ்ப்பாணம், ஜூலை 27
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால் கடந்த தை மாதம் யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழி மூலம் நடத்திய உதைபந்தாட்ட மத்தியஸ்தர் தரம் I, தரம் II, தரம் III பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.
அதன் விவரம் வருமாறு:

தரம் III
இராசரத்தினம் பிரணவறூபன், சுந்தரராஜா தீலீபன், தர்மகுலசிங்கம் சிவநாதன், நடராஜா கிருபானந்தன், கந்தசாமி றூபஜெயந்தன்,



செபமாலை யூட் கெனடி, மகேந்திரமணி மசுஷனன், மகாலிங்கம் சந்திரகுமார், கே.பிரசாந்தன், செல்வரெட்ணம் ஜெயந்தறூபன், ஜோகநாதன் சுதாகர், கனகலிங்கம் சுகந்தன்.

தரம் II
முத்துக்குமார் நகுலேஸ்வரன், மரியநாயகம் ஜெனிஸ்ரன் இதயகுமார். (ற-23)

# கரைச்சிப் பிரதேச செயலகம் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட மாவட்ட விளையாட்டுப் போட்டிகளில் கரைச்சிப் பிரதேச செயலக அணி 138 புள்ளியைப் பெற்று முதலிடத்தையும், கண்டாவளை பிரதேச செயலக அணி 60 புள்ளிகளைப்பெற்று இரண்டாமிடத்தையும், பூநகரிப் பிரதேச செயலக அணி 31 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற் றுள்ளன.
கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இந்த மைதான விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன.
ஆண்களுக்கான மெய்வன்மைப் போட்டியில் கரைச்சிப் பிரதேச செயலக அணி 99 புள்ளிகளையும், கண்டாவளைப் பிரதேச செயலக அணி 19 புள்ளிகளையும், பூநகரிப் பிரதேச செயலக அணி 15 புள்ளிகளையும் பெற்றன.
பெண்களுக்கான மெய்வன்மைப் போட்டிகளில் கரைச்சிப் பிரதேச செயலக அணி 84 புள்ளிகளையும், கண்டாவளைப் பிரதேச செயலக அணி 40 புள்ளிகளையும் பூநகரிப் பிரதேச செயலக அணி 13 புள்ளிகளையும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அணி 05 புள்ளிகளையும் பெற்றன.
பெரு விளையாட்டுப் போட்டிகளில் கரைச்சிப் பிரதேச செயலக அணி 118 புள்ளிகளையும், கண்டவளை பிரதேச செயலக அணி 51 புள்ளிகளையும், பூநகரிப் பிரதேச செயலக அணி 31 புள்ளிகளையும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அணி 21 புள்ளிகளைப் பெற்றுள்ளன.
சிறந்த தட வீரராக கரைச்சிப் பிரதேசசெயலகத்தைச் சேர்ந்த என்.நிசாந்தன் தெரிவானார்.
சிறந்த தட வீராங்கனையாக கரைச்சி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே.சகீதா தெரிவானார்.
சிறந்த கள வீரனாக கரைச்சிப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.கமல்ராஜ் தெரிவு செய்யப்பட்டார்.
சிறந்த கள வீராங்கனையாக பூநகரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த என்.யாழினி தெரிவு செய்யப்பட்டார்.
2013 ஆம் ஆண்டு சிறந்த தடகள வீரனாக கரைச்சிப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.கமல்ராஜ் தெரிவுசெய்யப்பட்டார். (ற-23)

# சாதனை படைத்தார் விராட் கோஹ்லி



சிம்பாப்வேக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் 115 ஓட்டங்கள் குவித்த விராட் கோஹ்லி ஒரு நாள் போட்டியில் அதி வேகமாக 15 சதங்களை எடுத்த வீரர் என்ற புதிய சாதனைக்கு சொந்தக்காரர் ஆகியிருக்கிறார்.

இது 15ஆவது சதமாகும். அவர் தனது 15ஆவது சதத்தை 106ஆவது ஆட்டத்தில் பெற்றிருக்கிறார்.

இதற்கு முன்பு பாகிஸ்தானின் சயீட் அன்வர் தனது 143ஆவது போட்டியில் 15ஆவது சதம் எடுத்ததே சாதனையாக இருந்தது. சௌரவ் கங்குலி 144 ஆவது ஆட்டத்திலும், கிறிஸ் கெய்ல் 147ஆவது ஆட்டத்திலும் இந்த இலக்கை எட்டினார்கள்.

இந்திய சாதனைச் சிகரம் சச்சின் தெண்டுல்கர் 15 ஆவது சதத்தை தனது 182 ஆவது ஆட்டத்தில் தான் தொட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# "இது எனக்குத் தேவைதான்"

## டேவிட் வோர்னர் கூறுகின்றார்



தனது நடத்தைகளுக்காக அணியிலிருந்து நீக்கப்பட்டிருக்க வேண்டியவன் என்று ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர் தெரிவித்துள்ளார்.

அதிரடி வீரரான டேவிட் வோர்னர் இங்கிலாந்தில் இடம்பெற்ற சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் போது மதுபோதையில் இங்கிலாந்து வீரர் ஜோறூட்டைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டின் காரணமாக டேவிட் வோர்னருக்கு ஆஷஷ் தொடரின் முதலாவது டெஸ்ற் போட்டி வரை தடை விதிக்கப்பட்டது.

அந்தத் தடையைத் தொடர்ந்து, அவருக்கு ஆஷஷ் தொடரின் முதலிரண்டு போட்டிகளுக்கான அணியிலும் இடம் கிடைத்திருக்கவில்லை.

தற்போது அவர் ஆஸ்திரேலிய 'ஏ' அணிக்காக தென்னாபிரிக்காவில் போட்டிகளில் பங்குபற்றி வருகிறார்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள டேவிட் வோர்னர், தனது தவறின் காரணமாக அந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும், இந்தத் தண்டனை தனக்குத் தேவையானது எனவும் குறிப்பிட்டார்.

அத்தோடு, அணியில் தெரிவு செய்யப்படாமை சரியானது எனவும் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக ஓட்டங்களைப் பெறத் தடுமாறி வந்த டேவிட் வோர்னர், தென்னாபிரிக்க 'ஏ' அணிக்கெதிராக 193 ஓட்டங்களைக் குவித்துள்ள நிலையில், மூன்றாவது டெஸ்ற் போட்டியில் பங்குபற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ற)



# தவான் அதிரடிச் சதம் சிதறியது சிம்பாப்வே

சிம்பாப்வே அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்திலும் இந்திய அணி அபார வெற்றியீட்டியுள்ளது.

இந்தியா , சிம்பாப்வே அணிகள் மோதும் 2ஆவது ஒரு நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இந்திய அணியின் ஆரம்ப ஆட்டகாரர்களாக தவான் மற்றும் ரோகித் சர்மா ஆகியோர் களமிறங்கினார்கள்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 2 ஆக இருந்த போது ரோகித் சர்மா 1 (7) ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். முதலாவது ஆட்டத்தில் சதம் அடித்த அணித்தலைவர் கோஹ்லி 14 ஓட்டங்களுடனும் தொடர்ந்து அம்பத்தி ராயுடு 5 ஓட்டங்களுடனும், முதல் ஆட்டத்தில் 'டக் அவுட்' ஆன ரெய்னா இம்முறை 4 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இந்திய அணி ஒரு கட்டத்தில் 65 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து தத்தளித்துக் கொண்டிருந்தது.

ஒருபுறம் இலக்குகள் சரிந்தாலும், மறுமுனையில் தவான் நிலைத்துநின்று திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 5ஆவது இலக்குக்காக இணைந்த தவான் - கார்த்திக் நிதானத்துடனும், அதிரடியாகவும் ஓட்டங்களைச் சேர்த்தனர். அணியின் எண்ணிக்கை 232 ஆக இருந்த போது தினேஷ் கார்த்திக் 69 ஓட் டங்களுடன் 'ரன் அவுட்' ஆனார்.

கார்த்திக்கை தொடர்ந்து சிறப்பாக விளையாடி வந்த தவானும் தனது இலக்கைப் பறிகொடுத்தார். தவான் 127 பந்துகளை சந்தித்து 116 ஓட்டங்களைக் குவித்தார். அதில் 11 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கும். தவான் - கார்த்திக் இணை 5ஆவது இலக்குக்காக 167 ஓட்டங்களைக் குவித்தது. அதன் பின்னர் ரவீந்தர் ஜடேஜா 15, மிஸ்ரா 9 ஓட்டங்களுடன் எடுத்து ஆட்டமிழந்தனர். கடைசி நேரத்தில் வினய்குமார் அதிரடியாக விளையாடினார். 12 பந்துகளை சந்தித்து 27 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். அதில் 2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கும்.

இறுதியில் இந்தியா 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 294 ஓட்டங்களை எடுத்தது. சிம்பாப்வே அணிக்கு 295 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது .

295 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய சிம்பாப்வே அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் சிக்கன்டர் ரசா, உசி சிபண்டா ஜோடி சிறப்பான தொடக்கம் அளித்தனர்.

சிக்கன்டர் ரசா 20 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அரை சதம் அடித்த உசி சிபண்டா 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து சிம்பாப்வே அணி அடுத்தடுத்து இலக்குகளைப் பறிகொடுத்த வண்ணம் இருந்தனர்.

ரெய்லர் 0, சீன் வில்லியம்ஸ் 5, ஹாமில்ட்டன் 34, வால்லர் 2 என வரிசை கட்டினர். 6ஆவது இலக்குக்காக இணைந்த சிக்கும்புரா, உட்சேய இணை நிதானத்துடன் விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

சிறப்பாக ஆடி வந்த சிக்கும்புரா 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் உட்சேய அரைச் சதம் கண்டார்.

50 பந்துப்பரிமாற்றங்கள் 9 இலக்குகளை இழந்து 236 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இறுதியில் 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 5 ஒருநாள் போட்டி தொடரில் 2 வெற்றிகளை பெற்று இந்திய அணி 2:0 என முன்னிலை வகிக்கிறது. ஆட்ட நாயகனாக தவான் தெரிவானார். (ற-400)



# கோஹ்லிக்கு வருமா தடை?

நடுவரால் அறிவிக்கப்பட்ட ஆட்டமிழப்பு தொடர்பாக அதிருப்தி அடைந்த இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி, காறி உமிழ்ந்தபடி மைதானத்தை விட்டு வெளியேறினார். அதையடுத்து அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியா, சிம்பாப்வே அணிகளுக்கு இடையான 2ஆவது ஒரு நாள் போட்டி ஹராரேவில் நேற்று நடைபெற்றது. அதில் விராட் கோஹ்லி ஆட்டமிழந்த விதம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்தியாவின் துடுப்பாட்டத்தின் போது 7ஆவது பந்துப்பரிமாற்றத்தை கைல் ஜார்விஸ் வீசினார். அதில் 2ஆவது பந்தை தூக்கி அடித்தார் கோஹ்லி. பந்து 'மிட் ஓன்' திசையில் போனது. அதை மால்கம் வோலர் பாய்ந்து பிடித்தார். ஆனால் தான் ஆட்டமிழந்ததை ஏற்கவில்லை கோஹ்லி.

இதையடுத்து 3ஆவது நடுவரான ருஸ்ஸல் டிபினின் முடிவுக்கு விட்டார் கள நடுவரான ஆஸ்திரேலியாவின் ப்ரூஸ் ஆக்ஸன்போர்ட்.


இதையடுத்து 3ஆவது நடுவர் டிபினிடம் முடிவு விடப்பட்டது. ஆனால் முடிவை அறிவிக்க முடியாமல் தடுமாறினார்.

அதனால் கோஹ்லி அதிர்ச்சி அடைந்தார். மறுபடியும் மைதானத்தை விட்டு வெளியேறாமல் நின்று கொண்டிருந்தார். மேலும் இது ஆட்டமிழப்பா, இல்லையா என்ற முடிவு கள நடுவரிடமே விடப்பட்டது.

இதையடுத்து கள நடுவர் ஆக்ஸன்போர்டிடம் பேசினார் கோஹ்லி. அவரோ ஆட்டமிழப்புத்தான் என்று கூறிவிட்டார்.

அதனால் கடும் அதிருப்தியடைந்த கோஹ்லி, கோபத்துடனும், அதிருப்தியுடனும் வெளியேறினார். போகும் போது காறித் உமிழ்ந்தபடி போனதால் சலசலப்பும் ஏற்பட்டது.

கோஹ்லியின் செயல் தவறு என்று கூறப்படுகின்றது. அதனால் போட்டி நடுவர் கிறிஸ் விஷெராட், கோஹ்லிக்கு அபராதம் அல்லது தடை போன்ற ஏதாவது தண்டனை விதிப் பார் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (ற)



# சாதித்தனர் இலங்கை மகளிர்



மகளிருக்கான உலக '20/20' தொடருக்கான தகுதிகாண் ஆட்டங்களில் இலங்கை மகளிர் அணி சிறப்பான வெற்றியைப் பெற்றுள்ளது.

ஜப்பான் மகளிர் அணிக்கெதிரான ஆட்டத்தில் இலங்கை மகளிர் அணி 10 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

டப்ளினில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை மகளிர் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஜப்பான் மகளிர் அணி 18.1 பந்துப்பரிமாற்றங்களில் 21 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

முதலாவது பந்திலேயே தனது முதலாவது இலக்கை இழந்த ஜப்பான் மகளிர் அணி, 7 இலக்குகளை இழந்து 11 ஓட்டங்களுடன் தடுமாறியது. எனினும் 8ஆவது இலக்குக்காக 8 ஓட்டங்கள் பகிரப்பட்டன.

துடுப்பாட்டத்தில் ஜப்பான் மகளிர் அணி சார்பாக அயாகோ நாகாயமா 37 பந்துகளில் 12 ஓட்டங்களைப் பெற்றார். வேறு எந்த வீராங்கனையும் 2 ஓட்டங்களுக்கு அதிகமாகப் பெறவில்லை.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக சண்டிமா குணரத்ன 4 பந்துப்பரிமாற்றங்களில் 2 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஸ்ரீபாலி வீரக்கொடி 3 பந்துப்பரிமாற்றங்களில் 2 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், இஷானி கௌஷல்யா 4 பந்துப்பரிமாற்றங்களில் 5 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஷஷிகலா சிரிவர்தன, சாமனி செனவிரத்ன இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

வழங்கப்பட்ட வெற்றி இலக்கை இலங்கை மகளிர் அணி 1.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் இலகுவாக அடைந்தது.

இலங்கை சார்பாக யசோதா மெண்டிஸ் 7 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும், சாமரி அத்தப்பத்து 3 பந்துகளில் 4 ஓட்டங்களையும் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகியாக இலங்கை சார்பாக 2 இலக்குகளையும், 2 'ரண் அவுட்' வாய்ப்புக்களையும் ஏற்படுத்திய இஷானி கௌஷல்யா தெரிவானார்.

இந்த வெற்றியை அடுத்து இலங்கை அணி அரையிறுதிக்குத் தகுதிபெற்றுள்ளது. இந்தத் தொடரில் முதல் 3 இடங்களைப் பெறும் அணிகள் உலக "20/20" தொடருக்குத் தகுதிபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

**பணிநிலை வெற்றிடங்கள்**
புத்தகம், ஸ்ரேசனரிப் பொருள்கள் வியாபாரத்தில் முன் அனுபவமுள்ள இருபாலாரும் விரும்பப்படுகின்றனர். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். ஆர்வமுடையோர் நேரில் வரவும்.
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/11038) (10,6)

**பொருளியற் கல்லூரி**
நாவலர் றோட், யாழ்ப்பாணம்
A/L - 2015
TECHNOLOGY
புதிய பிரிவு ஆரம்பமாகி நடைபெறுகின்றது. (சனி, ஞாயிறு 10AM)
இது துறைசார்ந்த பிரபல விரிவுரையாளர்களால்.
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

**பிரத்தியேக வகுப்பு**
பிரபல ஆசிரியரால் A/L பொருளியல், தரம் 10, 11 இக்கு குடியுரிமைக் கல்வி ஆகிய பாடங்கள் தனியாகவோ, குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு : 077 906 4595
(29951) (10,6)

**உடன் தேவை** 0777917680
அச்சகத்தில்
Photoshop
Pagemaker
Corel Draw
தமிழ் English Typing தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.
12 Noon 5 Pm வரை
அச்சக வேலையில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
நேரில் வரவும்
(மாநகர சபை எல்லைக்குள் உள்ளவர்கள்)
ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ்
கைலாச பிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**BEACON STUDY CENTER**
Vathiry, Karaveddy.
விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் துறைசார்ந்த ஆசிரியர்களினால்
தொழில்நுட்பவியல் பாடநெறிகள்
A/L 2015
* Science for Technology
* Engineering Technology
* Bio Systems Technology
புதிய பிரிவுகள் ஆரம்பம்
27.07.2013
சனி பி.ப. 3 மணி
T.P: 077 60 29 235

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் மிக விரைவில்.. T.P.021.222.8093
61, Kachchery-Nallur Road, Jaffna
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

**BIT**
கொழும்பு பல்கலைக்கழக வெளிவாரி தகவல் தொழில்நுட்பப் பட்டப்படிப்பு
(Bachelor of Information Technology)
வேலைவாய்ப்புகளுக்கு அதிகளவு கேள்வியுள்ள IT துறையில் பட்டப்படிப்பை பெற்று நவீன உலகத்துடன் உங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள்
அனுபவம் மிக்க விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படுகின்றது
புதிய பிரிவுகள் 28.07.2013 காலை 9 மணிக்கு
ESOFT METRO CAMPUS - JAFFNA
No 137, K.K.S Road, Jaffna | TEL : 021 750 1120 | CALL : 077 309 9 308
Shaping Lives, Creating Futures.

**NOTHERN PC PARK**

| | |
|---|---|
| LAPTOP - G6HP i3<br>4GB RAM, 500GB HDD<br>15.6" DISPLAY 65,000/- | DELL 5420 - i3<br>4GB RAM, 500GB HDD,<br>15.6" LED DISPLAY 64,000/- |
| HP 2000 - i3<br>2GB, 500GB HDD,<br>15.6" DISPLAY 62,000/- | HP PRO BOOK 4540 - i4<br>4GB RAM, 750GB HDD,<br>2GB VGA,15.6" LED DISPLAY 83,000/- |
| DELL i5<br>4 GB RAM, 500GB HDD, 14.1" LED DISPLAY. 71,000/- | |
| i3 3rd GEN<br>INTEL 61 MOTHER BOARD<br>4GB RAM, 500GB HDD, DVD WRITER,<br>19" LED MONITOR, 650V UPS, KEY BOARD, MOUSE, SPEAKERS. 59,500/- | DUAL 3rd GEN<br>INTEL 61 MOTHER BOARD, 2GB RAM, 500GB HDD, DVD WRITER, ATX CASING<br>19" LED MONITOR, 650V UPS, KEY BOARD, MOUSE, SPEAKERS. 49,000/- |
| TOWN SHOW ROOM<br>#10-14, STANLEY RD, JAFFNA.<br>(முட்டாஸ் கடைச் சந்தி அருகில்)<br>021 222 2050, 0777570124. | #269E, PALALY ROAD,<br>KANTHARMADAM, JAFFNA.<br>(ஆலடிச் சந்தி அருகில்)<br>021 222 0388. |

LAPTOP அனைத்திற்கும் BAG HEAD PHONE, MOUSE FREE
கணினி, கணினி உதிரிப்பாகங்கள் அனைத்தையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (சி/11066)

**A/L 2015**
தொழில்நுட்பவியல் பாடநெறிகள்
* Engineering Technology
* Bio-Systems Technology
* Science for Technology
புதிய பிரிவுகள் ஆரம்பம்
15 வருட அனுபவம் வாய்ந்த பிரபல விரிவுரையாளர்களின் ஒன்றிணைந்த சேவையில்
பதிவுகளுக்கு முந்துங்கள்
Mind Vision
Technology CAMPUS
No-4, Clock Tower Lane, Jaffna.
077 933 93 53

**EASY SHAPPATHI**
ஆட்டாமா சப்பாத்தி
★ சிறியவர் முதல் பெரியவர் வரை விரும்பி உண்ணக் கூடியது
★ மிக இலகுவில் தயாரிக்கக் கூடியது (எவ்வித எண்ணெயும் பாவிக்கத் தேவையில்லை)
★ மிக விசேடமாக நீரிழிவு (சலரோகம்) கொலஸ்ரோல் மற்றும் உடல் ஆரோக்கியத்தைப் பேண விரும்புபவர்களுக்கான மிகச்சிறந்த சத்துணவு.
கிடைக்குமிடம்:
CITY MEDICALS (கொமர்ஷல் வங்கிக்கு அருகில்) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
VESTA (சத்திரச் சந்தி) 153, K.K.S. Road, Jaffna.
SHANTHY MEDICALS கத்தோலிக்க அச்சக்கூட கடைத்தொகுதி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
ஏக விநியோகஸ்தர்: J.JEEVA MIXTURERS
8, பிளர்ச்சஸ் ஒழுங்கை, (கண்டுக்குளி மகளிர் கல்லூரிக்குப் பின்புறம்)
கண்டுக்குளி யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 9867

**மலேசியா நாட்டில் உடன் வேலை**
பாதுகாப்பு உத்தியோகத்தர் - 2 (இலகுவான வேலை)
Office boy-1, Beautician-1,
House mate-1 பெண்
அதிஉயர் சம்பளம், 10 நாள்களில் பயணம்.
தொடர்புகளுக்கு: Lanka Voice
075 0650084
(35204) (10,6)

**அரசியல் விஞ்ஞானம் கருத்தரங்கு**
இலங்கையின் முன்னணி ஆசிரியர்
சி.அ.யோதிலிங்கம் & K.சுகாஷ்
28,29 ஆம் திகதிகளில் 1 - 4 P.M
◆ எதிர்பார்க்கை வினாக்கள்
◆ விடை எழுதும் முறை
◆ மாதிரிப் பரீட்சை
வெளி மாணவர்களும் பங்கேற்கலாம்
DCM யாழ்.நகர்
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

**BIT @ MIS கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தகவல் தொழினுட்பமாணி பட்டம்**
காலம் : 3 வருடங்கள்
தகைமை : A/L 3 pass அல்லது O/L + FIT
முதலாம் வருட முடிவில் - Diploma
இரண்டாம் வருட முடிவில் - Higher Diploma
மூன்றாம் வருட முடிவில் - BIT பட்டம்
* 12 years of experience in BIT Lecturing
* 100% Syllabus Cover + Lab Practical
* 5 years past papers for every subject
* Less payment + installation mode
* Highly equipped lab + MM projector
ஆரம்பம்
Semester 1 / 3 /5
Final year project
A/L 3 pass இல்லாதவர்களுக்கான FIT வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
BIT இணைப்பாளர் - MIS BIT Academy
74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்- பிரம்படி கொக்குவில் அருகாமை. TP : 0776577359

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.